

# வார்த்தைகளின் வலி தெரியாமல்

லறீனா அப்துல் ஹக்

# வார்த்தைகளின் வலிதெரியாமல்

ஆசிரியர்
லறீனா அப்துல் ஹக்

இலக்கியச்சோலை பதிப்பகம்
26, பேரக்ஸ் சாலை, பெரியமேடு
சென்னை-3.

## BIBLIOGRAPHICAL DATA

| | |
|---|---|
| *Name of the Book* | *: Varthaigazin Vazitheriyamal* |
| *Author* | *: Lareena Abdul Haq* |
| *Language* | *: Tamil* |
| *1st Edition* | *: May 2012* |
| *2nd Edition* | *: June 2013* |
| *Total Pages* | *: 109* |
| *Price* | *: Rs. 50* |
| *Publishers* | *: ILAKKIYACHOLAI Publication* |
| | *26, Barracks Road* |
| | *Periyamet* |
| | *Chennai - 600 003.* |
| | *Tel : +91 44 256 10 969* |
| | *Email : ilakkiyacholai@gmail.com* |

*© All Rights Reserved (Publishers)*

## உள்ளே...

பதிப்புரை .. 4

நூலாசிரியர் உரை .. 6

1. வாழ்வின் அனைத்துத் துறைகளிலும்... .. 9

2. அளவுக்கு மிஞ்சினால்... .. 16

3. கண்டிப்புக்கும் ஓர் எல்லையுண்டு .. 23

4. அடுத்தவர் முன்னிலையில்... .. 30

5.பிஞ்சில் பழுத்த பழம் .. 36

6. பாரபட்சம் காட்டலாமா? .. 43

7.பெண் கல்வியின் அவசியம் .. 51

8. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? .. 58

9. பாடாய்படுத்தும் காதல் .. 65

10. 'காதலுக்குக் கண்ணில்லை' .. 72

11. திருமணம் என்பது வெறும் சடங்கு அல்ல .. 78

12. திருமணம் பேசி முடிப்பது... .. 83

13. குழந்தைகள் எப்போதுமே குழந்தைகள் தானா? .. 88

14. விளையாட்டும் விபரீதமாகலாம் .. 94

15. தொலைபேசியா? தொல்லைபேசியா? .. 99

16. வேண்டாமே வில்லன் 'இமேஜ்'! .. 103

# பதிப்புரை

குழந்தைகள் வளர்ப்பு, சமூகவியல், குடும்பவியல், விஷயத்தில் அறிந்தும், அறியாமலும் அன்றாடம் நாம் தவறுகளைச் செய்து கொண்டிருக்கின்றோம். குறிப்பாக குழந்தைகள் வளர்ப்பு விஷயத்தில் நாம் சொல்வது, செய்வது தான் சரி என்று பிடிவாதமாக இருந்து கொண்டிருக்கின்றோம். நவீன காலத்தில் குழந்தைகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு ஏற்றவாறு பெற்றோர்களுடைய அணுகுமுறையில் மாற்றம் தேவை, அது இஸ்லாமிய வரைமுறைகளுக்குட்பட்டு இருக்கவேண்டும் என்பதைத்தான் பல நடைமுறை நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன. ஆக, இது தொடர்பான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என நீண்ட நாட்களாக நாம் ஆலோசித்து வந்தோம்.

அதுவும் மேற்சொன்ன இரண்டு விஷயங்களிலும் அதிகம் ஈடுபடும் அல்லது பங்களிக்கும் பெண்கள் மூலம் இந்தப் பணி செய்யப்பட வேண்டும், இதன் மூலம் முஸ்லிம் பெண்கள் கூண்டுக்குள் அடைக்கப்பட்டு கிடக்கின்றார்கள், நவீன காலத்தில் எத்துறையிலும் அவர்கள் ஜொலிப்பதில்லை என்ற வசைச் சொல்லையும் பொய்ப்பிக்க வேண்டும் என்பதையும் ஆலோசித்து வந்தோம்.

நம்முடைய எண்ணத்திற்கேற்றவாறு இப்பணிகளை நிறைவேற்றும் வண்ணம் இலங்கையைச் சேர்ந்த சகோதரி லறீனா அப்துல் ஹக் அவர்களின் அறிமுகம் நமக்குக் கிடைத்தது. அல்ஹம்துலில்லாஹ். கட்டுரையாளர் சகோதரி லறீனா அப்துல் ஹக் அவர்கள், இலங்கை பெரடேனியா பல்கலைக்கழகத்தில் தமிழ் பிரிவில் இளநிலை பட்டம் பெற்றவர். இலங்கை பெரடேனியா பல்கலைக் கழகத்தில் 6 வருட காலம் தமிழ் மற்றும் மொழிபெயர்ப்புத்துறையில் விரிவுரையாளராகப் பணிபுரிந்துள்ளார்.

இவர் - சே. கணேசலிங்கனின் நாவலில் பெண் பாத்திரங்கள் - ஒரு பெண் நிலை நோக்கு, மெளனத்தின் ஓசைகள் (ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள்), ஒரு தீப்பிழம்பும் சில அரும்புகளும், தமிழ் மொழியும் இலக்கியமும் - சில சிந்தனைகள், வீசுக புயலாய் (கவிதை), எருமை மாடும் துளசிச் செடியும் என ஆறு நூல்களை எழுதியுள்ளார்.

சிங்கள மொழியில் தமிழின் ஆதிக்கம் என்ற சிங்கள நூலை மொழி பெயர்த்துள்ளார். இது தவிர இரு இணையதள பத்திரிகைகளின் ஆசிரிய ராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் பணி புரிந்து வருவதுடன், சமூகப் பணியிலும் இலக்கியப் பணியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வருகின்றார்.

நாம் மேற்சொன்ன தேவைகளின் அடிப்படையில் கட்டுரைகள் தேவை என்றவுடன் 'விடியல் வெள்ளி' மாத இதழில் தொடராக எழுது வதற்கு சம்மதித்தார். நாம் அந்த கட்டுரைகளை வெளியிட துவங்கியது முதலே வாசகர்களின் அமோக வரவேற்பைப் பெற்றதுடன் அந்தத் தொடர்கள் ''நூலாக'' கொண்டு வரப்பட வேண்டும் என வாசகர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததன் அடிப்படையில் கட்டுரைகள் தொகுக் கப்பட்டு சற்று தாமதமாக நூலாக உருப் பெற்றுள்ளது.

ஒவ்வொரு தலைப்பிலும் ஆசிரியர் லறீனா அப்துல் ஹக் அவர்கள் நடைமுறை வாழ்வின் எதார்த்தங்கள், சமூக வாழ்வில் தனக்கு கிடைக் கப் பெற்ற அனுபவங்கள் மற்றும் படிப்பினைகளை வாசகர்கள் எளிமை யாக புரிந்து கொள்ளும் வண்ணம் பதிவு செய்துள்ளார்.

குழந்தை வளர்ப்பு, குடும்பவியல், சமூகவியலில் மாற்றம் தேவை, அவை மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டும் என்ற சிந்தனைக்கு இச்சிறி ய நூல் ஒரு வழிகாட்டியாக இருக்கும் என்ற சிந்தனையில் வெளியிடு கின்றோம். பல பணிச்சுமைகளுக்கு மத்தியில் தனது நேரத்தை ஒதுக்கி கட்டுரைகளை எழுதிக் கொடுத்த சகோதரி லறீனா அப்துல் ஹக் அவர்க ளுக்கு இலக்கியச் சோலை சாரிடபிள் டிரஸ்ட் சார்பாக நன்றியினையும், அல்லாஹ் அவருக்கு நேரம் மற்றும் ஆரோக்கியத்தில் அபிவிருத்தியை யும் வழங்கிடுவானாக என்றும் பிரார்த்திக்கின்றோம்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. குறைகள் எங் களைச்சாரும் நிறைகள் எல்லாம் நிறைந்த இறைவனைச் சாரும்.

இவண்
மு.முஹம்மத் இஸ்மாயீல்
காப்பாளர்
இலக்கியச் சோலை சாரிடபிள் டிரஸ்ட்

# நூலாசிரியர் உரை

## உன்னதவாழ்வினை அழகுறத்துய்ப்பதற்காய்...

வார்த்தைகளின் வலிதெரியாமல் என்ற இந்நூலின் இரண்டாம் பதிப்பின் மூலம் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஒவ்வொருவருக்கும் தத்தமது வாழ்க்கையும் அதன் பொருட்டு தாம் பெற்றுள்ள வளங்களும் அல்லாஹ் தந்துள்ள அமானிதங்களே என்ற உணர்வு மிகமுக்கியமானது. அத்தகைய உணர்வே பொறுப்புக்களைச் சரிவரச் செய்வதற்கும், பிறர் உரிமையை, பொருளை மோசடி செய்வதில் இருந்து தவிர்ந்துகொள்வதற்கும், வாழும் காலத்தை அர்த்தமுள்ளதாக்குவதற்கும் உந்துசக்தியை வழங்கும்.

சமூக அமைப்பின் மிகச் சிறிய அலகான (Unit) குடும்ப அமைப்பை உறுதியாகப் பேணுவதில் இஸ்லாம் அதிகக் கரிசனை கொண்டுள்ளது. ஏனென்றால், தனிமனித உருவாக்கத்தின் ஊடான சமூக உருவாக்கம் அங்குதான் ஆரம்பிக்கின்றது. எனவேதான் அதனைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒரு முக்கியமான பணியாக இஸ்லாம் கருதுகின்றது.

குடும்பம் என்பது ஓர் அழகான, உன்னதமான அமைப்பு. அதன் அங்கத்தவர்களுக்கு இடையிலான அன்பும் நம்பிக்கையும் பரஸ்பரப் புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பும் அர்ப்பணிப்புமே அந்த அழகையும் உன்னதத்தையும் கட்டியெழுப்பும் தூண்களாக அமையும். அக்குடும்பத்தை அவ்வாறு கட்டியெழுப்புவது அதன் அங்கத்தவர்கள் ஒவ்வொருவர்மீதும் உள்ள மாபெரும் கடமையாகும். அந்த வகையில், நாளைய பிரஜையை உருவாக்கும் ஒரு தாயும் தந்தையும் தமது குழந்தைகள் உடல், உளரீதியாக வளர்ச்சி அடைவதற்கும், ஆரோக்கியமாக வாழ்வதற்கும், அவர்களின் அறிவும் ஆற்றலும் ஆளுமையும்

விருத்தி அடைவதற்கும் தம்மாலான சகல முயற்சிகளையும் மேற் கொள்ளவேண்டும். இந்நிலையில் மிக அற்பமானவை என்று நாம் அலட்சியப் படுத்தும் சின்னச் சின்ன விடயங்கள் பற்றிக் கூட நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக நாம் நமது வார்த் தைப் பிரயோகங்கள், அன்றாடச் செயற்பாடுகள் முதலான ஒவ்வொன் றிலும் மிகுந்த விழிப்புணர்வோடு செயற்பட வேண்டும். என்றாலும், நம்மில் பெரும்பாலானோர் இது குறித்து அவ்வளவாய் அலட்டிக் கொள்வதில்லை. அதன் காரணமாக எதிர்காலத்தில் எதிர்மறைவிளை வுகள் ஏற்படும் போது நாம் அதனையிட்டுக் கைசேதப்படுகின்றோம்; மிகுந்த துக்கத்தில் ஆழ்கின்றோம். இந்த நிலைமை மிகப் பரிதாபகர மானது என்பதோடு மாற்றியமைக்கப்பட வேண்டியதும் கூட!

அந்த மாற்றத்தை நோக்கிய பயணத்தில் பெற்றோராகிய நமது கட மையும் பொறுப்பும் என்ன என்பதையும், நமது மனப்பாங்கும் வார்த் தைகளும் செயற்பாடுகளும் எப்படி அடுத்த தலைமுறையை வடிவ மைப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதையும் உணர்த்தும் வகையில் இந்த நூல் அமைந்துள்ளதாய் நம்புகின்றேன். அல்லாஹு தஆலா எனக்கு அமானிதமாகத் தந்துள்ள அறிவையும், ஆற்றலை யும் சமூகமேம்பாட்டுக்காகப் பயன்படுத்துவது என்னுடய கடமை என்ற எண்ணத்தில் எழுந்த இந்த எழுத்துக்கள் மூலம் ஒரு சிலருக்கா வது பயன்கிடைக்குமானால், அதுவே இந்த எழுத்துக்குக் கிடைத்த வெற்றியும் பேறும் என்று அகம் மகிழ்வேன்.

விடியல் வெள்ளியில் தொடராக வெளிவந்து, தற்போது இரண்டா வது பதிப்பாகவும் நூலுருப்பெறும் எனது இந்த நூலில் இடம் பெற் றுள்ள கட்டுரைகளை எழுதக்காரணமான அருமைச் சகோதரர் முஹம் மது ஃபைஸல் (தம்மாம்), இந்திய வாசகர்களுக்கு ஏற்றவகையில் அதன் எழுத்து நடையை மாற்றியமைப்பது தொடர்பில் என்னை நெறிப்படுத்திய என் அன்புச் சகோதரர் அப்துர்ரஹ்மான் (திருவிதாங் கோடு), விடியலின் ஆசிரியர் சகோ. முகம்மது இஸ்மாயில் ஆகியோ ருக்கும், இலக்கியச் சோலைக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் .

மிக்க அன்புடன்
உங்கள் சகோதரி,
லறீனா அப்துல் ஹக்.

1

# வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் நம்மை நாமே சீர்திருத்திக் கொள்வோம்

**வ**லி என்ற சொல்லுக்கு இருவேறு அர்த்தங்கள் கொள்ள லாம். ஒன்று வலிமை, பலம், சக்தி என்ற கருத்துக்களை உடை யது; மற்றது, வருத்தம், நோவினை, வேதனை முதலான கருத் துக்களைத் தருவது. நமது எண்ணங்களை வெளிப்படுத்தும் போதும், கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் போதும் நாம் பயன்படுத்தும் வார்த்தைகளின் மூலம் இந்த இரண்டு வகை யான விளைவுகளும் ஏற்படலாம் என்பது பற்றி நம்மில் பலர்அக்கறை கொள்ளத் தவறிவிடுகின்றோம். குடும்ப உறவு, சமூக உறவு ஆகிய இரண்டு தளங்களிலும் வார்த்தைகளின் தாக்கம் பாரியது என்பதை நாம் ஆழமாகப் புரிந்து கொண் டால், குடும்பத்திலும் சமூகத்திலும் தேவையற்ற மனக்கசப்பு கள், பிளவுகள், பிரிவினைகள் தோன்றுவதைப் பெரிதும் தவிர்த் துக் கொள்வதோடு, சுமூகமானதும் மகிழ்ச்சிகரமானதுமான சூழலைக் கட்டியெழுப்புவதும் சாத்தியப்படும்.

மேலும், தூரநோக்குடனும் சிறந்த நெறிப்படுத்தலுடனும் பிரயோகிக்கப்படும் வார்த்தைகளின் வலிமையால் உலக சரித் திரம் பல்வேறு திருப்புமுனைகளைச் சந்தித்துள்ளது என்பதை யும் நாம் மறந்துவிடக்கூடாது. முதலாம் உலகப் போருக்குப் பின்னர் சீரழிந்து போய்க் கிடந்த ஜெர்மனியை தனது நாவன்

மையால் மீண்டும் ஒரு சக்திவாய்ந்த தேசமாகக் கட்டியெழுப்பிய ஹிட்லர், அமெரிக்காவின் கறுப்பின மக்களின் விடுதலையை முன்னெடுத்துச் சென்ற மார்டின் லூதர் கிங், பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராய் இந்திய மக்களை அணிதிரளச் செய்த மகாத்மா காந்தி, முஸ்லிம்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பி எழுச்சியுறச் செய்த அல்லாமா இக்பால், ஹஸனுல் பன்னா, மௌலானா மவ்தூதி... என்று நீண்டு செல்லும் பட்டியல், வார்த்தைகளின் நேர்த்தியான கையாட்சியின் விளைவினால் தோற்றுவிக்கப்பட்ட எழுச்சிமிக்க வரலாற்றுக்கு சான்று கூறுகின்றது என்றால் மிகையல்ல.

எனவே, செம்மையான மனித நடத்தையைக் கட்டியெழுப்புவதிலும் உன்னதமானதொரு சமூகத்தினை உருவாக்குவதிலும் சிறந்த முன்மாதிரிகளைக் காட்டித் தருகின்ற மார்க்கமான இஸ்லாம், வார்த்தையாடல்களிலும் உயர் பண்பாடு பேணப்பட வேண்டும் என்பதில் அதிகக் அக்கறை காட்டுகின்றது. இதன் முக்கியத்துவத்தைக் கருதியே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு வலியுறுத்தினார்கள்:

எவருடைய நாவு, கையின் தொல்லைகளிலிருந்து ''பிற முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெறுகிறார்களோ, அவரே முஸ்லிமாவார். மேலும், அல்லாஹ்வால் தடுக்கப்பட்டவற்றை விட்டு ஒதுங்கியவரே முஹாஜிர் எனும் துறந்தவராவார்'' என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி) அறிவித்துள்ளார்கள்.

*ஸஹீஹ் புகாரி. ஹதீஸ் எண்:10*

திருக் குர்ஆனிலே,

''(நபியே!) உம் இறைவனின் பாதையில் (மக்களை) விவேகத்துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக! இன்னும், அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக! மெய்யாக உம் இறைவன், அவன் வழியை விட்டுத் தவறியவர்களையும் (அவன் வழியைச் சார்ந்து) நேர்வழி பெற்றவர்களையும் நன்கு அறிவான்.''

*(16:125)*

என்று அல்லாஹ் கட்டளையிடுகின்றான். இதன்மூலம், தர்க்கம் செய்வதாகவே இருந்தாலும்கூட அதில் அழகானமுறை, அழகான வார்த்தைகள் கையாளப்பட வேண்டும் என்பதே இஸ்லாத்தின் வழிகாட்டல் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

எனவே, பிறருக்கு வலியையும் வேதனையும் தரக்கூடிய வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்ப்பதானது ஈமானுக்கு மிக நெருக்கமானதாகும். பிறரை இஸ்லாத்தின்பால் ஈர்ப்பதற்கும், பரஸ்பர நேசத்தையும் புரிந்துணர்வையும் கட்டியெழுப்புவதற்கும், தன்னம்பிக்கை, கொள்கையில் உறுதி முதலான இன்னோரன்ன நற்பண்புகளை விருத்தியடையச்

செய்வதற்கும் வார்த்தையாடல்கள் மிக அடிப்படையான அம்சமாகத் திகழ்கின்றன.

அன்றாடம் நாம் வீட்டிலும் வெளியிலும் ஏராளமான வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றோம். அவற்றை காலம், இடம், பொருள், ஏவல் என்பவற்றுக்கு ஏற்பவே பயன்படுத்த வேண்டும் என்ற அடிப்படை அறிவு நம்மிடம் இருக்கின்றதுதான்; என்றபோதிலும் எல்லா நேரமும் நம்மால் அதனை நடைமுறைப்படுத்த முடிவதில்லை. உணர்ச்சிவசப்படுதல் முதலான மனிதப் பலவீனங்கள் நம்மை ஆட்கொள்ளும்போது நாம் சிலவேளைகளில் தவறிழைத்து விடவும்கூடும். இதையெல்லாம் கருத்திற்கொண்டுதான் அல்குர்ஆன் மனிதனை அறிவுறுத்தும் வகையில், நெறிப்படுத்தும் விதத்தில்,

''(நபியே!) என் அடியார்களுக்கு அவர்கள் அழகியதையே சொல்ல வேண்டும் என்று கூறுவீராக! நிச்சயமாக ஷைத்தான் அவர்களுக்கிடையில் (தீயதைத் தூண்டி) விஷமஞ் செய்வான்; நிச்சயமாக ஷைத்தான் மனிதனுக்குப் பகிரங்கமான பகைவனாக இருக்கின்றான்.''

*(17:53)*

என்று அறிவுறுத்துகின்றது. அதுமட்டுமின்றி,

''தம் இரண்டு தாடைகளுக்கு இடையே உள்ளத(ான நாவி)ற்கும், தம் இரண்டு கால்களுக்கு இடையே உள்ளத(ான மர்ம உறுப்பி)ற்கும் என்னிடம் உத்தரவாதம் அளிப்பவருக்கு நான் சொர்க்கத்தில் உத்தரவாதம் அளிக்கின்றேன்'' என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸஹ்ல் இப்னு ஸஅத் (ரழி) அறிவித்துள்ளார்கள்.

*ஸஹீஹ் புகாரி. ஹதீஸ் என்: 6474*

என்ற ஹதீஸின் மூலம் நாவைப் பேணி வாழும் ஒருவருக்கு சுவனத்தைப் பற்றி உறுதியான நன்மாராயம் கூறப்படுகின்றது.

இஸ்லாத்தின் இத்தகைய போதனைகளின் ஊடாக உரையாடும் போது நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கையும், அவ்வாறு இருக்குமிடத்து அல்லாஹ்வின் திருப்தியும் சுவனவாழ்வும் கிடைக்கும் என்ற நற்செய்தியும் தரப்படுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்கின்றோம்.

எனினும், நாம் இதனை வெறுமனே பிறருடனான சொல்லாடல்களுடன் மட்டும் தொடர்புடையதாகவே எண்ணிக் கொண்டிருக்கிறோம். எனவேதான், நம்மில் அனேகர் பிறருடனான சமூக ஊடாட்டத்தின்போது தமது வார்த்தையாடல்கள் குறித்து ஓரளவு கவனமாக இருந்தாலும், தனது வீட்டுக்குள், தனது குடும்பத்தினர் மத்தியில் இதனையிட்டு அவ்வளாக அலட்டிக் கொள்வதில்லை. இது மிகத் தவறானது.

அந்த அலட்சியப் போக்கின் பாரதூரம் எத்தகையது என்பதை நாம் உணராததே இதற்குக் காரணமாகும்.

இஸ்லாம் தனது சீரான பயணத்தைக் குடும்ப அலகில் (Unit) தொடங்கி சமூகம், அரசு என்ற விரிந்த தளம் நோக்கிச் செல்வதைத் தனது ஒழுங்காகக் கொண்டுள்ளது. பிற சிந்தனைகள் குடும்பக் கட்டமைப்பைத் (Family Structure) தகர்ப்பதே சிறந்தது என்று வாதிடும் வேளையில், இஸ்லாம் குடும்பக் கட்டமைப்பைப் பேணுவதில் மிகக் கச்சிதமான, நேர்த்தியான சட்டதிட்டங்களையும், ஒழுங்குமுறைகளையும் வடிவமைத்துள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

இந்நிலையில், 'என்னுடைய குடும்பம்தானே! நான் எப்படி வேண்டுமானாலும் பேசலாம்; பழகலாம்; நடந்து கொள்ளலாம்' என்ற மனப்பாங்கு இஸ்லாத்தின் பார்வையில் ஒருபோதும் சரியானதாக அமைந்து விடாது. எனவே, குடும்ப வாழ்வில் நமது வலிமை வாய்ந்த வார்த்தையாடல்களால் எப்படி வலி களைந்து, சிறப்பான உறவினைக் கட்டியெழுப்பலாம், ஆரோக்கியமான மனநிலையைத் தோற்றுவிக்கலாம், அதனூடே ஆரோக்கியமான அடைவுகளை நோக்கி நமது வருங்கால சந்ததியை வழிநடத்தலாம் என்றெல்லாம் சிந்திப்பது மிகுந்த பயன்தரும் என்பதில் ஐயமில்லை.

இனி, நமது அன்றாட குடும்ப வாழ்வில் வார்த்தைகளின் வலிமையை உணராமலும், அதனால் விளையத்தக்க வலியினை... விளைவுகளை... புரிந்து கொள்ளாமலும் இருக்கும் சந்தர்ப்பங்கள் குறித்து ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

**காற்றில் கரைந்திடும் வாக்குறுதிகள்...**

''நீ இந்தமுறை பரீட்சையில் அதிக மதிப்பெண்களைப் பெற்றால், உனக்கொரு சைக்கிள் வாங்கித் தருவேன்'' என்கின்றார் தந்தை. அதை நம்பி மகிழ்ச்சியோடும் எதிர்பார்ப்போடும் இடைவிடாது படித்து, அவர் சொன்னபடியே அதிக மதிப்பெண்களைப் பெறுகிறான் பையன். அதன் பின்னர், தனது வாக்குறுதியை நிறைவேற்றாமல், ''அது நான் சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். நீ நன்றாகப் படித்து அதிக மதிப்பெண் வாங்கினால் உன் எதிர்காலத்துக்குத்தானே நல்லது? இருக்கிற கஷ்டத்தில் உன்னைப் பள்ளிக்கூடம் அனுப்பவே நான் இந்தப்பாடு படுகிறேன். இதில் சைக்கிளுக்கு நான் எங்கே போவேன்? இந்தா ரெண்டு ரூபாய். எடுத்துட்டுப்போய் சாக்லேட் வாங்கிச் சாப்பிடு'' என்று சொல்கிறார் என வைத்துக் கொள்வோம். இதன் விளைவு என்னவாக இருக்கும்?

மேலோட்டமாகப் பார்க்கும்போது, அந்தப் பையனின் மனம் ஏமாற்றத்தால் மிகுந்த வேதனை அடையும் என்று மட்டும்தான் நமக்குத்

தோன்றுகிறது. அந்தப் பையனின் மீது மட்டுமின்றி, அந்த ஏழைத் தந்தையின் மீதும் நமக்குப் பரிதாபம் எழலாம். ஆனால், இதன் விளைவு நாம் கருதுவதுபோல் மிகச் சாதாரணமானதல்ல.

இதைப் போல தனது குழந்தையை ஊக்குவிக்கும் நோக்கிலோ அல்லது அடம்பிடித்து அழும் குழந்தையை அப்போதைக்குச் சமாதானப் படுத்தும் நோக்கிலோ அனேகமான தாய் தந்தையர், ''இதை வாங்கித் தருகிறேன், அதை வாங்கித் தருகிறேன்'' என்றெல்லாம் சொல்லிவிட்டு பின்னர் அதையெல்லாம் அப்படியே மறந்துவிடுகின்றார்கள். இது அந்தக் குழந்தைகளின் மனதில் எத்தகைய எதிர்விளைவைத் தோற்றுவிக்கின்றது என்று சற்று ஆழமாக நோக்குவோம்.

தனது தந்தையின், தாயின் இத்தகைய செயல்பாடுகள் தம்மையறியாமல் குழந்தையின் மனதில் பின்வரும் கருத்துக்களை விதைத்துவிடுகின்றன.

*1. சந்தர்ப்பத்துக்கு ஏற்ப, பிரச்சினையில் இருந்து தப்பிக் கொள்ள, ஏதேனும் காரணத்துக்காக பொய் சொல்வதில் தப்பில்லை.*

*2. வாக்குறுதி கொடுத்தால் அதை நிறைவேற்ற வேண்டும் என்பது கட்டாயமில்லை.*

*3. ஏதேனும் தேவைக்காகப் பிறரை ஏமாற்றுவதில் தப்பில்லை.*

இத்தகைய மனப்பதிவு, குழந்தை வளர வளர அதன் உள்ளத்தில் ஆழ வேரூன்றிவிட்டால் அதன் விளைவு என்ன என்பதை சொல்லவே வேண்டியதில்லை. ''நிஃபாக் எனும் நயவஞ்சகத்தனம்'' இங்கிருந்துதான் முளைவிட ஆரம்பிக்கின்றது என்ற அதிர்ச்சிதரும் உண்மை இதற்குள் புதைந்திருக்கிறது என்பதை பெற்றோர்களாகிய நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில், நயவஞ்சகனின் பண்புகள் பற்றி பின்வரும் இரண்டு நபிமொழிகள் தெளிவுபடுத்துகின்றன:

''நயவஞ்சகனின் அறிகுறிகள் மூன்று. பேசினால் பொய்யே பேசுவான்; வாக்களித்தால் மீறுவான்; நம்பினால் துரோகம் செய்வான்'' என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஹுரைரா (ரழி) அறிவித்துள்ளார்கள்.

*ஸஹீஹ் புகாரி. ஹதீஸ் எண்: 33,*

''நான்கு பண்புகள் எவனிடம் உள்ளனவோ, அவன் வடிகட்டிய முனாஃபிக் ஆவான். அவற்றில் ஏதேனும் ஒன்று யாரிடமேனும் இருந்தால் அதை விட்டொழிக்கும் வரை நயவஞ்சகத்தின் ஒரு பண்பு அவனிடம் இருந்துகொண்டே இருக்கும். நம்பினால் துரோகம் செய்வான். பேசினால் பொய்யே பேசுவான். ஒப்பந்தம் செய்தால் மீறுவான். விவாதம் புரிந்தால் நேர்மை தவறிப் பேசுவான்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி) அறிவித்துள்ளார்கள்.

*ஸஹீஹ் புகாரி. ஹதீஸ் எண்: 34.*

எனவே, ஒரு நயவஞ்சகனுக்குரிய இத்தகைய பண்புகள் நம்முடைய குழந்தைகளிடம் ஊன்றி வளர்வதற்கு நம்மையறியாமலேயே நாம் காரணமாகிவிடக் கூடாதல்லவா?

மேலோட்டமாகப் பார்த்தால் வெறுமனே சில வார்த்தைகள்தாம். அவற்றை பிறகு மீறிவிடும் போது சம்பந்தப்பட்டவருக்குத், ''தான் ஏமாற்றப்பட்டோம்' என்ற உணர்வினால் வலி, மனவேதனை ஏற்படுகின்றது என்பதையும் தாண்டி, அந்த வார்த்தைகளின் எதிர்விளைவுகள் எவ்வளவு வலிமையானவை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

''சமூகத்தில் இன்று மனிதர்கள் வாக்கு மீறுவதை சர்வசாதரணமாகச் செய்கின்றார்கள். அதுவும் ஓர் அமானிதம்தான் என்பதை உணர்கிறார்கள் இல்லை'' என்றெல்லாம் புலம்பும் நாம், அந்த விஷ விருட்சத்தின் வித்து வீட்டுக்குள் அதாவது, குடும்பத்திற்குள் இருந்து இடப்படுகின்றது என்பதையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

எனவே, ''சின்னக் குழந்தைக்கு என்ன தெரியப் போகிறது!'' என்று தப்புக் கணக்குப் போட்டு, இதன் எதிர்விளைவை துல்லியமாகக் கணிப்பதில் நாம் தவறிழைத்துவிடக் கூடாது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் குழந்தைகளுக்கு வாக்குறுதிகள் வழங்குமுன் ஒருகணம் அதைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பது நமது கடமை. ''இப்படிச் சொன்னால், அதனை நம்மால் நிறைவேற்ற முடியுமா? இன்ன பொருளை வாங்குவதற்கு நமது பொருளாதார நிலை இடங்கொடுக்குமா?'' இப்படியெல்லாம் சிந்தித்துத் தீர்மானிப்பது மிக முக்கியமாகும்.

வாக்குறுதியொன்றை வழங்கும்போது, அது நிறைவேற்றக்கூடியதா என்பதை முன்கூட்டியே தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறே, வழங்கிவிட்டபின் அதனைக் கண்டிப்பாக நிறைவேற்றியே தீர வேண்டும் என்பதில் நாம் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும். பெற்றோர் என்ற வகையில் நாம் காட்டும் இந்த முன்மாதிரி, நல்லதோர் பரம்பரையை சமூகத்துக்குப் பெற்றுக் கொடுக்கும் என்பதோடு, இன்ஷா அல்லாஹ் மரணத்தின் பின்பும் நமக்கு நன்மைகள் வந்தவண்ணம் இருப்பதற்குரிய வழியாகவும் அமைந்துவிடும். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு மொழிந்துள்ளார்கள்:

''மனிதன் இறந்துவிடும்போது அவனது செயலும் முடிவடைந்துவிடுகின்றது. ஆனால் மூன்றைத் தவிர.

ஒன்று தொடர்ந்து நீடித்துப் பயன்தரும் நிலையான தர்மம். இரண்டாவது, மக்கள் பயனடையக்கூடிய கல்வி. மூன்றாவது, அவனுக்காக துஆச் செய்யும் ஸாலிஹான பிள்ளை.

*அறிவிப்பவர்: அபூதாவூத், நூல்: முஸ்லிம், ஹதீஸ் எண்: 1631*

அல்லாஹ் தஆலா தன் அல்குர்ஆனில்,

''நிச்சயமாக உங்கள் செல்வமும், உங்கள் குழந்தைகளும் (உங்களுக்குச்) சோதனையாக இருக்கின்றன; நிச்சயமாக அல்லாஹ்விடத்தில்தான் மிகவும் உயர்ந்த நற்கூலி உண்டு என்பதை நீங்கள் நன்கு அறிந்து கொள்ளுங்கள்.'' என்று நம்மை எச்சரித்துள்ளான்.

ஆகவே, ஒரே நேரத்தில் அல்லாஹ்வின் அருளாகவும் சோதனைப் பொருளாகவும் அமைந்துள்ள நமது குழந்தைகளுடனான வார்த்தையாடல்களிலும் நாம் கவனமாகவே இருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை அல்லவா?

2

# அளவுக்கு மிஞ்சினால்...

**பெ**ற்றோர்களாகிய நாம் நம்முடைய குழந்தைகளிடம் வாக்குறுதியளித்தால் அதனைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டியதன் இன்றியமையாமை குறித்து கடந்த பகுதியில் பார்த்தோம். இனி...

அன்பும் சரி கண்டிப்பும்சரி அளவோடு இருக்கும்வரை தான் நல்ல விளைவுகளைத் தரும். மாறாக, அளவுகடந்து விட்டால் மோசமான எதிர் விளைவுகளை ஏற்படுத்திவிடும். அல்லாஹு தஆலா நம் கரங்களில் அமானிதமாக ஒப்படைத்துள்ள குழந்தைகளை நல்லமுறையில் வளர்த்து ஆளாக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு பெற்றோராகிய நமக்கு உள்ளது. எனவே குழந்தைகள் விசயத்தில் நாம் நிதானமாகவும், சமயோசிதமாகவும் செயல்பட வேண்டும். குறிப்பாக, தாய்மாரின் பங்களிப்பு இதில் மகத்தானதாகும். ஒரு தாய் தன் குழந்தையிடம் எப்படி நடந்துகொள்கின்றாள் என்பதைப் பொறுத்தே பெரும்பாலான குழந்தைகளின் உளவியல் மற்றும் நடத்தை வடிவமைக்கப்படுகின்றன என்றால் அது மிகையல்ல.

எந்தத் தாயுமே தன் குழந்தைமீது அளவிட முடியாத பாசத்தைப் பொழிவாள்; கண்ணுக்குள் வைத்துப் பொத்தி வளர்ப்பாள். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு அல்லவா?! எனவேதான் தாய்மையுணர்வும், தாயின் தன்னலமற்ற பாசமும் தியாகமும் மிக உன்னதமான ஸ்தானத்தில் வைத்துப் போற்றப் படுகின்றன.

ஒரு தாய் தன் குழந்தை மீது அன்புவைப்பதோ பாசத்தைப் பொழிவதோ இயற்கையானதே! ஆனால், அதுவே அளவுகடந்துவிட்டால் விளைவு பாரதூரமானது என்பதில் ஐயமில்லை.

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே - அது நல்லவனாவதும், தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே'' என்ற கவிஞனின் வார்த்தைகளில் உள்ள யதார்த்தத்தை தாய்மார்களாகிய நாம் சில சமயங்களில் மறந்துவிடுகின்றோம்; குழந்தைமீது பாசத்தைக் காட்டுவதாக நினைத்து நாம் செய்யும் சில காரியங்களால் அவர்களின் எதிர் கால நல்வாழ்வு சீர்குலைந்து போவதற்கு நம்மையறியாமலேயே காரணமாகி விடுகின்றோம். அத்தகைய சந்தர்ப்பங்கள் எவை என்று சற்று நோக்குவோம்.

**''என் பிள்ளை தவறு செய்யவேமாட்டான்''**

'பிள்ளைகள் எல்லோரும் ஒன்றுகூடி விளையாடப் போய்விட்டார்கள். அப்பாடா! சற்று நிம்மதி' என்று ஆசுவாசத்தோடு இருக்கையில் கதவு தட்டப்படுகின்றது. திறந்து பார்த்தால் முகத்தில் ரத்தம் வழிய ஒரு குழந்தையோடு எதிர்வீட்டுக்காரர் நிற்கிறார். கூடவே தன் மகனும் திருதிருவென்று விழித்தபடி நிற்கின்றான். ''இதோ பாருங்க உங்க பிள்ளை பண்ணின அடாவடித்தனத்தை ரத்தம் வருமளவுக்கு என்னா மாதிரி முரட்டுத்தனமா அடிச்சிருக்கான் பாருங்க!'' அந்தத் தந்தை தவிப்போடும் ஆத்திரத்தோடும் முறையிடுகின்றார். உடனே, ''எம்பையனா அடிச்சான்? இருக்காதே! அவன் ரொம்ப அப்பாவிங்க... அதட்டிப் பேசினாலே அழுதுடுவான்... இது வேறு யாரோ செஞ்ச வேலையா இருக்கும். அநியாயமா எம்பையன் தலையில் வந்து விழுந்திருக்கு'' என்று அந்தத் தாய் எந்த வித விசாரணையுமின்றி சப்பைக்கட்டுகின்றார்.

''இல்லைங்க, விளையாடிக்கிட்டிருந்த எல்லாப் பசங்களும் தெளிவாகச் சொல்றாங்க... உங்க பையன்தான்...'' அவர் திகைப்போடு சொல்கின்றார். ''என்னங்க நீங்க மறுபடி மறுபடி அதே பல்லவியையே பாடுறீங்க...? நான்தான் ரொம்பத் தெளிவா சொல்லுறேனில்ல, எம்பையன் அப்படிப்பட்ட முரடன் கிடையாது, ரொம்பவும் சாதுப்பிள்ளைன்னு... எனக்குத் தெரியாதா எம்பையனப் பத்தி... ஏதோ சும்மா பழைய கோப தாபத்தையெல்லாம் மனசுல வெச்சுக்கிட்டு எம்பையன்மேல் பழி போடாதீங்க, ஆமா! நீவாடா ராஜா! இதுக்குத்தான் இந்தமாதிரி பசங்க கூட விளையாடப் போகாதேன்னு படிச்சுப்படிச்சுச் சொன்னேன், கேட்டியா? இப்போ பாரு எந்தப் பாவியோ செஞ்ச படுபாவித்தனமெல்லாம் அநியாயமா உன் தலையில் வந்து விழுது...'' என்றவாறு கதவை அடித்துச் சாத்துகின்றார்.

தன் பிள்ளைமீது வைத்துள்ள கண்மூடித்தனமான பாசமே அந்தத்

தாயை அப்படிப் பேசவைக்கின்றது. குறைந்த பட்சம், "நீ இதைச் செய் தாயா?" என்ற விசாரணைக்கே இடமின்றி, தன் பிள்ளை ஒருபோதும் பிழையே செய்ய மாட்டான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில், மறுபேச்சுக்கே இடமின்றி, முறையிட வந்தவரையே அதட்டித் திருப்பிய னுப்பவும், இன்னும் ஒருபடி மேலே போய் கணவன் வீடு வந்ததும் தன் மகன் மீது அநியாயப் பழிசுமத்தியதாகக் கூறி அந்த எதிர் வீட்டுக்கார ரோடு சண்டையிடத் தூண்டுவதுமாக அந்தத் தாய் தன் பிள்ளைக்குப் பக் கபலமாக இருப்பதாக நினைத்து மிகப்பெரும் தவறிழைக்கின்றார்.

சமூகத்தில் இந்த மாதிரியான சம்பவங்களை நாம் ஆங்காங்கே காணக்கூடியதாக இருக்கின்றது. சில வீடுகளில் தவறுசெய்த பிள்ளை யைத் தந்தையோ வேறு மூத்தவர்களோ கண்டிக்கும் போதும் தண்டிக் கும்போதும் தாய்மார் குறுக்கிட்டு, "ஊருலகத்துல எந்தப் பிள்ளையும் செய்யாததையா எம்புள்ளை செஞ்சுட்டான்?" என்று அந்தப் பிள்ளை செய்த தவறுக்குச் சாதகமாக வக்காலத்து வாங்குவார்கள். சில தாய்மார் கள் பிள்ளை செய்த தவறைத் தாமும் கண்டிக்காமல் விட்டுவிடுவ தோடு, அதுபற்றி தந்தைமார் அறிந்தால் அடிவிழுமே என்று பச்சாதா பப்பட்டு அதனை மறைத்தும்விடுவார்கள். 'பிள்ளைகள் தவறு செய்யும் போது திருத்துவதும் தண்டிப்பதும் அவர்களின் எதிர்கால நலனைக்கரு தியே; மாறாக, அவர்கள் மீது அன்பில்லாததால் அல்ல' என்பதைத் தாய் மாராகிய நாம் உணரவேண்டும். அவ்வாறில்லாமல், குழந்தைகள்மீது அன்புகாட்டுவதாக எண்ணிக்கொண்டு அவர்கள் செய்யும் தவறுகளைச் சரிகாண்பதாலும், அவற்றை அலட்சியப்படுத்தி விட்டுவிடுவதாலும் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகள் என்ன?

குறித்த பிள்ளையின் மனதில், 'தான் எந்தப் பிழை செய்தாலும் தனது தாய் தனக்குச் சாதகமாகப் பேசுவார், எனவே எதைவேண்டுமானாலும் செய்வதற்குத் தடையில்லை' என்ற தைரியம் தோன்றிவிடும். 'தாயின் அளவு கடந்த கண்மூடித்தனமான பாசம்' என்ற பலவீனத்தைத் தனக் குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் குறுக்குச் சிந்தனை தலைதூக் கும். தான் ஏதாவது தவறுசெய்துவிட்ட நிலையிலும் தன்தாயின்முன் வந்து பரிதாபமாக நின்று, 'தான் அப்படிச் செய்யவே இல்லை' என்று பொய்சொல்லிச் சாதிக்கவும், அதற்காகப் பொய் சத்தியம் செய்யவும் அந்தப் பிள்ளை தயங்காது. எனவே, பொய் கூறல், பொய்ச்சத்தியம் செய்தல், தான் செய்த தவறை அடுத்தவர் தலையில் போட்டு வீண்பழி சுமத்துதல் முதலான இழிவான பழக்கவழக்கங்கள் அந்தப் பிள்ளையி டம் வளர்வதற்கு தாய்மாரின் கண்மூடித்தனமான பாசமே காரணமாக அமைந்துவிடுகின்றது.

அது மட்டுமன்றி, தனது நடவடிக்கைகள் தொடர்பில் தாயின் செல் வாக்கே வீட்டில் மேலோங்கி நிற்கின்றது, தாயின் சொல்லைத் தாண்டி

தந்தை செல்வதில்லை என்பதைக் காண நேர்வதால் தந்தையை மதிக் காத போக்கும் முளைவிட ஆரம்பிக்கின்றது. இதனடியாகப் பெரியவர் களை மதிக்காத பண்பும் அப்பிள்ளையிடம் தோன்றும்.

ஆக மொத்தத்தில், மனித நடத்தையில் எவையெல்லாம் நல்ல பழக்க வழக்கங்கள் என்று கருதப்படுகின்றனவோ அவற்றில் அனேக மானவை தமது பிள்ளைகளிடம் இருந்து மறைந்து போவதற்கு தாய் மாரின் தூரநோக்கற்ற நடவடிக்கைகள் காரணமாக அமைந்துவிடும் என் பதையிட்டு தாய்மார்களாகிய நாம் மிகக் கவனமாகவும் எச்சரிக்கையோ டும் இருத்தல் இன்றியமையாததாகும்.

நமது குழந்தைகள் தவறுசெய்தால் அதனை மீண்டும் செய்யாது இருக்கும் வகையில் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கவும் நாம் தவறக்கூடாது. அந்தத் 'தண்டனை' மீண்டும் தவறு செய்யவிடாமல் அவர்களை வழிநடத்தக்கூடியதாக இருக்கவேண்டும். சிலர் தமது குழந் தைகளை மாட்டை அடிப்பது போல் தாறுமாறாக அடிப்பார்கள். இத னால், அக்குழந்தைகளுக்கு அடிபடுவது பழக்கப்பட்டுப் போய் அப்ப டியே மரத்துப்போய் விடுகின்றது. இருந்ததைவிட முரட்டுத்தனமும் அதிகரித்துவிடும். இயன்றவரை அன்பாகத் திருத்தவே முனைய வேண் டும். அளவுமீறாமல் சிறிய தண்டனைகளை வழங்கவேண்டும். வாங்கப் படும் தண்டனையின் நோக்கம் ''தவறு செய்தால் தண்டிக்கப்படு வோம்'' என்ற மனப்பதிவைப் பிள்ளையிடம் ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும்.

உதாரணமாக மேற்கண்ட சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பிள்ளையின் வீட்டுக்கே தமது பையனை அழைத்துப்போய் எல்லோர் முன்னிலையி லும் செய்த பிழைக்கு மன்னிப்புக்கேட்க வைக்கலாம். அந்தப் பிள்ளை யின் காயம் ஆறும் வரை தினசரி அந்த வீட்டுக்கு மகனை அழைத்துப் போகலாம். இது உளவியல் ரீதியாக அந்தப் பையனுக்கு வழங்கும் மிகப் பெரிய தண்டனையாக இருக்கும். இனி ஒருபோதும் அப்படியான ஒரு பிழையைச் செய்துவிடாமல் இருக்கவேண்டும் என்ற உறுதி மனதில் எழும், இன்ஷா அல்லாஹ்.

எனினும், இதுபோன்ற நேரங்களில் பெரியவர்கள் பொறுமையோடும் பொறுப்புணர்வோடும் நடந்துகொள்ள வேண்டும். பிள்ளைகளின் பிரச் சினைக்காகப் பெரியவர்கள் சண்டைபோட்டுக் கொள்ளாமல், மிக நிதானமாகச் செயல்படுவதன் மூலம் பிள்ளைகளைத் திருத்தவும், அவர் களிடையே ஒற்றுமையை வளர்க்கவும் பரஸ்பரம் உதவுபவர்களாக இருக்கவேண்டும்.

## அடுத்தவர் பொருள் அமானிதமே!

அடுத்தவர் பொருள் ஓர் அமானிதம் என்ற உணர்வு பெற்றோராகிய நம்மிடம் இருந்தால்தான் நமது பிள்ளைகளிடமும் அந்த பண்பு நிலை பெறும். உதாரணமாக, அடுத்த தோட்டத்தில் நிற்கின்ற மாமரத்திலிருந்து நம்வீட்டு வேலிப்பக்கம் விழுகின்ற கனிகளைப் பிள்ளைகள் பொறுக்கி யெடுத்து உண்பதை சில பெற்றோர்கள் கண்டுகொள்வதில்லை. இன்னும் சிலர், அடுத்த தோட்டத்தில் நட்டுள்ள கறிவேப்பிலைச் செடியிலிருந்து கொஞ்சம் இலை பறித்துவரவோ, அந்தத் தோட்டத்தில் விழும் தேங்காயைப் பொறுக்கிக்கொண்டு வரவோ தமது குழந்தைகளையே அனுப்பிவைப்ப தும் உண்டு. (இன்னும் சிலர் தமது வீட்டுக் குப்பைகளை அடுத்த தோட் டத்தில் கொண்டுபோய் சத்தமின்றிக் கொட்டிவிட்டு வருமாறோ, வேலியை சற்று நகர்த்தி காணியில் சிறிதளவு பிடித்துக்கொள்ளவோகூட பிள்ளை களைத் தூண்டுவதையும் நடைமுறையில் காண்கின்றோம்).

முதலில் இத்தகைய நடவடிக்கைள் மிக மோசமானவை என்பதை பெரி யவர்கள் உணர்தல் வேண்டும். ‘கீழேவிழுந்து கிடக்கும் ஒரு கனிதானே’ என்ற அலட்சியம் நமது பிள்ளைகளின் ரத்தத்தில் ‘‘ஹராம்’’ கலப்பதற் கும் காரணமாக அமைந்துவிடும் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவி டக்கூடாது. பிறர் பொருளை அனுமதியின்றி எடுப்பதும், பயன்படுத்து வதும் ஹராம் என்பதையும், அவ்வாறு செய்வதற்கு நமது பிள்ளைகளைத் தூண்டுவதன் மூலம் எதிர்காலத்தில் அவர்கள் திருடர்களாக உருவாகுவ தற்கு நாமே அடித்தளம் அமைத்துக் கொடுக்கின்றோம் என்ற உண்மை யையும் நாம் உணர வேண்டும்.

பிள்ளையைக் கடைக்கு அனுப்புகின்றோம். மிகுதிச் சில்லறையோடு இரண்டு ரூபாய் மேலதிகமாக வந்திருப்பதைக் காண்கிறோம். உடனே, ‘அதனை நாம் எடுத்துக்கொள்வது ஹராம்’ என்பதைக்கூறி, திருப்பிய னுப்பிவிட வேண்டும். இதன் மூலம் நம் குழந்தைக்கு சிறந்ததொரு முன் மாதிரியைக் கற்றுக்கொடுக்கின்றோம். கடைக்காரர் மாற்று மதத்தவர் என் றால், அவர் முஸ்லிம்கள் மீது நல்லெண்ணம் கொள்ள இது ஒரு சந்தர்ப் பமாகவும் அமைந்துவிடும்.

பள்ளிக்கூடத்திலிருந்து வந்தபின் புதிய பென்சிலொன்றை, புத்தக மொன்றை, பென்சில் பெட்டியொன்றைப் பிள்ளை வைத்துக்கொண்டி ருப்பதைக் காண்கிறோம். நாம் அப்படியான ஒன்றை வாங்கிக் கொடுக்க வில்லை என்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. என்ன செய்யலாம்?

பிள்ளையை அன்பாக அழைத்து அது எப்படிக் கிடைத்தது என்பதை மெல்ல விசாரிக்கவேண்டும். ‘சக மாணவனிடமிருந்தது; அழகாக இருந் ததால் எடுத்து வந்துவிட்டேன்’ என்று சொல்கிறான். எடுத்த எடுப்பில் ஆத்திரம் கொள்ளாமல், ‘பிறருடைய பொருளை அவ்வாறு எடுப்பது

தவறு. அது மிகப் பெரியதொரு குற்றம். போலீஸிலும் கொண்டுபோய் அடைப்பார்கள். எல்லாவற்றையும் விட, அப்படியான செயலை அல் லாஹ் விரும்பமாட்டான். ஏதாவது ஒரு பொருளில் விருப்பம் இருந் தால் பெற்றோரிடம் சொல்லவேண்டும். பெற்றோர் ஏழைகளாக இருக் கும் நிலையென்றால், நாம் அந்தப் பொருளின் மீது ஆசையிருந்தும் அதைக் கட்டுப்படுத்திக்கொண்டு உரிமையற்ற பொருளைத் தொட வில்லை என்றால் அல்லாஹ் சுவர்க்கத்தில் அதைவிட சிறந்த பொருட் களை நிறையத் தருவான்' என்றெல்லாம் வயதுக்கும் அறிவுக்கும் ஏற்ப அவர்களுக்குப் புரியும் வகையில் எடுத்துச் சொல்லவேண்டும்.

அதுமட்டுமன்றி, பிள்ளை எடுத்துவந்த அந்த பொருளையோ, அல்லது அதற்குப் பதிலாக வாங்கியோ உரியவரிடம் திருப்பிக் கொடுத்துவிடச் செய்யவேண்டும். அதுமட்டுமல்ல, அதன் பிறகு எடுத் ததற்கெல்லாம் அந்தக் குழந்தையை சந்தேகப்படாமல் இருக்கவும் வேண்டும். அதாவது, உண்மையிலேயே தனது சக மாணவனோ மாண வியோ அல்லது ஆசிரியரோ பரிசாக ஏதேனும் பொருளைக் கொடுத்தி ருக்கலாம். அதைப் பற்றி விசாரித்துத் தெரிந்துகொள்ளாமல் அவசரப் பட்டு குழந்தை மீது திருட்டுப்பட்டம் சுமத்திவிடக்கூடாது என்பதிலும் நாம் மிகக் கவனமாக இருக்கவேண்டும். ''நீ எப்பவுமே இப்படித்தான். யார் பொருளையாச்சும் திருடுறதே உன் பழக்கம்! எத்தனைதரம் சொன் னாலும் நீயெல்லாம் திருந்தவே மாட்டாய்'' என்பது போன்ற வார்த் தைப் பிரயோகங்கள் மிகப் பயங்கரமான எதிர்விளைவை ஏற்படுத்தி விடக் கூடியவை. நமது குழந்தையை நாமே திருடனாகவோ அல்லது கெட்டவனாகவோ மாற்றுவதற்கு வழிவகுக்கக்கூடியவை என்பதை நாம் மறக்கவே கூடாது.

அவ்வாறே, பிறர்முன்னிலையில் அவ்வாறான பழியைச் சுமத்திவிட் டால் வேறு வினையே வேண்டாம். பலரும் நமது குழந்தையைத் ''திரு டன்'' அல்லது ''திருடி'' என்று பழிப்பதற்கும், அதனால் நம் குழந்தை சமுதாயத்தில் அவமானப்பட்டு கூனிக்குறுகிப் போவதற்கும் பெற்றோ ராகிய நாமே காரணமாகி விடுவோம். அத்தகைய நிலை மிக அபாயகர மானது.

இன்னும் சிலர் குழந்தையை விசாரிக்கும்போது, ''உண்மையைச் சொல்லு, நீ இதைச் செய்தாயா? உண்மையைச் சொன்னால், அடிக்கமாட் டேன்'' என்று கேட்பார்கள். அதை நம்பி, உண்மையைச் சொல்லி செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டதும், தாம் கொடுத்த வாக்குறுதியை மறந்து விட்டு பிள்ளையைத் தாறுமாறாக அடிப்பார்கள். இது மிகப் பெரும் தவ றாகும். இப்படி நடந்துகொள்வதால் அப்பிள்ளையின் மனதில் எப்படி யான மனப்பதிவு ஏற்படுகின்றது என்பதை நாம் புரிந்துகொண்டால் நாம் அவ்வாறு செய்யத்துணியவே மாட்டோம். அந்தப் பிள்ளையின் மனதில்,

1. உண்மை சொன்னால் அடிதான் கிடைக்கும்.

2. பிழை செய்துவிட்டுத் தப்ப வேண்டுமானால் பொய்சொல்ல வேண்டும்.

3. என் பெற்றோர் பொய்யர்கள். போலி வாக்குறுதி கொடுப்பவர்கள். அவர்களை நம்பமுடியாது.

என்ற எண்ணம் மிக ஆழமாகப் பதிந்துவிடும். எனவே அந்தப் பிள்ளை எப்படிப்பட்ட பிழையைச் செய்திருந்தபோதிலும்கூட, "உண்மையை ஒப்புக்கொண்டால் அடிக்கமாட்டேன்" என்று வாக்குக் கொடுத்துவிட்டு விசாரிக்கும் பட்சத்தில், அந்த வாக்குறுதிக்கேற்ப நடந்துகொள்ள வேண்டியது கட்டாயமாகின்றது. வேண்டுமானால், "இந்த முறை உண்மையைச் சொன்னதால், தப்பினாய். ஆனால், அடுத்த தடவை இதே மாதிரி பிழை செய்தால் கண்டிப்பாக அடிவிழும், தெரிந்துகொள்" என்று கடுமையாக எச்சரிக்கலாம். அப்படி நாம் நடக்கும் பட்சத்தில், நமது பிள்ளையின் மனதில் சிறுவயதுமுதலே "உண்மை வெல்லும்" என்ற மனப்பதிவு ஏற்படுவதோடு, பெற்றோராகிய நம்மீது மிகுந்த மரியாதையும் நம்பிக்கையும் ஏற்படும்.

3

# கண்டிப்புக்கும் ஓர் எல்லையுண்டு

எனக்கு தெரிந்த ஒரு குடும்பத்தில் நடந்த சம்பவமொன்றை இங்கு பகிர்ந்து கொள்ள விழைகின்றேன். கடைக்குட்டியான அந்தச் சிறுவன்மீது அக்காமாரும் அண்ணன்மாரும் அளவுக டந்த பாசம் கொண்டிருந்தனர். அவன் தீய நண்பர்களோடு சேர்ந்து கெட்டுப்போய்விடக் கூடாது என்பதில் அதிக அக்கறை காட்டுவதாக எண்ணி எப்போதும் மிகுந்த கண்டிப்போடு நடந்துகொண்டனர். ஏதோ ஓரிரு தடவைகள் பொய்சொல்லி அகப்பட்டுக்கொண் டதிலிருந்து அவனின் வார்த்தையை அவர் கள் நம்புவதே இல்லை. எப்போதும் எதற்கெடுத்தாலும் சந்தே கம், கண்டிப்பு, திட்டு இப்படியே காலம் நகர்ந்தது. பல்வேறு மன உளைச்சல்களுக்கு ஆளான நிலையில் சொந்தவீடே கிட்டத்தட்ட ஒரு சிறைச்சாலையாக மாறிவிட்டிருந்தது அவ னுக்கு இந்நிலையில், பத்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது.

படிப்பில் ஓரளவு கெட்டிக்காரனான அவனுக்கு வகுப்பாசி ரியர் ஒரு பொறுப்புக் கொடுத்திருந்தார். அனைத்து மாணவர்க ளிடமிருந்தும் அடுத்த மாதம் சுற்றுலா செல்வதற்கான கட்ட ணத்தை வசூலித்து தம்மிடம் ஒப்படைக்கவேண்டும் என்பதே அது. தன்மீது நம்பிக்கை வைத்து ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அவன் மிகுந்த உற்சாகத்தோடு செயற்பட்டான். திடீரென்று ஒருநாள் தன் மகனின் புத்தகப் பையை சோதனை

யிட்ட தாயார், அதில் நிறையப் பணநோட்டுக்கள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். மூத்த மகனையும், மகளையும் அழைத்துக் காட்டி னார். விசாரணை மிகக் கடுமையாக நடந்தது. 'அது பள்ளிக்கூட சுற்று லாக் காசு' என்று எவ்வளவோ கூறியும் அவர்களில் யாருமே அதனை நம்பத் தயாரில்லை. குறைந்தபட்சம், வகுப்பாசிரியரையோ சக மாண வனையோ அணுகி, சுற்றுலா போகும் ஆயத்தம் ஏதும் நடந்துவருகின் றதா என்றாவது விசாரித்திருக்கலாம். அப்படியும் செய்யவில்லை. இறு தியில் பணத்தை ஒப்படைக்குமாறு கேட்டு வகுப்பாசிரியரும் மாணவர் களும் வீட்டுக்கே தேடிவரும் நிலை ஏற்பட்டுவிட்டது.

தனது வகுப்பு மாணவர்கள், ஆசிரியர் முன்னிலையில் அவமானப் படுத்தப்பட்ட நிலையில் அவன் அதன்பின்பு பள்ளிக்கூடம் செல்லவே மறுத்துவிட்டான். அடித்தும் திட்டியும் பார்த்தாயிற்று. அவன் மசியவே இல்லை. வேறு வழியின்றி, வேறொரு பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண் டிய நிலை தோன்றியது. தான் அனுபவித்த அவமானம், தன் வீட்டி லுள்ளவர்கள் தன்மீது அன்போ நம்பிக்கையோ கொள்ளவில்லை என்ற எதிர்மறையான எண்ணம் என்பன ஒன்றிணைந்து அவனது நடத்தையில் பல மோசமான மாற்றங்கள் தோன்றக் காரணமாக அமைந்துவிட்டன. யாருக்குமே அடங்காத முரடனாகவே அவன் மாறிவிட்டான். மனதின் அடிவாரத்தில் வேரூன்றிப் போய்விட்ட வெறுப்பும், விரக்தியும் அவனை புகைக்கவும் மது அருந்தவும் தூண்டின. தான் பிழை செய்யும் போதெல்லாம் அதன் மூலம் தன் குடும்பத்தவர்களைப் பழிவாங்குவ தாக ஒரு குரூரத் திருப்தி அவனுக்குள் இருந்தது.

அதன் பின்னர் பலரிடம் முறையிட்டு இறுதியில்தான், தாம் நடந்து கொண்ட முறையில் தவறு இருப்பதை உணர்ந்து அவர்கள் மனம் வருந் தினர். உளநல மருத்துவருக்கு ஆயிரக்கணக்கில் செலவழித்தனர். மகனை நினைத்து அழுதழுதே நொந்துபோனார் அந்தத் தாயார்.

இவ்வளவுக்கும் காரணம் என்ன? அந்தக் குடும்பத்தவர்களின் ஒருசில வார்த்தைகளும், முன்யோசனையற்ற சில நடவடிக்கைகளும் மட்டுமே. தவறு செய்வது மனித இயல்பு என்பதைப் புரிந்துகொண்டு நிதானமாக நடக்காமல், ''நீ பொய்யன், உன்னை நம்பமுடியாது, நீ ஒருபோதுமே திருந்த மாட்டாய், உன்னால்தான் குடும்ப மானமே போகப் போகிறது, நீ திருடித்தான் இருப்பாய். நீ எதையும் செய்யக்கூடி யவன்தான்...'' இப்படியான வார்த்தைகளை அடிக்கடி சொல்வதன் மூலம் அந்தப் பிள்ளையை நாமே அப்படி வார்த்தெடுக்கின்றோம் என் பதை நாம் உணர்வதில்லை. எனவே, குழந்தைகள் தவறு செய்தால் திருத்தும் போதும், அதன் பிறகு அவர்களை நடத்தும்போதும் நாம் சற்று நிதானமாகவும் தூரநோக்கோடும் செயற்படுதல் வேண்டும்.

ஏனெனில் குழந்தைகள் நமது கைகளில் தரப்பட்ட களிமண் குவியலைப் போன்றவர்கள். குயவன் நிதானமிழந்து அவசரப்பட்டால் அழகான மண்பாண்டம் தயாராகாது. மாறாக, உருக்குலைந்து போய்விடும். அதைப் போலத்தான் குழந்தைகளை நிதானமாகவும் மிருதுவாகவும் அளவான கண்டிப்போடும் கையாளத்தவறினால், எதிர்காலத்தில் அவர்கள் நல்ல பண்புகள் கொண்ட நற்பிரஜையாக வளர்வார்கள் என்று எதிர்பார்க்கவும் முடியாது. இங்கு பின்வரும் நபிமொழியை நோக்குவது பொருத்தமானதே:

''ஒரு விலங்கு எப்படி முழு வளர்ச்சி பெற்ற விலங்கைப் பெற்றெடுக்கிறதோ அதை போன்று, எல்லாக் குழந்தைகளுமே இயற்கையான (மார்க்கத்)திலேயே பிறக்கின்றன. விலங்குகள் அங்கக் குறைவுடன் பிறப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? (முழுமையான விலங்கை அங்கசேதப்படுத்துவதுபோல்) பெற்றோர்கள் தாம் குழந்தைகளை (இயற்கையான மார்க்கத்தைவிட்டுத் திருப்பி) யூதர்களாகவோ கிறிஸ்தவர்களாகவோ நெருப்புவணங்கிகளாகவோ ஆக்கிவிடுகின்றனர்'. என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா (ரழி) அறிவித்தார். ''ஆகவே, நீர் உம்முகத்தை தூய (இஸ்லாமிய) மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலைநிறுத்துவீராக! எந்த மார்க்கத்தில் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனுடைய (நிலையான) இயற்கை மார்க்கமாகும். ஆனால் மனிதரில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள்.'' (அல் குர் ஆன் 30:30) என்ற வசனத்தை ஓதிக்காட்டினார்.''

*ஸஹீஹ் புகாரி (ஹதீஸ் எண்: 1359)*

எனவே, ஒருவன் முஸ்லிமாகவோ முஸ்லிமல்லாதவனாகவோ உருவாகுவது பெற்றோர் அவனை வளர்க்கும் விதத்தில்தான் தங்கியுள்ளது என்பதைப் போலவே, முஸ்லிமாகவே பிறக்கும் நமது குழந்தை, நல்ல பண்புடனும் நற்பழக்கவழக்கங்களுடனும் வளர்வதும் கூட பெற்றோராகிய நாம் அவர்களை வழிநடத்தும் விதத்திலேயே தங்கியிருக்கின்றது என்பதையும் நினைவிற்கொள்ள வேண்டும். அதுதான் பெற்றோராகிய நமக்கு அல்லாஹ் வைத்துள்ள மிகப்பெரும் சோதனை. அந்த சோதனையில் நாம் வெற்றிபெற வேண்டுமானால், நமது அணுகுமுறைகள், நடைமுறைகள், வார்த்தைகள் என்று அனைத்திலுமே நாம் மிகக் கவனமாக இருக்கவேண்டும். பிள்ளைகளிடம் அன்பு செலுத்துவதாக இருந்தாலும் சரி, அவர்களிடம் கண்டிப்புக்காட்டுவதாக இருந்தாலும் சரி, அளவுமீறி கண்மூடித்தனமாக நடந்துகொள்ளக்கூடாது. 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு'' என்ற பழமொழியின் அர்த்தம் நமது குழந்தை வளர்ப்புக்கும் பொருந்திவரும் என்பது புரிகின்றது அல்லவா?

அன்பும் கண்டிப்பும் அளவோடு இருக்கவேண்டிய அவசியம் குறித்துப் பார்த்தோம். இனி, எதிர்மறையான அணுகுமுறைகளும் (Negative approaches) வார்த்தையாடல்களும் ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் குறித்து ஆராயப் போகின்றோம்.

**"நீ ஒரு மக்கு..."**

எந்த ஒரு விடயத்தையும் சாதகமான மனநிலையோடு பாஸிட்டிவ் (Positive) ஆகப் பார்க்கும் மனோநிலை நம்மில் அனேகரிடம் இருப்பதில்லை. எதையும் எதிர்மறையாகப் (Negative) பார்த்தே பழக்கப்பட்டுப் போயிருக்கின்றது நமது மனசு.

அதிக எதிர்பார்ப்பு வைத்துவிட்டுப் பின்னர் ஏற்படும் ஏமாற்றத்தின் வலியைத் தாங்குவதைவிட எதற்கும் தயாராக இருப்பதால், தோல்வியும் ஏற்படலாம் என்ற மனநிலையோடு இருந்தால் மனதுக்குக் கஷ்டமாக இருக்காது என்பது அதற்கு நாம் சொல்லும் ஒரு காரணம். இந்தக் கருத்தில் ஓரளவு உண்மை இருக்கின்றது என்பதையும் மறுப்பதற்கில்லை. ''எதையும் தாங்கும் இதயம் இருந்தால்... இறுதிவரைக்கும் அமைதி இருக்கும் '' என்ற கண்ணதாசனின் கவிதை வரிகளும் இந்த உண்மையைத்தான் எடுத்துரைக்கின்றன. ஆனால், எப்போதும் எல்லாவற்றையுமே எதிர்மறையாகப் பார்ப்பதனாலும் அணுகுவதனாலும் பல்வேறு மோசமான விளைவுகள் தோன்றுவதற்கு அதிக வாய்ப்புள்ளது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இங்கு பின்வரும் நபிமொழியை நோக்குவது பொருத்தமானது.

இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், ''செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன. ஒவ்வொருவருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கிறது...''

*அறிவிப்பவர் உமர் இப்னு கத்தாப், நூல் ஸஹீஹ் புகாரி, ஹதீஸ் எண்:1*

இந்த நபி மொழியில் அடங்கியிருக்கும் வாழ்க்கைத் தத்துவம் மிக ஆழமானது. இன்றைய உளவியல் அறிஞர்கள் தமது நீண்ட கால ஆய்வுகளின் பின்னர் சொல்லியுள்ள ஆய்வு முடிவினை அண்ணலாரின் அமுத மொழி நமக்கு அன்றே கற்றுத் தந்துள்ளது.

மனித எண்ணங்கள் மிக வலிமையானவை எனவே, அத்தகைய எண்ணங்களும் அவற்றின் வெளிப்பாடான வார்த்தைகள் தோற்றுவிக்கும் விளைவுகளும் வலிமையானவையே என்பதையும் மறுப்பதற்கில்லை.

குழந்தைகள் அனைவரும் ஒரே தரமானவர்கள் அல்லர். தோற்றம், திறமை, அறிவுத்தரம் முதலான எத்தனையோ விதங்களில் அவர்கள் ஒருவரிலிருந்து மற்றொருவர் வேறுபட்டவர்களாக இருப்பது இயற்கையானதே. ஐந்து விரல்களும் ஒன்று போல் இருப்பதில்லை

அல்லவா? அது போலத்தான் இதுவும். ஆனால், எல்லாக் குழந்தையிடமும் ஏதோ ஒரு சிறப்பம்சம், திறமை இருக்கவே செய்யும் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அதைக் கண்டுபிடித்து, மேம்படுத்துவது பெற்றோர்களின், ஆசிரியர்களின் கடமையாகும்.

பள்ளியிலிருந்து நடுங்கிக் கொண்டே வீடு திரும்புகிறது அந்தப் பிள்ளை. பரீட்சை மதிப்பெண் பட்டியலைப் பார்த்து விட்டு இன்று நல்ல 'பூசை' கிடைக்கும் என்பது அந்தக் குழந்தைக்குத் தெரியும் என்பதால் தான் அந்த நடுக்கமும் கலக்கமும். மதிப்பெண் பட்டியலைப் பார்த்து விட்டு சீறிப் பாய்கின்றார் அந்தத் தாய். "நீ ஒரு மக்கு. அதுதான் தெரிஞ்ச விஷய மாச்சே! இந்த முறையும் மொத்தப் பத்து பாடங்கள்ல, எட்டுல ஃபெயில் மார்க்கு வாங்கியிருக்கே! பக்கத்து வீட்டுப் பையனப் பாரு. எப்பவும் ஃபர்ஸ்டு ராங்கு வாங்குறான். இருந்திருந்து என் வயித்துல வந்து பிறந்து தொலைச்சுதே இப்படி ஒரு மக்குக் கழுதை! மானமே போகுது. மக்கு மக்கு!"

நாளை பக்கத்து வீட்டுப் பெண்ணின் இளக்காரப் பார்வையை எப்படி எதிர்கொள்ளப் போகின்றோம் என்ற கவலையே அந்தத் தாய்க்குப் பெரிதாகத் தெரிகிறது. இப்படி அனேகமான தாய்மார்களை நாம் சந்தித்திருக்கின்றோம். எப்போதும் எதற்கும் மற்ற பிள்ளைகளோடு ஒப்பிட்டு ஒப்பிட்டு மாய்ந்துபோவது இவர்களின் வழக்கமாகிப் போய்விட்டது. இவர்கள் தொடர்ந்து தனிமையிலும் பிறர் முன்னிலையிலும் தமது பிள்ளைகளை "மக்கு மக்கு" என்று திட்டிக் கொண்டே இருப்பதால், அல்லது எதற்கெடுத்தாலும், "உன்னால் அதைச் செய்ய முடியாது. நீ அதைச் செய்ய மாட்டாய்" என்று சொல்லிக் கொண்டே இருப்பதால், அதைரியப்படுத்து வதால் ஏற்படும் விளைவு என்னவாக இருக்கும்?

பிள்ளையின் மனதிலும் 'நான் ஒரு மக்கு' அல்லது 'என்னால் எதுவும் செய்ய முடியாது' என்ற எண்ணம் ஆழப்பதிந்து விடுகின்றது. தன்னம்பிக்கை முற்றாகச் சிதைந்துபோய் விடுகின்றது. இதன் விளைவாக தாழ்வுச் சிக்கல் என்ற உளவியல் சார்ந்த குறைபாடு அந்தப் பிள்ளையிடம் வளர்கின்றது. எனவே, அதன்பின் எவ்வளவுதான் முனைந்தாலும், அந்தப் பிள்ளையை அதிலிருந்து மீட்டெடுப்பது மிகக் கடினமான ஒன்றாகி விடும். அத்தகைய பிள்ளைகள் எதிர்காலத்தில் சமுதாயத்தில் ஓரங்கட்டப்படும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளின் முன் எதிர்நீச்சல் போடத் தெரியாமல் தற்கொலை செய்துகொள்வோரில் பெரும் பாலானோர் இத்தகைய பின்னணியை உடையவர்களாகவே இருப்பர் என்பதில் ஐயமில்லை.

எனக்குத் தெரிந்த ஒரு சகோதரியின் வீட்டில் அவர் சிறுவயதாக இருக்கும்போது அவரது பெற்றோரும் ஏனையோரும் எடுத்ததற்

கெல்லாம் இவ்வாறு, ''உன்னால் முடியாது'', ''நீ செய்ய மாட்டாய்'' என்றெல்லாம் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அவர் அவசர அவசரமாக கிறுக்கலாக எழுதுவதைப் பார்த்து, ''உனக்கு அழகாக எழுதவே வராது'' என்று அடிக்கடி குறை சொல்வார்கள். இன்று முப்பது வயதாகிவிட்ட நிலையிலும் யாராவது பக்கத்தில் நிற்கும் போது சரியாகக் கையெழுத்துப் போடவும் முடியாமல் அவரது கையில் இலேசான நடுக்கம். 'நர்வஸ்' (Nerves) என்று இதனை ஆங்கிலத்தில் சொல்வார்கள்.

அவ்வாறே, சிறுவயதில், ''உனக்கு ஊஞ்சலில் ஏற முடியாது, விழுந்துடுவாய்'' என்று இடையிடையே பயமுறுத்தப் பட்டதால் பத்து வயது கடந்தும் ஊஞ்சலில் ஏறி உட்காரத் தயங்கிப் பின் வாங்கும் இன்னொரு சிறுவன். ஆனால், அந்தப் பெற்றோரோ மற்றவர்களோ மனமறிந்து வேண்டுமென்றா இவ்வாறெல்லாம் சொல்லியிருப்பார் கள்? இல்லவே இல்லை. மாறாக, 'ஐயோ! இப்படி மோசமாக எழுதுகிறாளே! நாம் கண்டித்தால், விமர்சித்தால் சரியாக எழுதுவாள்', அல்லது 'விழுந்து கை காலை உடைத்துக் கொண்டால் என்னாவது!' என்ற எண்ணத்தில் தற்செயலாக சொல்லப்பட்ட வார்த்தைகளே அவை. ஆனால், அவையே அந்தப் பிள்ளைகளின் தன்னம்பிக்கையை அடியோடு சிதறடித்துவிட்ட வெடிகுண்டு போல அமைந்துவிட்டன. எனவே, பெற்றோராகிய நாம், பிள்ளைகளின் தன்னம்பிக்கையைக் குலைக்கும் விதமான வார்த்தைப் பிரயோகங்களைக் கண்டிப்பாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வளரும் பருவத்தில் துருதுரு வென்று எதையாவது செய்ய வேண்டும், ஏற வேண்டும், பாய வேண்டும் என்றெல்லாம் ஆவல் உந்தித் தள்ளும். 'எங்கே நம் குழந்தை விழுந்து விடுமோ!' என்ற நியாயமான பயம் நம்மைப் பற்றிக் கொண்டாலும், 'கவனம், பார்த்து...' என்ற ஓர் எச்சரிக்கை விடுத்துவிட்டு நாம் சற்று ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டால் போயிற்று. குழந்தை ஒரு நாற் காலியை தூக்க முயற்சிக்கிறது. 'உன்னால் முடியாது, அதைக் கீழே வை' என்று கத்துவதை விட்டுவிட்டு நாமும் சேர்ந்து உதவினால் குழந்தைக்கு சந்தோஷமும் தன்னம்பிக்கையும் ஒருமித்து ஏற்படும். நமது இத்தகைய சிறிய செயல் மூலம் 'பெற்றோர் எப்போதும் நமக்குப் பக்க பலமாக இருப்பார்கள்' என்ற நம்பிக்கையை அந்தக் குழந்தையின் மனதில் விதைக்கின்றோம் என்பதை நாம் அறிவதில்லை.

மேலும், நாம் நமது குழந்தையிடம் சின்னச் சின்ன வேலைகளைச் செய்யுமாறு கேட்கவும் தவறக்கூடாது. ''மேசையிலுள்ள சோப்பை எடுத்து வாம்மா'', ''இந்தப் பேப்பரை அந்தக் குப்பைக்கூடையில் போட்டுடுப்பா'', ''இந்தப் பிளேட்டைக் கொண்டு போய் மேசையில்

வைப்பா'' இப்படி சின்னச் சின்ன உதவிகளை நாம் நம் குழந்தைகளிடம் அன்பாகக் கேட்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன் விளைவாக அந்தக் குழந்தைகளிடம் தன்னம்பிக்கையும், பொறுப்புணர்ச்சியும் படிப்படியாக முளைவிட ஆரம்பிக்கின்றன. அந்த வேலையை சரியாகச் செய்து முடித்தால், ''மாஷா அல்லாஹ்! கெட்டிக்காரக் குழந்தை'' என்று பாராட்டுவது மட்டுமல்ல, சரியாகச் செய்யத் தவறினால், ''சரி சரி, பரவாயில்லை. இன்ஷா அல்லாஹ், அடுத்தமுறை சரியாகச் செய்துடு, என்ன!'' என்று உற்சாகமூட்டவும் மறக்கக் கூடாது. இதன் நேரடி விளைவு குழந்தையின் தன்னம்பிக்கை சிதைவடையாது பாதுகாக்கப்படும். உதிரி விளைவாக, தவறுகளை மன்னிக்கவும் அந்தப் பிள்ளை கற்றுக் கொள்கின்றது.

4

# அடுத்தவர் முன்னிலையில்...

கல்வியிலே பிள்ளைகள் பின்னடைவு நிலையை அடைவதில் தாய் தந்தையரின் தூரநோக்கற்ற அணுகுமுறைகள் மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றன என்பதைப் பற்றி நாம் எப்போதேனும் சிந்தித்துப் பார்த்திருப்போமா என்பது சந்தேகம்தான். எப்படி என்று கேட்கின்றீர்களா? அது பற்றி சற்று விரிவாகவே நோக்குவோம்.

சில குழந்தைகள் கணிதப் பாடத்தையோ அறிவியல் பாடத்தையோ அல்லது வேறு ஏதாவது பாடத்தையோ புரிந்து கொள்வதற்கு சற்றுச் சிரமப்படுகின்றது என்று வைத்துக்கொள்வோம். இரண்டு தரம் சொல்லிக் கொடுத்தும் குழந்தைக்குப் புரியவில்லை என்றால், உடனே, ''மக்கு, மக்கு'' என்று அதன் தலையில் குட்டக் கூடாது. ''இந்தச் சின்னக் கணக்குக்கூடவா புரியவில்லை?'' என்று கொலைக் குற்றவாளியைப் பார்ப்பது போலப் பார்த்து முறைக்கக்கூடாது. இங்கு நாம், 'கிரகித்தல் ஆற்றல் ஆளுக்காள் வேறுபடும்' என்ற அடிப்படை உண்மையை மனங்கொள்ளத் தவறக்கூடாது. நமது அறிவுத் தரத்துக்கு ரொம்பச் சின்ன கணக்கு ஆகத் தோன்றும் ஒன்று, குழந்தைக்கு, அதன் அறிவுத் தரத்துக்கு முன்னால் அப்படியே 'சின்னக் கணக்கு' ஆக இருக்கும் என்று எதிர்பார்ப்பது ரொம்பத் தப்பு.

குழந்தைக்கு நாம் சொல்லிக் கொடுப்பது புரியவில்லையா? நமது கற்பித்தலில் ஏதோ குறைபாடு இருக்கக்கூடும். எனவே, நாம் கற்பிக்கும் முறையை சற்று மாற்றிப் பார்க்கலாம். இரண்டு முறைக்கு நான்கு முறையோ பத்து முறையோ சொல்லிக் கொடுக்குமளவு பொறுமையை வளர்த்துக் கொள்வதும் கட்டாயமானது.

மற்ற பிள்ளைகள் நம் குழந்தையைவிட நன்றாகச் செய்கின்றார்களே! அதிக மார்க்கு வாங்குகின்றார்களே என்பதற்காக நாம் நமது குழந்தையோடு கோபித்துக் கொள்ளத் தேவையில்லை. சில வேளை, குழந்தைகளின் மந்தமான போக்குக்கு அவர்களின் பரம்பரை மரபணுவோ, உணவு, ஓய்வு, சூழல் முதலான காரணிகளோ கூட காரணமாக இருக்கலாம். அப்படி இருக்கும் பட்சத்தில் அவர்களோடு கோபித்துக் கொள்வது அவர்களுக்கு இழைக்கும் பெரும் அநீதியாக அமைந்து விடும். ஏனெனில், அத்தகைய காரணங்களால் அவர்களின் அறிவுத்தரம் பின்தங்கி இருக்குமாயின் அதற்கு அவர்கள் எவ்வகையிலும் பொறுப்பில்லை அல்லவா? எனவே, குறித்த பாடத்திலோ எல்லாப் பாடங்களிலுமோ குழந்தை ஏன் பின் தங்கி இருக்கின்றது என்பதை ஆராய்ந்து கண்டறிய வேண்டியது பெற்றோரின் கடமை.

உதாரணமாக, குழந்தையின் மந்தமான கிரகித்தல் நிலைக்கு போஷாக்கான உணவு இன்மையோ போதியளவு உணவு உட் கொள்ளாமையோ காரணமாக இருக்கலாம். குழந்தையின் கவனத்தைச் சிதறடிக்கும் வகையில் தொடர்ந்து நள்ளிரவு வரை தொலைக்காட்சி முழங்கிக் கொண்டிருக்கும் ஒரு சூழலில் வளரும் குழந்தையால் கவனத்தை ஒருமுகப்படுத்துவது சிரமமாக இருக்கும். அவ்வாறே, வீட்டிலுள்ளவர்களோடு சேர்ந்து இரவு நெடுநேரம் வரை விழித்துத் தொலைக்காட்சி பார்க்கும் பழக்கமுள்ள குழந்தைக்கும் போதிய தூக்கமின்மை முதலான காரணங்கள் கிரகித்தலில் பாதிப்பு ஏற்பட இட முண்டு. அது மட்டுமல்ல, வீட்டில் குழந்தையின் எதிரில் தாயும் தந்தையும் அடிக்கடி சண்டையிடும் சூழலில் வளரும் குழந்தைகளும் உளவியல் ரீதியில் பாதிக்கப்படுவதாலும் கற்றல் செயல் பாடுகளில் பின்னடைவு நிலைமை தோன்றலாம். சற்று நேரம் விளையாடக்கூட விடாமல் எப்போது பார்த்தாலும் "படி, படி" என்று இடையறாது நச்சரித்துக் கொண்டிருக்கும் வீடுகளில் வளரும் குழந்தைகளுக்கு படிப்பில் வெறுப்பு ஏற்பட்டு, அது ஒரு பெரும் சுமையாகவே மாறி விடும்.

அடிக்கடி வெளியூர் பயணம், வீட்டு விசேஷம், குழந்தையின் தாயாருக்கு உடல்நலக் குறைவு போன்ற காரணங்களால் அடிக்கடி பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாமல் விட்டாலும் பிள்ளைகள் பாடங்களில் பின்தங்கிவிடுவார்கள் என்பதும் நமக்குத் தெரிந்ததுதான். சிலவேளை

குறித்த பாட ஆசிரியரின் கற்பித்தல் முறை, அளவுமீறிய கண்டிப்பு, பிள்ளையை நடத்தும் அல்லது அணுகும் விதத்தில் உள்ள குறைபாடு முதலான காரணங்களாலும் குழந்தை அப்பாடத்தை வெறுத்து விடக் காரணமாகி இருக்கலாம். இப்படி எத்தனையோ காரணங்களில் எந்தக் காரணம் நம் குழந்தையின் பின்னடைவுக்குக் காரணம் என்பதை பெற்றோராகிய நாம் தான் பொறுமையாக ஆராய்ந்து கண்டறிய வேண்டும். ஏனெனில், நமது குழந்தையின் எதிர்காலம் வளமானதாக, சிறந்ததாக அமைவதில் நமக்கு அக்கறை இருந்தால் மட்டும் போதாது. அதனை அவ்வாறு அமைத்துக் கொடுப்பதற்காக முயற்சியெடுப்பதும் நமது கடமையாகும்.

## ஒப்பீடு செய்து திட்டலாமா?

எதனையும் ஒப்பிட்டுப் பார்ப்பது மனித இயல்பே என்பதை மறுப்பதற்கில்லை. எனினும், அந்த ஒப்பீடு நம்மை வளர்ப்பதற்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவும் உதவ வேண்டுமே தவிர, நம்மையோ நமது பொறுப்பில் உள்ளவர்களையோ பின்னடையச் செய்வதாக, விரக்தியடையச் செய்வதாக அமைந்து விடக்கூடாது என்பதில் நாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும். இதனையே பின் வரும் ஹதீஸும் நமக்குக் கற்றுத் தருகின்றது.

''உங்களில் ஒருவர் செல்வத்திலும் தோற்றத்திலும் தம்மை விட மேலான ஒருவரைக் கண்டால், உடனே அவர் தம்மை விடக் கீழானவர்களை (நினைத்துப்) பார்க்கட்டும் என இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்'' என அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவித்தார்கள்.

*ஸஹீஹ் புகாரி, ஹதீஸ் எண்: 6490.*

சில பெற்றோர்கள் எப்போதும் எதற்கெடுத்தாலும் தமது குழந்தையை மற்ற குழந்தைகளோடு ஒப்பிடுபவர்களாக இருப்பதை நாம் அனுபவத்தில் கண்டுள்ளோம். ''கணிதப் பாடத்தில் எதிர்வீட்டுப் பையன் நூறு மார்க்கு வாங்கினால், நீயும் ஏன் அதேமாதிரி வாங்க வில்லை?'' என்று கேட்டு தமது குழந்தையைத் திட்டுவார்கள். ''அந்தப் பையனைப் பாரு, எவ்வளவு சமர்த்தா இருக்கிறான்? நீயும் இருக்கிறியே, ச்சே!'' என்று எப்போதும் அடுத்த பிள்ளையோடு ஒப்பிட்டே தமது குழந்தையைத் திட்டுவார்கள். அல்லது ''உன் தம்பியைப் பாரு. வயசில் உன்னைவிட எவ்வளவு சின்னவன்! ஆனாலும், உன்னைவிட எவ்வளவு கெட்டிக்காரனாவும் சமர்த்தாவும் இருக்கான்னு பாரு. அவனைப் பார்த்தாவது திருந்த மாட்டியா?'' என்று, அதே குழந்தையின் சகோதரர்களோடு ஒப்பிட்டுக் குறை சொல்வார்கள்.

இதன் மூலம் அந்தக் குழந்தைக்கு ரோஷமூட்டி அதனைத் திருத்தலாம் என்று நாம் நினைப்போம். ஆனால், குழந்தைகளைப் பொறுத்த வரையில் இந்த அணுகுமுறை பெரும்பாலும் நாம் எதிர் பார்க்கும் பலனைத் தருவதில்லை. மாறாக, நம்முடைய குழந்தையின் மனதில் நாம் யாரோடு நமது குழந்தையை ஒப்பிட்டுத் திட்டுகின்றோமோ அந்தக் குழந்தைமீது வெறுப்பு வளர்கின்றது. அந்தக் குழந்தையை, அது தன் சகோதரனாகவே இருந்த போதிலும் தன்னுடைய எதிரியாகப் பார்க்கத் தொடங்குகின்றது. சந்தர்ப்பம் கிடைத்தால் அந்தக் குழந்தைக்கு ஏதேனும் தீங்குசெய்து பழி வாங்கவும் முனைகின்றது. அல்லது அந்தக் குழந்தை கீழே விழுந்து விட்டாலோ ஏதேனும் நோய்நொடி வந்துவிட் டாலோ ''அவனுக்கு நல்லா வேணும்'' என்று வன்மத்துடன் மகிழ்ச்சியடைகின்றது. இதற்கு மறைமுகக் காரணம் நாம்தான்.

நாம் நம் குழந்தையை மற்றக் குழந்தையோடு ஒப்பீடு செய்வதில் தவறில்லை. ஆனால், நாம் ஒப்பீடு செய்யும் விதம்தான் தவறு. இன்னொரு வகையில் சொல்வதானால், நாம் எதிர்மறையாக ஒப்பீடு செய்வதைத் தவிர்த்திருந்தால் இத்தகைய மோசமான விளைவு தோன்றுவதையும் தவிர்த் திருக்கலாம்.

நாம் எடுத்ததற்கெல்லாம், ''அவனை விட நீ மோசம்'' என்றோ, ''அவன் கெட்டிக்காரன், நீ மக்கு'' என்றோதான் ஒப்பீடு செய்யப் பழகியுள்ளோம். இதன் விளைவு நல்லதாக அமைவது மிகவும் அரிது. ஆனால், ''அந்தப் பையனைப் போலவே நம்ம பையனும் கெட்டிக் காரன்தான்'' என்றோ, ''நீங்கள் வேண்டுமானால் பாருங்களேன், இந்த முறை குறைவாக மார்க்கு வாங்கினாலும், இன்ஷா அல்லாஹ் அடுத்த முறை நம்ம பையன், அவனை விட நல்ல மார்க்கு வாங்குவான்'' அல்லது, ''கணக்குப் பாடத்தில் நம்ம பையன் அவனைவிடக் குறைவாக மார்க்கு வாங்கி னா லும், ஆங்கிலத்தில் அதிகமாக வாங்கியிருக்கிறானே! இன்ஷா அல்லாஹ், அடுத்த முறை கணக்கிலும் முதலாவது மார்க்கு எடுப்பான் பாருங்களேன்'' என்று நம்பிக்கை யூட்டும் விதத்தில் செய்யப்படும் ஒப்பீட்டின் ஆற்றல் அபரிமிதமானது. குழந்தைகளிடத்தில் பகைமையோ குரோதமோ அற்ற வகையில் போட்டி மனப்பான்மையை வளர்க்கும் அணுகு முறை இப்படித்தான் இருக்கவேண்டும்.

ஒரே வீட்டில் உள்ள குழந்தைகளின் படிப்பு, விளையாட்டு என்பவற்றில் நல்லமுறையில் ஊக்கமும் உற்சாகமும் வழங்குவதாயின், அவர்களில் அதிக மார்க் வாங்கியவருக்கு அல்லது வெற்றி பெற்றவருக்கு சின்னதாக ஏதும் பரிசு வழங்கிவிட்டு, மற்றவருக்கு ''இன்ஷா அல்லாஹ், அடுத்தமுறை நீயும் அப்படி எடுத்தால், உனக்கும் பரிசு கிடைக்கும்'' என்று ஆசையூட்டலாம்.

அடுத்தவர் முன்னிலையில்...

நமது குழந்தை எதிர்காலத்தில் தன்னம்பிக்கையும் சுய கௌரவமும் மிக்க நற்பிரஜையாக வளர வேண்டும் என்றுதான் நாம் அனைவரும் விரும்புகின்றோம். அந்த விருப்பம் ஈடேற வேண்டுமானால், நாம் அந்தக் குழந்தையை நடத்தும் விதத்திலும் கவனம் செலுத்த வேண்டியது இன்றியமையாததாகும்.

அடுத்தவர் முன்னிலையில் அவமானப்படுத்தப்படும் குழந்தையின் மனதில் தாழ்வுச் சிக்கல் முளை விடுகின்றது. தன்னம்பிக்கை சிதைவடைகின்றது. பரிட்சையில் வெற்றியடையவில்லை; விளையாட்டுப் போட்டியில் வெற்றியடையவில்லை; பாடங்களில் குறைவான மார்க் வாங்கி விட்டமை போன்ற காரணங்களை முன்னிட்டு நாம் குடும்பத்தவர் முன்னிலையிலோ ஏனையவர்கள் முன்னிலையிலோ நமது குழந்தையை மக்கு என்றோ, ஒன்றுக்கும் உதவாதவன் என்றோ திட்டுவதைக் கண்டிப்பாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஏனெனில், ஒரு முறை அல்லது இருமுறை பின்னடைந்து விட்ட நமது குழந்தையை உரிய விதத்தில் தன்னம்பிக்கையூட்டி அடுத்தமுறை வெற்றியடைவதற்குத் தயார்படுத்துவதை விட்டுவிட்டு, மற்றவர் முன்னிலையில் அவமானப்படுத்துவோமானால், காலமெல்லாம் அந்தப் பிள்ளையை எழவே முடியாத பின்னடைவை நோக்கி வலுக் கட்டாயமாகத் தள்ளி விடுகின்றோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கீழே விழுந்து சிராய்த்துக் கொண்டு அழுது கொண்டே ஆறுதல் தேடி ஓடிவரும் நம் குழந்தையை, "சனியன், சனியன்! ஓடாதே என்று படிச்சுப்படிச்சுச் சொன்னேன். கேட்டிருந்தால், இப்படி ஆகியிருக் குமா?" என்று கேட்டு இன்னும் இரண்டு அடிபோடும் இதயமற்ற பெற்றோராக நாம் இருக்கலாமா? அதுபோலத் தான் இதுவும்.

படிப்பிலோ விளையாட்டிலோ சற்று பின்னடைந்து விட்டதற்காகக் குடியே முழுகிப் போய் விட்டதாகக் கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணுவதை விட்டுவிட்டு, சற்று நிதானமாக நடந்து கொள்ள பெற்றோராகிய நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் கோபமும் ஆத்திரமும் கவலையும் நமக்கு ஏற்படுவது இயல்புதான். எனினும், அதனை ஓரளவு கட்டுப் படுத்திக் கொண்டு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழியைத் தேடுவதுதான் அறிவுடைமை.

நாம் ஏற்கெனவே பார்த்தது போல, அத்தகைய பின்னடைவு ஏற்படு வதற்கான காரணத்தை ஆராய்ந்து, அதனை களைவதற்கு முனைய வேண்டும். அதைவிட்டு விட்டு நாலு வீட்டுக்குக் கேட்கும் வகையில் நமது குழந்தையை நாமே 'மக்கு' என்று திட்டி, அடித்து,

அவமானப்படுத்துவதால் அந்தப் பிள்ளையை நாம் நிரந்தரமாகவே 'மக்கு' ஆக்கிவிடுகின்றோம்.

அதுமட்டுமல்ல, அந்தப் பிள்ளையிடம் வெட்கவுணர்வு, சுய கௌரவ உணர்வு என்பவையெல்லாம் அடியோடு அழிந்து போகவும் நாம் காரணமாகி விடுகின்றோம். அதன்பிறகு நாம் எவ்வளவுதான் திட்டினாலும் அடித்தாலும் அந்தப் பிள்ளையிடம் 'மரத்துப் போன' ஒருவகைப் போக்கு வேரூன்றி விடும். இதனால் யாருக்கு என்ன நன்மை? எனவே, நிதானமிழந்து வெறுமனே கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணுவ தால், நம்முடைய ஆத்திரத்தைக் கொட்டிக் கொள்ள லாம். அதைத்தவிர இத்தகைய 'எடுத்தேன், கவிழ்த்தேன்' போக்கினால் ஆரோக்கியமான விளைவு எதுவும் ஏற்படப் போவதில்லை.

**5**

# பிஞ்சில் பழுத்த பழம்

**தா**னாகவே முற்றிக் கனிந்த பழத்துக்கு இருக்கும் சுவையே தனிதான். அதுவே பிஞ்சில் பழுத்ததாக இருந்தால் அதேயளவு சுவையை எதிர்பார்க்க முடியுமா? அவ்வாறுதான், நம்முடைய குழந்தைகள் தங்களுடைய வயதுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றபடி வளரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பெற்றோராகிய நாம் போதிய சிரமத்தையும் அக்கறையை எடுத்துக்கொள்ளத் தவறிவிட்டால், அவர்களின் எதிர்கால நல்வாழ்வு சிதைந்து விட அதுவே காரணமாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

குழந்தைகளுக்கு எது தேவை என்பதில் அதிக அக்கறை காட்டும் நம்மில் அதிகமானோர், அவர்களுக்கு எதெல்லாம் தேவையில்லை என்பதை நிர்ணயிப்பதில், வரையறுப்பதில் சில சமயங்களில் கோட்டைவிட்டு விடுகின்றோம். இதனைச் சொன்னதும் உதாரணமாக நம் மனக்கண் முன் வருவது தொலைக்காட்சி மட்டும்தான். அதில் குழந்தைகளின் வயதுக்கு மீறிய நிகழ்ச்சிகளை, குறிப்பாக தொடர் நாடகங்களை (சீரியல்கள்) அவர்களையும் வைத்துக் கொண்டே நாம் பார்ப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகள் சொல்லித்தெரிய வேண்டியதில்லை. ஆனால், இது தவிர நமது அன்றாட உரையாடல்களின் போதும் நாம் மிகக் கவனமாக இருக்கவேண்டும் என்பது நம்மில் பலருக்குத் தோன்றுவதில்லை. அதாவது, குழந்தைகளின் முன்னிலையில் எதைப் பேசுவது, எதைப் பேசக்

கூடாது என்ற கட்டுப்பாடு பெற்றோராகிய, பெரியோராகிய நமக்கு கண்டிப்பாக இருக்க வேண்டும்.

அது ஒரு விடுமுறைநாள். மாலை வேளை. நாங்கள் குடும்பத்தோடு ஒரு நண்பரின் வீட்டுக்குப் போயிருந்தோம். கணவன் - மனைவி இரண்டு பேருமே மார்க்கக் கல்வி கற்று, அழைப்புப் பணியில் ஈடுபட்டு வருபவர்கள். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். நாம் சென்றிருந்த சமயத்தில் அங்கு ஏற்கெனவே இன்னும் இரண்டு குடும்பங்கள் வந்திருந்தன. ஆண்கள் முன்னறையில் தமது உரையாடலில் சுவாரசியமாக ஈடுபட்டிருந்தனர். பெண்கள் சமையலறையில் அமர்ந்தபடி அளவளாவினோம். பெண்கள் அடிக்கும் அரட்டையில் கலகலப்புக்கா பஞ்சம்? சிரித்து சிரித்துப் பேசுகையில் பேச்சு எங்கெல்லாமோ சுற்றிச் சுழன்றது. பொதுவாகப் பேசுவதற்கு சற்றே தயங்கக்கூடிய விஷயங்கள் கூட அங்கே சர்வ சாதாரணமாகக் கலந்துரையாடப்பட்டதில் எனக்கு சற்றே வியப்பாகவும் சங்கடமாகவும் போய்விட்டது. எப்போது முன்னறையிலிருந்து கணவர் அழைப்பார், எழுந்து செல்வதற்கு என்று அவஸ்தையோடு நிமிடங்கள் கழிந்து கொண்டிருந்தன.

இதற்கிடையில் சமையலறையின் ஓர் ஓரமாக நின்றபடி அந்தச் சகோதரியின் மூத்த மகளும் வாயை ‘ஆ’ வென்று திறந்தவண்ணம் இந்தக் கதைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருப்பதை எதேச்சையாகக் கண்ணுற்ற எனக்கு அதிர்ச்சி. அந்தக் குழந்தையைப் பெயர் சொல்லி அழைத்து, ‘‘என்னம்மா, நீ மட்டும் இங்கே நிற்கிற? போய் மற்ற பசங்களோட சேர்ந்து வெளியே விளையாடேன்’’ என்றேன். நான் அப்படிச் சொன்னது அந்தச் சிறுமிக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்பது முகக் குறியிலிருந்தே புரிந்தது, எனக்கு. மெல்லப் போவது போல போக்குக் காட்டிவிட்டு சற்றைக்கெல்லாம் தண்ணீர் குடிக்க என்று அங்கே வந்தவள், மீண்டும் பழையபடி நின்றுகொண்டு அங்கு பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டு நிற்கலானாள். இதனை அச்சிறுமியின் தாய் சற்றும் பொருட்படுத்தாதது எனக்கு அதிர்ச்சியை மட்டுமின்றி கோபத்தையும் ஏற்படுத்தியது.

‘அடுத்தவர்களுக்கு மார்க்க உபதேசம் புரியும் இந்தப் பெண்மணி, தன் குழந்தையின் விஷயத்தில் இப்படி அலட்சியமாக இருக்கலாமா?’ என்று எண்ணமிடுவதை என்னால் தவிர்க்க முடியவில்லை. எனவே, சற்று பொறுமையிழந்து போய், ‘‘சிஸ்டர், உங்க மகளை வெளியே பசங்க கூடப் போய் விளையாடச் சொல்லுங்க. இங்கேயே எத்தனை நேரம் நின்னுட்டிருக்கப்போறா? பாவம், காலும் வலிக்கப் போவுது குழந்தைக்கு’’ என்று அமைதியான குரலில் மெல்லச் சொன்ன பின்பு அவர் அவளை அனுப்பி வைத்தார்.

அதன் பிறகும் இரண்டொரு தடவைகள் இதே மாதிரியான சம்பவங்கள் என் முன்னிலையில் நடந்தன. எனவே, ஒருநாள் வெளிப்படையாகவே அந்தத் தாயாரைத் தனியே அழைத்து, பெரியோர்கள் பேசும் போது பிள்ளைகள் அங்கு நிற்பதை அனுமதிப்பது எல்லா நேரத்திலும் பொருத்தமாக இராது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியதாயிற்று.

குழந்தைகளின் உலகம் வித்தியாசமானது. விசித்திரமானது. அவர்களின் சின்னஞ்சிறிய உள்ளங்களில் வயதுக்கு மீறிய விஷயங்கள் நுழைவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. நம்மைப் படைத்து பரிபாலிக்கும் அல்லாஹ் தஆலா அல்குர்ஆனிலே,

''ஈமான் கொண்டவர்களே! உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்(அடிமை)களும், உங்களிலுள்ள பருவம் அடையாச் சிறுவர்களும் (உங்கள் முன் வர நினைத்தால்) மூன்று நேரங்களில் உங்களிடம் அனுமதி கோர வேண்டும்; ஃபஜ்ரு தொழுகைக்கு முன்னரும், நீங்கள் (மேல் மிச்சமான உங்கள் உடைகளைக் களைந்திருக்கும் 'ளுஹர்' நேரத்திலும், இஷாத் தொழுகைக்குப் பின்னரும் - ஆக இம்மூன்று நேரங்களும் உங்களுக்காக (அமையப் பெற்றுள்ள) மூன்று அந்தரங்க வேளைகளாகும் - இவற்றைத் தவிர (மற்ற நேரங்களில் மேல்கூறிய அடிமைகளும், குழந்தைகளும் அனுமதியின்றியே உங்கள் முன் வருவது) உங்கள் மீதும் அவர்கள் மீதும் குற்றமில்லை; இவர்கள் அடிக்கடி உங்களிடமும் உங்களில் ஒருவர் மற்றவரிடம் வரவேண்டியவர்கள் என்பதினால்; இவ்வாறு, அல்லாஹ் தன் வசனங்களை உங்களுக்கு விவரிக்கின்றான்; மேலும் அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிந்தவன்; ஞானம் மிக்கவன்.'' *(24:8)* என்றும்,

''இன்னும் உங்களிலுள்ள குழந்தைகள் பிராயம் அடைந்துவிட்டால் அவர்களும், தங்களுக்கு (வயதில்) மூத்தவர்கள் அனுமதி கேட்பது போல் அனுமதி கேட்க வேண்டும்; இவ்வாறே அல்லாஹ் தன்னுடைய வசனங்களை உங்களுக்கு விவரிக்கின்றான்; அல்லாஹ் (யாவற்றையும்) அறிந்தவன்; ஞானம் மிக்கவன்.'' *(24:59)*

என்றும் அழகாக எடுத்துக் கூறியிருப்பதை நாமறிவோம். இந்த வசனங்களில் கூறியுள்ளபடி, அந்தரங்கமான நேரங்களில் அருகில் வர நமது குழந்தைகள் நம்மிடம் அனுமதி கேட்க வேண்டும் என்பது நமக்குத் தெரியும். ஆனால், அதேபோல அந்தரங்கமான விஷயங்களையோ குழந்தைகளுக்குச் சற்றும் தொடர்பில்லாத, அவர்களுக்குத் தேவையற்ற விஷயங்களையோ அவர்களின் முன்னிலையில் கலந்துரையாடக் கூடாது என்பதையிட்டு நம்மில் எத்தனைபேர் அக்கறை கொள்கின்றோம்? மேற்படி அல்குர்ஆன் வசனங்களின் கட்டளைக்குப் பின்னால் உள்ள அதே காரணம், இதற்கும் பொருந்தும் என்பதை நாம் உணர்கிறோமா?

நான்மேலே விவரித்த சம்பவத்தில், அந்தப் பெண் குழந்தை தன் வயதொத்த பிள்ளைகளோடு விளையாடுவதை விட பெரியவர்களின் அரட்டைகளைச் செவிமடுப்பதில் அதிக ஈடுபாடு காட்டுகிறது. இதன் நாளைய விளைவு எப்படி அமையக்கூடும்? அரட்டை, ஊர் வம்பு முத லான விஷயங்களில் விளையாட்டை விட, படிப்பைவிட சுவாரசியமாக ஈடுபடும் போக்கு முளைவிடலாம். வளர்ந்து பெரியவளான பின்பும் இந்தப் பழக்கம் தொடர்ந்தால் அது, அவளின் எதிர்கால குடும்ப வாழ் வில் எத்தகைய மோசமான விளைவுகளை, பிரச்சினைகளை ஏற்படுத் தக்கூடும் என்பதையிட்டு நாம் சிந்திக்க வேண்டும். நமது குழந்தை, தேவையற்ற பேச்சுக்களில் ஈடுபடவும், ஒட்டுக் கேட்கவும், கேட்பதை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்தில் போய் சொல்லவும் நாம் இடங்கொ டுக்கலாமா? ஒருபோதும் கூடாது. இதில் சிலர், தம் பிள்ளைகளிடம் எங் காவது போய் வந்தபின், ''அங்கே அவங்களெல்லாம் என்ன பேசிக் கொண்டார்கள்?'' என்று கேட்பதுமுண்டு. இதற்குக் காரணம் அறி யாமை மட்டுமல்ல. தூரநோக்கோடு இதன் பாரதூரம் பற்றிச் சிந்திக்கத் தெரியாமையும்தான்.

ஒட்டுக் கேட்டல், புறம் பேசுதல், கோள் சொல்லுதல் என்பன மிக இழிவான செயல்கள். அவற்றால் உலக வாழ்க்கையில் குடும்பங்களி டையே, சமூகங்களிடையே எத்தனையோ பாரதூரமான பிரச்சினைகள், நெருக்கடிகள் தோன்றுகின்றன என்பதை நாம் அனுபவத்தில் கண்டிருப் போம். பரஸ்பர அன்பு, நட்பு, மரியாதை, கௌரவம் முதலான இன் னோரன்ன நல்ல அம்சங்களை அப்படியே சிதைத்து விடக்கூடிய புல் லுருவிகளாய் இந்த இழிசெயல்கள் அமைந்துள்ளன. அல்லாஹ் தஆலா தன் திருமறையில்,

''குறை சொல்லிப் புறம் பேசித் திரியும் ஒவ்வொருவனுக்கும் கேடு தான்.'' *(104:1)* என்றும்,

''முஃமின்களே! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்; ஏனெனில் நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும்; (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண் டிராதீர்கள்; அன்றியும், உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேச வேண்டாம், உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை!) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சய மாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன்; மிக்க கிருபை செய்பவன்.''

*(49:12)*

என்றும் எச்சரித்திருக்கின்றான். செத்த பிணத்தின் மாமிசத்தைப் புசிப்

பது போன்ற இழிவான, அருவருக்கத்தக்க செயல்களாக அவை அமைந் துள்ளன என்று ஓர் உவமை மூலம் நமக்கு உணர்வூட்டுகின்றான்.

எனவே, பெற்றோராகிய, பெரியோர்களாகிய நாம் இத்தகைய இழி செயல்களில் ஈடுபடுவதோடு, பிள்ளைகளின் முன்னிலையில் அவற் றைச் செய்து அவர்களுக்குப் பிழையான முன்னுதாரணமொன்றை வழங்கி, அவர்களையும் வழிகெடுப்பதன் மூலம் இரட்டிப்பான தீமையை சம்பாதிக்கின்றோம். எந்தக் குழந்தைக்கும் முதல் பள்ளிக்கூட மாகத் தன்னுடைய வீடுதான் அமைகிறது. அதிலும், தனது தாயே ஒரு குழந்தையின் முதல் ஆசிரியராக அமைகின்றாள். அந்த வகையில், நமது சொல், செயல் முதலான அனைத்திலிருந்தும் நமது பிள்ளைகள் முன்மாதிரியொன்றைப் பெறும் விதத்தில் வாழவேண்டிய தேவை நமக் குள்ளது. எனவே, தாய்மார்களுக்கு இஸ்லாம் அளவற்ற சிறப்பினை வழங்கியிருப்பதைப் போலவே அளவற்ற பொறுப்புக்களையும் வழங் கியிருக்கிறது என்பதை தாய்மார்களாகிய நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

நம்முடைய நடவடிக்கைகள் அனைத்தும் ஏதாவது ஒரு வகையில் நமது பிள்ளைகளைப் பாதிக்கிறது என்பதை நாம் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். தாய் - தந்தையரிடையே அடிக்கடி சண்டையும், தர்க்கங்களும் இடம்பெறும் குடும்ப சூழல் அமையப்பெற்ற குழந்தை கள் உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்படுவதோடு, அவர்களில் அனேகமானவர்கள் வன்முறையாளர்களாக, போதை முதலானவற் றுக்கு அடிமையானவர்களாக உருவாகின்றனர் என்றும், மனத்தடை, மனஅழுத்தம், தூக்கமின்மை, நரம்புத் தளர்ச்சி முதலானவற்றினால் தமது வாழ்நாள் முழுவதும் பாதிக்கப்படுகின்றார்கள் என்றும் மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

'அமெரிக்க மனோதத்துவ நிபுணரான மைக்கல் யெப்கோ, தொடர்ச் சியான மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் பெற்றோரின் பிள் ளைகள் வளர்ந்து பெரியவர்களாகும் போது தாமும் அதே பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேர்கிறது என்றும், ஒரு தாய் எத்தகைய மனநிலையில் வாழ்கிறாள் என்பது அவளின் குழந்தையின் எதிர்கால மனநலத்தைத் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றது என்றும் கூறுகின்றார்'

*('ராவய' வாரப் பத்திரிகை: 27.09.2009)*

இந்நிலையில், குழந்தைகளுக்குரிய வீட்டுச் சூழலை நல்ல முறை யில் வகுத்துக் கொடுப்பதும், அவர்களின் வயதுக்கு மீறிய அல்லது அவர்களுக்குத் தேவையில்லாத விஷயங்களைப் பார்ப்பது, செவிமடுப் பது முதலானவற்றிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதும் பெற்றோ ராகிய நமது கடமையே. குடும்பப் பிரச்சினைகள், பிறருடனான தமது

முரண்பாடுகள், மனக்கசப்புகள் என்பன பற்றியெல்லாம் குழந்தைக ளின் முன்னிலையில் கலந்துரையாடுவதைக் கண்டிப்பாக நாம் தவிர்த் துக் கொள்ள வேண்டும்.

அவர்களின் முன்னால் எப்போதும் நல்ல விடயங்களை மட்டுமே பேசு வது என்ற உறுதிமொழியை நாம் அனைவரும் எடுத்துக் கொள்வதன் மூலம் இறையருளால் அவர்களின் சிறப்பான எதிர்காலத்துக்கு நாம் உத்த ரவாதம் அளிக்கிறோம் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். அவ் வாறில்லாத பட்சத்தில் பின்வரும் உண்மைச் சம்பவத்தில் இடம்பெற்றது போன்ற அசம்பாவிதங்களுக்கு நாமும் முகம்கொடுக்க நேரலாம்.

இரண்டு குடும்பங்களுக்கிடையில் பெரும் மனக்கசப்பு. வருடக் கணக்காக இருதரப்பாரும் பேசிக் கொள்வதில்லை. அதில் ஒரு குடும் பத்தைச் சேர்ந்தவர்கள் மற்ற குடும்பத்தவரால் தமக்கு இழைக்கப்பட்ட அநியாயங்கள், கொடுமைகள் பற்றியெல்லாம் அடிக்கடி பேசிக் கொண் டிருப்பார்கள். அவ்வாறு பேசுவதன் மூலம் கொஞ்சம் ஆசுவாசமடைய அவர்கள் நினைத்திருக்கலாம். காலங்கள் கடந்தன. பழைய பகை மையை மறந்து இரு குடும்பங்களும் ஒன்றிணைந்தன. தாத்தா - பாட்டி கால வைராக்கியங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. (அவர்கள் அப்படித்தான் நினைத்தார்கள்) மூன்றாவது தலைமுறை தலைதூக்கி விட்டது. திருமண சம்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் இரு குடும்பத்தினரும் தமது உறவைப் பலப்படுத்த எண்ணி, அத னைச் செயற்படுத்தினர். தம்பதியர் தனிக்குடித்தனம் போயாயிற்று.

சில மாதங்கள் கழித்து திடீரென அந்தப் பெண், அலங்கோலமான நிலையில் தன் பெட்டியோடு தாய்வீடு வந்து நிற்கிறாள், தனியாக. அந் தக் குடும்பமே பதைபதைக்கிறது. தனிக் குடித்தனம் செய்கிறேன் பேர் வழி என்று மணப்பெண்ணைக் கூட்டிப் போனவன், அவளின் பாட்டி யால் தனது குடும்பம் அனுபவித்த கொடுமைகளை ஒவ்வொன்றாகச் சொல்லிச் சொல்லி அவளைக் கொடுமைப்படுத்தியிருக்கிறான். அவ ளின் உடல் முழுக்க ரணமாக்கி இருக்கிறான். அந்தக் குடும்பத்தைப் பழி வாங்குவதற்காகத்தான் அவளைத் திருமணமே முடித்ததாகக் கூறிக்கூறி அவளை சித்திரவதை செய்திருக்கிறான். இந்தச் சம்பவம் இரண்டு குடும் பங்களுக்குமே பேரதிர்ச்சியைத் தந்தது. எவ்வளவோ எடுத்துக்கூறியும் அவன் மனம் மாறவே இல்லை. இறுதியில் அந்தத் திருமணம் விவாக ரத்தில் முடிந்துவிட்டது. மணமகனின் வீட்டார் ரொம்பவும் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், அதனால் அந் தப் பெண் தான் செய்யாத குற்றத்துக்காக அனுபவித்த கொடுமைகள் இல்லையென்று ஆகிவிடுமா? இழந்து போன வாழ்க்கை திரும்பக் கிடைத்துவிடுமா? தான் எதிர்கொண்ட கொடூரங்களால் ஏற்பட்ட உள வியல் ரீதியான பாதிப்பு முழுமையாக மறைந்துபோய் விடுமா?

இந்தக் கேள்விகளுக்கான விடை 'இல்லை' என்பதுதான். ஆனாலும், இப்படியான ஓர் அசம்பாவிதம் ஏற்படுவதற்குப் பின்புலமாக அமைந்த காரணங்கள் எவை என்று சிந்திப்பது இன்றியமையாதது.

தமது மன ஆறுதலுக்காக அடிக்கடி பழைய சம்பவங்களை மீட்டி மீட்டிப் பேசிக் கொண்டிருந்த அந்தக் குடும்பத்தினர், குறிப்பாக அவனின் மிகுந்த பாசத்துக்குரிய பாட்டியும் அம்மாவும், அப்பெண்ணின் குடும்பத்தினர் மீதான மிகக் கடுமையான வெறுப்பைத் தம்மையறியாமலேயே அவனின் மனதில் விதைத்துள்ளனர். பிஞ்சு மனதில் மீண்டும் மீண்டும் பதிந்த பழைய துக்ககரமான சம்பவங்களால் முளைவிட்ட வெறுப்பு, அவன் வளர வளர ஆழமாக வேரூன்றி விட்டது. அவன் அந்த வெறுப்பையும் வஞ்சத்தையும் தன் குடும்பத்திலும் யாரிடமும் வாய்விட்டுக் கூறாமல் தனக்குள்ளேயே புதைத்து வைத்திருக்கிறான். பழிவாங்குவதற்கேற்ற சந்தர்ப்பம் வாய்க்கும் வரை காத்துக் கொண்டு இருந்திருக்கிறான். விளைவு? எந்தப் பாவமும் அறியாத ஒரு பெண்ணின் வாழ்க்கை பலியானது. மறுதலையாக அந்த வாலிபன் ஒருவகை மனநோய்க்கு ஆளாகியிருக்கிறான் என்றும் கூறலாம்.

இத்தகைய சம்பவங்கள் மிக அரிதானவைதான். ஆனால், தமது குடும்பப் பிரச்சினைகளை, வளரும் குழந்தைகளின் முன் அலசுவதில் எதிர் விளைவுகள் உள்ளன என்பதை இச் சம்பவம் நமக்கு உணர்த்துகிறதல்லவா? ஆகவே, நமது குழந்தைகளுக்கு எதை வழங்க வேண்டும், எதை வழங்கக் கூடாது என்பதில் நாம் ஆழ்ந்த கவனம் செலுத்துவோம்.

6

# பாரபட்சம் காட்டலாமா?

சில பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு மத்தியில் பாரபட்சமாக நடந்து கொள்வதை நாம் கண்டிருப்போம் அல்லது கேள்விப்பட்டிருப்போம். காக்கைக்குக்கூட தன் குஞ்சு பொன் குஞ்சுதான். அப்படியிருக்க, ஆறறிவு படைத்த மனிதப் பிறவிகளான நாம், நம்முடைய பிள்ளைகளுக்கிடையிலேயே பாரபட்சம் காட்டுவோமாயின் அந்தக் காகத்தைவிட எந்தளவு தரந்தாழ்ந்து விட்டோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இரண்டு கண்களில் இந்த கண்தான் சிறந்தது என்று ஒரு கண்ணை அடையாளப்படுத்த முடியுமா, நமக்கு? ஆனாலும் நம்மில் சில பெற்றோர், சில தாய்மார்கள் கூட தாம் ஈன்றெடுத்துப் பாலூட்டி வளர்த்த பிள்ளைக்குக்கிடையில் பாரபட்சம் காட்டுவதை நாமறிவோம். இது மிகவும் வருந்தத்தக்கதாகும். அன்பு செலுத்துவதில் அளந்து ஒரே அளவாகச் செலுத்துவது என்பது சாத்தியமில்லை என்பதை மனிதனைப் படைத்த அல்லாஹ்வே சுட்டிக்காட்டியுள்ளான்.

நாம் இங்கு பேசுவது அதைப் பற்றியல்ல. மாறாக, ஒரு குழந்தை மீது வைக்கின்ற கண்மூடித்தனமான அன்பு, இன்னொரு பிள்ளைக்கு அநீதியிழைப்பதாக அமைந்துவிடக் கூடாது என்பதையே நாம் இங்கு கருத்திற்கொள்கின்றோம்.

உதாரணமாக, சில வீடுகளில் மூத்த பிள்ளை என்பதால் அல்லது கடைக்குட்டி என்பதால் அப்பிள்ளை மீது அளவுகடந்த பாசம் வைத்திருப்பார்கள். அந்தப் பிள்ளை என்ன செய்தாலும்

கண்டுகொள்வதே இல்லை. அதையே மற்ற பிள்ளை செய்தால் கடுமையாகத் தண்டிப்பார்கள். இது தவறாகும். பெற்றோர் இப்படிப் பாரபட்சமான, பிழையான அணுகுமுறையைக் கைக்கொள்வதன் விளைவு என்ன?

★ பெற்றோர் தன்னைப் பாரபட்சமாக நடத்துகிறார்கள் என்பதை உணர்ந்த அப்பிள்ளை மிகுந்த மனசங்கடம் கொள்கிறது.

பாரபட்சத்திற்கு உட்படும் பிள்ளை, தன் பெற்றோரின் முழு அன்புக்கும் பாத்திரமான தனது சகோதரனையோ சகோதரியையோ மிகவும் வெறுக்கிறது.

பெற்றோரின் அதீத அன்புக்குப் பாத்திரமான பிள்ளை, தான் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற அசட்டுத் துணிச்சலோடு செயல்பட முனைவதால், பல தவறுகளைச் செய்ய முனைகிறது.

★ சில சமயம் தான் என்ன சொன்னாலும் எடுபடும் என்ற தைரியத்தில், பெற்றோர் தன் மீது வைத்துள்ள நம்பிக்கையை துஷ்பிரயோகம் செய்ய முனைகின்றது.

எனக்குத் தெரிந்த குடும்பமொன்றில் இளைய மகன் மீது அளவில்லாத பாசம் அந்தத் தாயாருக்கு, வீட்டில் பிள்ளைப் பூச்சிப் போல அமைதியாக இருப்பான் அந்தப் பையன். வீட்டைப் பொறுத்தவரை அவன் உலகமகா சாதுப் பையன். ஆனால், வெளியில் தான் அவனின் அடாவடித்தனங்கள் எல்லாம். மூத்த மகன் அதற்கு நேரெதிர் வீட்டில் சரியான வாண்டுத்தனம் பண்ணினாலும் வெளியில் படு அமைதியானவன். இந்த நிலையில் வழக்கமாக தான் வீட்டுக்கு வெளியில் செய்கின்ற குறும்புத்தனங்கள் அகப்படும் நிலை வந்தால், சட்டென்று அண்ணனின் தலையில் பழியைச் சுமத்திவிட்டுத் தான் தப்பிவிடுவதே இளையவனின் வேலையாக இருந்தது.

''நீ இதைச் செய்தாயா?'' என்ற கேள்வியே இன்றி, விளக்கமளிக்க எந்தச் சந்தர்ப்பமும் அளிக்காத நிலையில் மூத்த பையன் தண்டிக்கப்படுவதே வழக்கமாயிற்று. இத்தகைய பாரபட்சமானதும் நியாயமற்றதுமான நடைமுறை அந்தப் பையனின் மனதில் ஆழமான ரணமாயிற்று. இளைஞனாய் வளர்ந்து, திருமணமுடித்து இரண்டு குழந்தைகளைப் பெற்ற நிலையிலும் அந்த வடு அவன் மனதில் மாறாமல் இருந்து கொண்டுதான் இருந்திருக்கிறது.

முழுக்குடும்பமும் கூடியிருந்த ஒரு சந்தர்ப்பத்தில், ஏதோ பேச்சுவாக்கில் அத்தனை பேர் முன்னிலையிலும் ''ஏனம்மா, நானும் உங்க வயிற்றில் பிறந்த பிள்ளைதானே? ஏனம்மா எனக்கு மட்டும் காலமெல்லாம் நீங்க ஓரவஞ்சனை காட்டினீங்க? தம்பி எது சொன்னாலும் கண்ணை மூடிக்கிட்டு நம்பினீங்க. எத்தனை தரம் நான் செய்யாத தவறுக்கு அவன்

சொன்ன பொய்க்கதையைக் கேட்டு எனக்கு நீங்க தாறுமாறாக அடிச்சி ருக்கீங்க, தெரியுமா?'' என்று வாய்விட்டுத் தாயாரைப் பார்த்துக் கேட்டே விட்டான். அந்தத் தாயார் விக்கித்துப் போய் நின்றுவிட்டார். அத்தனை பேருக்கு மத்தியிலும் கூனிக்குறுகி நிற்கவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

பிள்ளைகளில் ஒரு பிள்ளை மீது ஏதாவது ஒரு விசேஷ காரணத்தி னால் அதிக அன்பு வைப்பது தப்பில்லை. ஆனால் அதனை மற்ற பிள் ளைகள் மனத்தாங்கலாய், குறையாய் உணராத அளவுக்கு நாம் மிகக் கவ னமாக நமது ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் ஏன், அசைவிலும் கூட நுணுக்கமாகக் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். இல்லாத பட்சத்தில் பிள்ளைகள் மத்தியில் பொறாமையும் குரோதமும் வளர்வ தற்கு நம்மையறியாமலேயே நாம் காரணமாகி விடக்கூடும்.

யூசுஃப் நபியின் வரலாற்றை எடுத்துப் பாருங்கள். அல்குர் ஆனிலே அல்லாஹ் அதனை அழகாக விவரிக்கின்றான்.

''நிச்சயமாக யூஸுஃபிடத்திலும் அவர்களுடைய சகோதரர்களிடத் திலும் (அவர்களைப் பற்றி) விசாரிப்பவர்களுக்கு பல படிப்பினைகள் இருக்கின்றன.''

*(அல்குர்ஆன் - 12:7)*

''(யூஸுஃபுடைய சகோதரர்கள்) கூறினார்கள்: ''யூஸுஃபும், அவரு டைய சகோதரரும் நம் தந்தைக்கு நம்மைவிட அதிகப் பிரியமுள்ளவர் களாக இருக்கின்றனர். நாமோ (பலமுள்ள) கூட்டத்தினராக இருக்கின் றோம்; நிச்சயமாக நம் தந்தை பகிரங்கமான தவறிலேயே இருக்கின்றார்''.

*(அல்குர்ஆன் - 12:8)*

''யூஸுஃபை'' கொன்றுவிடுங்கள், அல்லது அவரை (தொலை வான) ஒரு நாட்டில் எறிந்துவிடுங்கள்; (அப்பொழுது) உங்கள் தந்தை யின் கவனம் உங்கள் பக்கமே இருக்கும்; இதன்பின் நீங்கள் நல்ல மனி தர்களாகி விடுவீர்கள்'' என்றும் கூறியபோதும்

*(அல்குர்ஆன் -12:9)*

மேற்படி வசனங்களின் மூலம், நமக்குத் தெளிவாவது என்ன? நாம் நமது குழந்தைகளிடம் பாரபட்சம் காட்டவில்லை என்றாலும்கூட, ஒருவ ரை விட மற்றவரில் அதிக அன்புடையவர்களாக இருக்கிறோம் என்பதை அவர்கள் உணரநேர்ந்து விட்டால், அவர்களின் மனதில் பொறாமையும் குரோதமும் இயல்பாகவே முளைவிட ஆரம்பிக்கின்றன. இதுதான் யூசு ஃப் நபியின் வரலாறு நமக்குக் கற்றுத்தரும் படிப்பினைகளுள் ஒன்று.

இங்கு யஃகூப் (அலை) அவர்கள் தமது பிள்ளைகள் மத்தியில் பார பட்சம் காட்டினார்கள் என்பது பொருளல்ல. மாறாக, அன்னார் யூசுஃப்

(அலை) மீதும் அன்னாரின் சகோதரர் புன்னியாமீன் மீதும் அளவுகடந்த அன்பு வைத்துள்ளார் என்பதே மற்ற சகோதரர்களுக்கு அவ்விருவர் மீதும் அதிக வெறுப்பும் குரோதமும் வளர்வதற்கான காரணமாக அமைந்துவிட்டது என்பதே உண்மை. இது பலவீன்மான மனித சுபா வம் என்பதை இந்த வரலாறு நமக்கு உணர்த்துகின்றது.

''அல்குர் ஆன் நமது வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் வழி காட்டி'' என்ற அடிப்படையில் மேற்படி வரலாற்றுச் சம்பவத்தின் மூலம் நாம் உரிய படிப்பினையைப் பெற்று, நமது செயற்பாடுகளைச் சீர்திருத்திக் கொண்டால் அளவற்ற நன்மையைப் பெற்றுக்கொள்வோம் என்பதில் ஐயமில்லை. எனவே குழந்தைகளிடம் அன்புசெலுத்தும் விட யத்தில் நாம் மிகக் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் செயற்படுவது இன்றியமையாததாகும்.

**பெண் குழந்தை என்றால் இளக்காரமா?**

நிச்சயமாகக் குழந்தைச் செல்வம் என்பது மனிதனுக்கு அல்லாஹ் விடமிருந்து கிடைக்கும் ஒப்பற்ற அருளாகும். அதனைப் பற்றி அல் லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

''அல்லாஹ்வுக்கே வானங்களுடையவும் பூமியுடையவும் ஆட்சி சொந்தமாகும்; ஆகவே தான் விரும்பியவற்றை அவன் படைக்கின் றான்; தான் விரும்புவோருக்குப் பெண் மக்களை அளிக்கிறான்; மற்றும் தான் விரும்புவோருக்கு ஆண் மக்களை அளிக்கின்றான்''.

*(அல்குர்ஆன் - 42:49)*

''அல்லது அவர்களுக்கு அவன் ஆண்மக்களையும், பெண் மக்களையும் சேர்த்துக் கொடுக்கின்றான்; அன்றியும் தான் விரும்பியோரை மலடாகவும் செய்கிறான் - நிச்சயமாக, அவன் மிக அறிந்தவன்; பேராற்றலுடையவன்.''

*(அல்குர்ஆன் - 42:50)*

எனவே, ஆண் குழந்தையாயினும் பெண் குழந்தையாயினும் அது அல்லாஹ்வின் அருள்தான் என்பதை மேற்படி அல்குர் வசனங்கள் நமக்கு மிகத் தெளிவாக உணர்த்துகின்றன.

அறியாமைக் காலத்து மக்கள் தமக்குப் பெண் குழந்தை பிறப்பதை மிகப் பெரும் இழிவாகக் கருதி, அதனை வெறுத்தார்கள். பெண் குழந்தை பிறந்தால் உயிரோடு புதைக்கும் கொடூரத்தைச் சர்வசாதாரணமாகச் செய் துவந்தார்கள். இதனைக் குறித்து அல்குர் ஆன் விவரிக்கும் போது,

''அவர்களில் ஒருவனுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது என்று நன் மாராயங் கூறப்பட்டால் அவன் முகம் கறுத்து விடுகிறது அவன் கோப முடையவனாகிறான்.''

*அல்குர்ஆன் - 16:58*

என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

'ஜாஹிலியாக் காலம்' எனும் அறியாமைக் காலத்தில்தான் அப்படியென்றால், அறிவியல் வளர்ந்துவிட்டதாகக் கூறி மார்தட்டிக் கொள்ளும் இந்தக் காலத்தில் மட்டும் நிலைமை முற்றாக பெண்குழந்தை பிறந்தால் கள்ளிப் பாலூட்டிக் கொலைசெய்யும் கொடூரம் ஒருபுறம் சற்றுக் குறைந்து விட்டாலும், பிறக்கப் போவது பெண் குழந்தைதான் என்று அறிந்து, கருவிலேயே கலைத்துவிடும் அவலம் இன்று அதிகரித்துள்ளது என்பதை ஆய்வுத் தகவல்கள் நிரூபிக்கின்றன. எனவே, மனிதன் என்னதான் அறிவியலில் வளர்ச்சி அடைந்துவிட்டாலும், பெண் குழந்தையை இரண்டாம் தர மனித ''உயிரி''யாகக் கருதும் குறுகிய மனப்பான்மையை முற்றுமுழுதாக வெற்றிகொள்ள அவனால் முடியவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

பெண் குழந்தைகளைக் கொலை செய்யாவிட்டாலும், அது பிறந்தது முதல் மனதில் ஒருவித சுமையுணர்வு ஏறி உட்கார்ந்து விடுகின்றது, நம் பெற்றோருக்கு காரணம் என்ன? 'பெண் குழந்தைக்காக அதிகம் செலவு செய்யவேண்டி வரும். என்னதான் அழகு, அறிவு, திறமை இருந்தாலும் நல்லதொரு தொழிலைச் செய்து கைநிறையச் சம்பாதித்தாலும் கல்யாணச் சந்தையில் அவளுக்காக லட்சக்கணக்கில் சீதனத்தை வாரி இறைக்கவேண்டும், கல்யாணச் செலவைப் பொறுப்பெடுக்க வேண்டும், அவளது பிரசவத்துக்காகச் செலவு செய்ய வேண்டும்...' என்று சாகும் வரை பட்டியல் நீண்டுகொண்டே போகும் அவலமான நிலை. சமூகத்தில் புரையோடிப் போயுள்ள இத்தகைய இழிவான நடைமுறைகள் பெண்குழந்தை என்ற எண்ணத்தையே சுமையானதாக மாற்றி அமைத்துள்ளது என்றால் மிகையல்ல.

இந்நிலையில், இத்தகைய சமூகச் சூழல் பொதுவாகவே பெண் குழந்தையை ஆண் குழந்தையை விடக் குறைவான தரத்தில் வைத்தப் பார்க்கும் மனப்பாங்கை நமது பெற்றோர் மத்தியில் கட்டமைத்துள்ளது. 'ஆண்குழந்தை தான் பிற்காலத்தில் நம்மை வைத்துப் பார்ப்பான், சோறு போடுவான், பெண் குழந்தை என்றோ ஒருநாள் இன்னொரு வீட்டுக்குப் போகத்தான் போகிறாள், அதுவும் நிறையச் செலவுகளையும் இழுத்துவைக்கப் போகிறாள்' என்பன போன்ற மனப்பதிவுகள் அனேகமான பெற்றோர் மத்தியில் தம்மையறியாமலேயே வேரூன்றிப்போய் உள்ளன.

இதன் விளைவாக, பெண் குழந்தைகள் அனேகமான விஷயங்களில் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர். அவர்களுக்கு இயல்பாகக் கிடைக்க வேண்டிய பல்வேறு உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அதே வேளை, ஆண்குழந்தை என்பதாலேயே அவர்களுக்கு நிறையச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. இது நிச்சயம் மிகத் தவறானது என்பதை தெளிவாகச் சிந்திப்பவர்கள் மட்டுமே உணர்ந்து கொள்கின்றனர். இவர்கள்,

தாம் உணர்ந்த உண்மையை அடுத்தவர்களுக்கும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டுள்ளனர் என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இனி, என்னுடைய அனுபவத்ததிலிருந்து சில சம்பவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

**ஆண்பிள்ளை வீட்டு வேலை செய்யலாமா?**

உறவினர் ஒருவரின் வீட்டுக்குப் போயிருந்தேன். பகலுணவு உண்டு முடித்து எழும்போது, தன்னுடைய உணவுத் தட்டைக் கழுவுவதற்காக எடுத்துக் கொண்டு எழுந்த மகனை அதட்டுகிறார், அந்தத் தாயார்.

''உனக்கெதுக்கு இந்த வேலையெல்லாம்? ஆம்புளைப் புள்ளையா... லட்சணமா... அதை அப்படியே வைத்துவிட்டு நீ கைகழுவிக் கொண்டு போ. தங்கச்சி இருக்கிறா, அதைக் கழுவ''

என்னையறியாமலேயே சிரிப்பு வந்தவிட்டது, எனக்கு ''ஏன், ஆம்புளைப் புள்ளை கழுவினால், தட்டு கழுவிப்படாதா, மாமி?'' என்று கேட்டுவிட்டேன்.

''அடிப்போடி இவளே! உன் சீர்திருத்தத்தையெல்லாம் யுனிவர்சிட்டியோடு வைத்துக்கொள். இங்கே கொண்டு வராதே அவன் ஆம்புளைப் புள்ளை. நாளைக்கு கைநிறையச் சம்பாதிச்சி இவள்களை அவன்தான் கரையேத்தணும். வீட்டில் பொம்புளைப் புள்ளைகள் இருக்கிறப்போ, இந்த...தட்டு கழுவுறது, வீடு பெருக்குறது இதையெல்லாம் அவன் ஏன் செய்யணும்? அவனுக்கு உரிய மரியாதையைக் கொடுக்கிறதுக்கு நான் இப்பவே எல்லாருக்கும் ட்ரைனிங் கொடுக்கிறேன்'' அவரது குரலில் பெருமிதம் பொங்கி வழிந்தது.

எவ்வளவோ தெளிவுபடுத்த முயற்சித்தும் அவருடைய கருத்துக்களை என்னால் மாற்ற முடியவில்லை. எனவே, அந்தப் பெண் பிள்ளைகளைத் தனியே அழைத்து, இவ்விஷயமாகத் தெளிவுபடுத்தி, எதிர்காலத்தில் அவர்கள் இதே பிழையான முன்மாதிரியைக் கைக்கொள்ளக் கூடாது என்பதை அறிவுறுத்திவிட்டு வந்துவிட்டேன். அப்போதைக்கு என்னால் அதைத்தான் செய்ய முடிந்து.

ஆண் குழந்தைகளுக்கு வீட்டு வேலைகளைச் செய்யக்கொடுப்பது ஏதோ பெரிய பாவச்செயல் என்பது போலவும், அது ஆண்பிள்ளைக்குக் கொடுக்கும் கௌரவக்குறைவு என்பது போலவும் தேவையற்ற மனப்பிரமைகள் அனேகமான தாய்மார்களிடம் உண்டு. இது மிகத் தவறானதாகும். ஏனெனில், தன்னுடைய வேலையைத் தான் செய்து கொள்ளப் பழகுவதும், தன்னுடன் இருப்பவர்களுடன் வேலைகளைப் பகிர்ந்து கொண்டு பரஸ்பரம் உதவி செய்வதும் ஆண்-பெண் இருபாலாரிடமும் வளர்க்கப்பட வேண்டிய நற்பழக்க வழக்கங்களாகும்.

இதனால், அவர்கள் மட்டுமின்றி சுற்றியிருப்பவர்களும் பயன் பெறுவார்கள்.

இப்படித்தான் ஒருமுறை இலங்கையில் இடம்பெற்ற ஓர் அரசியல் படுகொலையை அடுத்து அரசாங்கத்தால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் திடீரென ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது. நாங்கள் அப்போது பல்கலைக்கழக மாணவர்களாக இருந்தோம். கௌதம புத்தரின் பிறந்தநாளை ஒட்டி இரண்டு நாட்கள் விடுமுறை இருந்த போதிலும் பரீட்சை நெருங்கி வருவதை முன்னிட்டு, படிப்பதற்காக அனேகமாணவர்கள் வீடுகளுக்குப் போகாமல் விடுதிகளிலேயே தங்கியிருந்தோம். இந்நிலையில் விடுப்பில் சென்றிருந்த கேன்டீன் ஊழியர்கள் பல்கலைக் கழக விடுதிகளுக்குத் திரும்ப முடியாத சூழ்நிலை. பெண்கள் விடுதியில் இருந்த நமக்குப் பிரச்சினை கேன்டீனும் மூடப்பட்டு, வெளியே நகர்ப்புறமுள்ள ஹோட்டல்களுக்கும் போய்ச் சாப்பிட முடியாத இக்கட்டான நிலைமை. நாம் சமைக்கும் உணவிலிருந்து சிறிதளவைக் கொடுத்தனுப்பலாம் என்று எண்ணினாலும், அதனை செயற்படுத்துவது எப்படி என்ற நடைமுறைச் சிக்கல் காரணமாக அந்த யோசனையைக் கைவிட வேண்டியதாயிற்று. இப்படியே ஒருவாரம் கடந்து போனது. ஊரடங்குச் சட்டம் முடிவுக்குக் கொண்டவரப்பட்டு வழமைபோல் விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. நமது சகோதரர்களைக் கண்டதும் நாம் கேட்ட முதலாவது கேள்வி, '' சாப்பாட்டுக்கு என்ன செய்தீர்கள்?'' என்பதுதான்.

'ஆபத்துக்குப் பாவமில்லை' என்று விடுதிப் பொறுப்பாளரின் (Hostel Warden) அனுமதியோடு கேன்டீன் பூட்டை உடைத்து, அங்கு ஸ்டோரில் இருந்த பொருட்களை எடுத்த சமையல் தெரிந்த சகோதரர்கள், மற்ற அனைவருக்குமாகச் சமைத்துக் கொடுத்துள்ளனர். இந்த சம்பவத்தின் பின், ஆண்களாக இருந்தாலும் சமையல் தெரிந்து வைத்திருப்பது ஆபத்துக்கு உதவும் என்ற கருத்து அனேக சகோதரர்களிடமிருந்தது வெளிப்பட்டது.

எனவே, பெண்கள் மட்டும் செய்யக்கூடியது என்று முத்திரை குத்தாமல் வீட்டு வேலைகளை ஆண்களும் கற்றுக்கொள்வதே புத்திசாலித்தனமானது. ஆண் குழந்தை-பெண் குழந்தை என்ற பாகுபாடின்றி வீட்டு வேலைகளில் பிள்ளைகளுக்குப் பயிற்சியளிப்பது பெற்றோரின் பொறுப்பாகும். இதன் மூலம், ஆண் பிள்ளையோ பெண் பிள்ளையோ கல்வி, தொழில், பொதுப்பணி (உதாரணம்: சுனாமி, வெள்ள மீட்புப் பணி), சாரணர் பயிற்சி முதலான தேவைகளுக்காக வெளியிடங்களுக்கோ வெளிநாடுகளுக்கோ போய்த் தங்கியிருக்கும் நிலை ஏற்படும்பொழுது பேருதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

அவ்வளவு ஏன், சிக்கன்குனியா காய்ச்சல், எலும்புமுறிவு முதலான ஏதாவது தவிர்க்க முடியாத காரணங்களால் படுத்த படுக்கையாகக் கிடக்கும் பெற்றோருக்கோ, மனைவிக்கோ ஒருவாய் தேநீர் ஊற்றிக் கொடுக்கவாவது இந்தப் பயிற்சி கைகொடுக்காதா, என்ன!

7

# பெண் கல்வியின் அவசியம்

குழந்தைகளிடம் பாரபட்சம் காட்டுவது கூடாது என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். எந்த ஒரு சிறு விஷயத்திலும் நீதியையும் நியாயத்தையும் நேர்மையையும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தும் இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாகக் கொண்டுள்ள நாங்கள், எந்த ஒரு விஷயத்திலும் ஒருபோதும் பாரபட்சமாக நடந்துகொள்வதைக் கண்டிப்பாகத் தவிர்ந்துகொள்ள வேண்டும். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்விலிருந்து இதற்குரிய சிறந்த முன்மாதிரி நம் முன்னால் இருக்கின்றது என்பதை நாம் மனதிற்கொள்ளவேண்டும். நம் கண்மணி ரஸூல் (ஸல்) அவர்களின் முன்னிலையில் இடம்பெற்ற பின்வரும் சம்பவத்தைப் பாருங்கள் (இந்த ஹதீஸ் இரண்டு அறிவிப்பாளர்களால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது).

நுஃமான் பின் பஷீர் (ரழி) கூறியதாவது: என்னை என் தந்தையார் (பஷீர் பின் ஸஅது (ரழி) அவர்கள்) அல்லாஹ்வின் தூதரிடம் கொண்டுசென்று, ''நான் எனது இந்த மகனுக்கு ஓர் அடிமையை அன்பளிப்புச் செய்திருக்கின்றேன்'' என்று சொன்னார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''உங்கள் பிள்ளைகள் அத்தனை பேருக்கும் இதைப் போன்றே அன்பளிப்புச் செய்துள்ளீரா?'' என்று கேட்டார்கள். அதற்கு என் தந்தை ''இல்லை'' என்று பதிலளித்தார்கள். நபி (ஸல்) அவர்கள், ''அப்படியென்றால் அதைத் (உங்கள் அன்பளிப்பைத்) திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறினார்கள்.

*(ஆதாரம் ஸஹீஹ் புகாரி, ஹதீஸ் எண் : 2586)*

எனவே, அன்பளிப்புச் செய்யும்போது எல்லா பிள்ளைகளுக்கும் அன்பளிப்புச் செய்ய வேண்டும் என்ற படிப்பினையை இங்கே நாம் பெறுகின்றோம். ஆனால், உணவளிக்கும் விஷயத்தில் கூட ஒருசில தாய்மார்கள் பாரபட்சம் காட்டுவதை ஆங்காங்கே காணக்கூடியதாக இருப்பது வருந்தத்தக்கது. 'ஆண்பிள்ளை என்றால் முழு முட்டை; பெண் பிள்ளைக்கு அரைவாசி' என்ற ரீதியிலான ஒருதலைப்பட்சக் கவனிப்புகள் இன்று நம்மிடையே இல்லவே இல்லை என்று சொல்லிவிட முடியாது. அது பற்றிக் கேட்டால், "ஆண் பிள்ளை கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டியவன். பெண்பிள்ளை சும்மா வீட்டில் இருக்கப் போகிறவள் தானே? ஆகவே, ஆண்பிள்ளைக்குத் தான் நிறைய சத்தான ஆகாரம் தேவை" என்று விளக்கம் வேறு கிடைக்கும்.

உண்மையிலேயே பெண் பிள்ளைகளுக்கும் சிறுவயது முதல் சத்து நிறைந்த உணவுகளை வழங்குவது இன்றியமையாததாகும். காரணம், ஒரு பெண்பிள்ளை பருவமடைந்ததில் இருந்து மாதாந்தம் எதிர்கொள்ள வேண்டிய இரத்த இழப்பு, திருமணத்திற்கு பின் கர்ப்பம் தரித்தல், பிரசவம், இரு வருடங்கள் குழந்தைக்குப் பாலூட்டுதல் முதலான இன்னோரன்ன காரணங்களால் அதிகளவான சக்தியை இழக்க நேர்கின்றது என்பதை நாமறிவோம். எனவே, அதற்கு ஆரோக்கியமும் உடல் வலுவும் அத்தியாவசியமானதாகும். ஒருசில பெற்றோர்கள் பெண் பிள்ளைகள் விஷயத்தில் இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கத் தவறிவிடுவது வருந்தத்தக்கதாகும். குறிப்பாக, தாய்மார்கள் தமது பிள்ளைகள் விஷயத்தில் எப்போதும் நீதியை, சமத்துவத்தைக் கடைபிடிப்பது என்ற கொள்கையில் உறுதியோடு இருக்கும் பட்சத்தில் பிள்ளைகளுக்கிடையில் பாரபட்சம் நேர்வதை முற்றாகத் தவிர்ப்பது சாத்தியமானதாகும் என்பதை மேலே நாம் குறிப்பிட்டிருந்த ஹதீஸை மற்றோர் அறிவிப்பின் ஊடாகப் பார்க்கின்ற போது தெளிவாகப் புலனாகின்றது.

"ஆமிர் பின் ஷர்ஹபீல் (ரஹ்) அவர்கள் கூறியதாவது நுஃமான் பின் பஷீர் (ரழி) மிம்பரின் மீது நின்றுகொண்டு, என் தந்தை அன்பளிப்பு ஒன்றை எனக்குக் கொடுத்தார். என் தாயார் அம்ரா பின்த்து ரவாஹா (ரழி) அவர்கள் என் தந்தையிடம், "நீங்கள் இதற்கு அல்லாஹ்வின் தூதரை சாட்சியாக ஆக்காதவரை நான் இதை ஒப்புக்கொள்ள மாட்டேன்" என்று கூறினார்கள். என் தந்தை அல்லாஹ்வின் தூதரிடம் சென்று, " அல்லாஹ்வின் தூதரே நான் அம்ரா பின்த்து ரவாஹாவின் வாயிலாக எனக்குப் பிறந்த என் மகனுக்கு அன்பளிப்பு ஒன்றைக் கொடுத்தேன். அவள் (என் மனைவி) தங்களை சாட்சியாக ஆக்கும்படி எனக்குக் கூறினாள்" என்று கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், உங்கள் மற்ற பிள்ளைகளுக்கும் இதே போன்று கொடுத்துள்ளீர்களா?" என்று கேட்டார்கள் அதற்கு என் தந்தை "இல்லை" என்று பதிலளித்தார்கள் அப்போது நபி (ஸல்) அவர்

கள், ''அவ்வாறெனில், அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்கள் பிள்ளைகளிடையே நீதி செலுத்துங்கள்'' என்று கூறினார்கள். இதைக் கேட்ட என் தந்தை உடனே திரும்பிவந்து, தனது அன்பளிப்பை ரத்துசெய்தார்.''

*(ஆதாரம் ஸஹீஹ் புகாரி, ஹதீஸ் எண் 2587)*

இங்கே நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. அதாவது, குடும்பத்தலைவியான அம்ரா பின்த்து ரவாஹா (ரழி) அவர்கள் தன் மகனுக்குக் கணவன் தந்த அன்பளிப்பு தொடர்பில் நபி (ஸல்) அவர்களைச் சாட்சியாக்குமாறு கோருகின்றார். பல குழந்தைகள் இருக்கும்போது ஒரு குழந்தைக்கு மட்டும் அன்பளிப்பு வழங்குவதை விரும்பாத அவர், அது தொடர்பில் கணவரோடு தர்க்கம் செய்யாமல், மறைமுகமாக அதைத் தடுக்க சமயோசிதமாகச் செயல்படுகின்றார், இத்தனைக்கும், பஷீர் பின் ஸஅது (ரழி) அவர்களுக்கு வேறு மனைவி மூலம் பிறந்த பிள்ளைகளும் உள்ளனர் என்பதையும் மேற்கண்ட ஹதீஸிலிருந்தே அறிய முடிகிறது. அந்தப் பெண்மணியின் நேர்மையும் சமயோசிதமும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றதல்லவா?

இன்றைய நம் பெண்கள் மத்தியில் இத்தகைய முன்மாதிரியைக் காண்பது எத்தனை அரிது என்று எண்ணும் போது சற்று வருத்தமாகவே உள்ளது. ஏனெனில், கணவனின் மற்ற மனைவியின் பிள்ளைகளுக்குப் பாரபட்சம் காட்டப்படுவதை விரும்பாதது ஒருபுறமிருக்கட்டும். தானே பெற்றெடுத்த பிள்ளைகளிடம் கூட நீதமாக நடந்துகொள்ள முடியாத பல வீனமான மனநிலையில் பல தாய்மார்கள் இருக்கிறார்கள் என்பதே நிதர்சனம். இது, ஆண்-பெண் என்றவகையில் பால்ரீதியான பாரட்சமாக மட்டுமின்றி, அழகு, செல்வநிலை, திறமை முதலான இன்னோரன்ன விஷயங்களை அடிப்படையாக வைத்தும் எழுகின்றது எனலாம்.

சில சமயங்களில் இத்தகைய பாரபட்சம் காட்டும் இழிகுணம் இன்னும் ஒருபடி தாண்டி, பேரப்பிள்ளைகள் வரை நீண்டுவிடுவதும் உண்டு. அதாவது, செல்வ வளம் உள்ள பிள்ளைகளின் குழந்தைகளிடம் ஒருவிதமாகவும், ஏழ்மையான நிலையிலிருக்கும் பிள்ளைகளின் குழந்தைகளிடம் இன்னொரு விதமாவும் நடந்து கொள்ளும் போக்கு, மகனின் குழந்தைகள்-மகளின் குழந்தைகள் என்ற அடிப்படையில் தோன்றும் பாரபட்சம் என்பவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இத்தகைய பாரபட்சமான கவனிப்புகளும், உபசாரங்களும், பிஞ்சு மனங்களில் நஞ்சு விளைவதற்குக் காரணமாகி விடுகின்றன என்ற வகையில் இதுகுறித்து எச்சரிக்கையாகச் செயற்படுவதோடு, அல்லாஹ்வின் தண்டனைக்கும் நாம் அஞ்சவேண்டும். எனவே, இத்தகைய இழிவான பண்பு நம்மை அண்டிவிடாமல் இருக்க அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுவோமாக!

அன்பளிப்புகளை வழங்கும் விஷயத்தைப் பொறுத்தவரையில் பிள்ளைகளின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்குவது நம்மீது குற்றமாகாது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, ஒரு பிள்ளைக்குக் கம்ப்யூட்டர் ஒன்றும் இன்னொரு பிள்ளைக்கு வீடியோ கெமரா ஒன்றும் தேவையாக உள்ளன என்று வைத்துக்கொள்வோம். இந்த இடத்தில் குறித்த பொருள்களும் அவற்றின் விலைகளும் வெவ்வேறானவையே என்பதையிட்டு அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. அவர்களின் தேவைக்கும் பயன்பாட்டுக்கும் அமைய அவற்றை வழங்கலாம், தப்பில்லை. இங்கு, ஒரு பிள்ளைக்கு எதனையேனும் வழங்கும் போது மற்ற குழந்தைக்கு எதுவும் வழங்காமல் புறக்கணிப்பது கூடாது என்பதே கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பிரதானமான அம்சமாகும்.

## பெண் குழந்தைக்கு நிறைவான கல்வி புகட்டுவதன் அவசியம்

அறிவியலில் வளர்ச்சி கண்டுள்ள நிலையிலும், மார்க்கப் போதனைகள் முன்னரைவிட அதிகமாகவும் விரைவாகவும் மக்களைச் சென்றடையக் கூடிய வசதி வாய்ப்புக்கள் பெருகியுள்ள போதிலும் ஆண் குழந்தை-பெண்குழந்தை என்று வரும் போது நம்முடைய பெற்றோர்களில் சிலர் பாரபட்சமாக நடந்து கொள்வதை அன்றாட வாழ்வில் நாம் கண்கூடாகக் கண்டுவருகின்றோம் என்பதையும் மறுப்பதற்கில்லை. இதற்குரிய அடிப்படைக் காரணம் பெண்ணடிமைத்தனத்தில் இருப்பதுதான் என்றால் மிகையல்ல.

அவ்வாறு பெண்களைத் தாழ்ந்தவர்களாகச் சித்தரிக்கும் சமயம் சார்ந்த புராண, இதிகாசப் பாரம்பரியம் கொண்ட பிற சமூகத்துப் பெண்கள் கூட இன்று முறையான கல்வியை, அதிலும் உயர் கல்வியைப் பெற்று எத்தனையோ துறைகளில் மேம்பட்டு மிளிர்கின்றார்கள். இவ்வளவுக்கும் இஸ்லாம்தான் முதன் முதலில் பெண்ணுக்குக் கண்ணியமும் உரிமைகளும் வழங்கிய உன்னத மார்க்கம் என்பதை மேடைகளில் முழுங்கும் நம்மவர் வீடுகளில்கூட பெண் குழந்தைகள் தமக்குரிய நியாயமான உரிமைகளை, குறிப்பாகக் கல்வி உரிமையைப் பெற்றுக் கொள்கிறார்களா என்பது ஊன்றி அவதானிக்கப்பட வேண்டிய ஒரு விஷயமாகும். ஆண் குழந்தைகளைப் போலவே உலகக் கல்வி, மார்க்கக் கல்வி (இவ்வாறு கல்வியைப் பிரிப்பதில் தனிப்பட்ட முறையில் எனக்கு உடன்பாடில்லை. எனினும், வழக்கினைக் கருதி தெளிவுக்காக இங்கு குறிப்பிட்டுள்ளேன்.) ஆகிய இரண்டையும் பெறுகின்ற முழு உரிமையும் நமது பெண் குழந்தைகளுக்கும் இருக்கின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஏனெனில், ஒரு குடும்பத்தைப் பொறுத்தவரையில் ஓர் ஆண் கல்வி பெறுவது அவனுக்குப் பயனளிக்கிறது. ஆனால், ஒரு பெண்ணுக்கு வழங்கப்படும் நிறைவான கல்வியினால் அவளின் கீழ் உருவாகும் அடுத்த

தலைமுறையும் சேர்ந்து பயனடைகின்றது என்பதை நாம் எப்போதும் நினைவிற்கொள்ள வேண்டும். எனவே, ஆணுக்குப் போலவே பெண் குழந்தைக்கும் உரிய கல்வியை முழுமையாக வழங்குவது இன்றியமையாததாகும். அதன் மூலம் நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் வேகமானதும் சிறப்பானதுமான சமூக மாற்றம் இன்ஷா அல்லாஹ் சாத்தியமாவது திண்ணம்.

அது மட்டுமல்ல, இன்று எத்தனையோ குடும்பங்களிலே பெண்களும் குடும்ப பாரத்தைச் சுமப்பதிலும் தமது பெற்றோரைப் பராமரிப்பதிலும் சகோதர சகோதரிகளுக்காகச் செலவழிப்பதிலும் பங்களிப்புச் செய்து வருகின்றார்கள். திருமணத்தின் பின்னர் கணவனுக்கும் பொருளாதார ரீதியில் தோள் கொடுத்து உதவுகின்றார்கள். அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுகளை ஈடுகட்டுவதில் பெண்களின் உழைப்பும் கணிசமாகப் பயன்பட்டு வருகின்றது என்பதை யாராலும் மறுத்துவிட முடியாது. ஆண் பிள்ளை மட்டும்தான் பெற்றோரைக் கடைசிக் காலத்தில் வைத்துப் பராமரிப்பார்கள் என்ற பழைய வாய்ப்பாடு தற்போது பொய்த்துப் போய்விட்டது. வயோதிகர்களான பெற்றோரை நல்லமுறையில் வைத்துப் பராமரிக்கும் எத்தனையோ பெண்மக்களை இன்று நாம் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இதற்கு அவர்களுக்கு அந்தப் பெற்றோர் வழங்கிய சிறந்த கல்வியே ஆதாரமாக இருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

என் தோழியின் குடும்பத்தில் நடந்த சம்பவம் இது. அந்தத் தாயார் தன்னுடைய மூத்த பெண்ணைப் பெரும் சுமையாகக் கருதிப் பாரபட்சம் காட்டியும், இளைய மகனுக்கு நிறைவான சொகுசுளை வழங்கியும் வளர்த்து வந்தார். ''என் மகன் தான் நாளைக்கு என்னை வைத்து சோறு போடப் போகின்றான். உன்னால் பெரிய செலவுதான் எனக்கு. என்றைக்காவது நீ இன்னொரு வீட்டுக்குப் போகப் போகிறவள் தானே'' என்றெல்லாம் அடிக்கடி சலித்துக்கொண்டே சொல்லுவார். எதையெடுத்தாலும் மகனுக்கே முன்னுரிமையும் சலுகையும் வழங்குவார். மகள் எது செய்தாலும் குற்றம் சொல்லும் ஒருவித மனநிலையில்அந்தத் தாயார் இருந்தார். ''அவங்க எனக்கும் உம்மா தானே? நானும் அவங்கட வயிற்றில் பிறந்தவதானே? அப்படியிருக்கும்போது எனக்கு மட்டும் ஏன் இப்படிப் பாரபட்சம் காட்டுறாங்க?'' என்று பல தடவை சொல்லி அழுதிருக்கிறாள்.

எனினும், பிற்காலத்தில் அந்தத் தாயார் முற்றிலும் எதிர் பாராத விதமாகச் சம்பவங்கள் நடந்தேறின. படித்துப் பட்டம் பெற்று நல்லதொரு தொழிலில் அமர்ந்து கையோடு வசதியான குடும்பமொன்றில் மண முடித்து ஒதுங்கிக் கொண்டுவிட்டான், அந்த மகன். மாதம் ஒரு தடவையேனும் அருமை அன்னையை வந்து பார்த்துவிட்டுப் போவதற்கும் நேரமில்லை அவனுக்கு. ஓர் ஆசிரியையாகப் பணியாற்றும் என்னுடைய தோழி இன்றுவரை (திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்கு தாயான

நிலையிலும்) தன் தாயாரை அன்போடு பராமரித்து வருகின்றாள். என்ற போதிலும், அந்தப் பெண்மணி தன் ஆசை மகனின் இந்தப் புறக்கணிப் பைத் தாங்கிக்கொள்ளவே முடியாத நிலையில் நொந்து போயிருக்கிறார். இப்படி பற்பல சம்பவங்களை படிப்பினையைப் பெறுவதற்குத் தவறி விடுகின்றோம்.

இஸ்லாத்திலே திருமணத்தின்போது வழங்கப்படும் மஹர் எனும் மணக்கொடை பெண்ணின் வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாய் அமை தல் வேண்டும். இன்று நம் மத்தியில், இஸ்லாத்தில் சொல்லாத சீதனம் எனும் அனாசாரம் தலைவிரித்தாடும் நிலையைக் காண்கிறோம். ஐம்ப தாயிரம், ஒரு லட்சம் என்று வரதட்சனை வாங்கிவிட்டுக் கண் துடைப் புக்காக ஆயிரமோ ஐநூறோ மஹராகக் கொடுக்கும் அவலம் அரங்கேறி வருவதைக் காண்கிறோம். இந்தச் சொற்பத் தொகையை வைத்துக்கொண்டு திடீரென்று ஏற்படக்கூடிய அனர்த்தங்களின் போது ஒரு பெண்ணால் எப்படி சமாளிக்க முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப் பட்டுள்ளோம்.

ஒரு பெண் திருமணம் முடித்தபின் தன் கணவனை இழந்துவிட்ட நிலை யிலோ கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றுவிட்டாலோ அல்லது கண வனால் கைவிடப்பட்டாலோ தானும் குழந்தைகளும் பிறருக்குப் பார மாகாமல், பிச்சையெடுத்துத் திரியாமல் கௌரவமானதொரு வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு அந்தப் பெண்ணின் கல்வி அவளுக்குக் கை கொடுக்கக் கூடியதாக அமையும் இத்தகைய பல பெண்களை நான் சந் தித்துள்ளேன். விதவையான நிலையிலும் அடுத்தவரிடம் கையேந்தாமல், தான் பெற்ற கல்வியின் துணையோடு கௌரவமான ஒரு தொழிலைச் செய்து குழந்தைகளை நல்லமுறையில் வளர்த்து ஆளாக்கிய பல தாய் மார்கள் நம் மத்தியில் உள்ளனர். அல்லாஹ் அவர்களுக்கு மறுமையி லும் கண்ணியமளிப்பானாக! அந்த வகையில், ''பெண்பிள்ளை படித்து என்ன செய்யப்போகிறாள், தொழில் செய்ய அனுப்பும் உத்தேசமும் இல்லை. எனவே, அவளின் படிப்புக்காகப் பணத்தைச் செலவழிப்பது வீண். அதை சேமித்து வைத்தால் திருமணத்தை விமரிசையாக நடத்தவே னும் அந்தப் பணம் உதவும்'' என்பன போன்ற பிற்போக்குத்தனமான எண்ணங்களைத் தள்ளிவைக்க வேண்டிய காலம் கனிந்து விட்டது. நம் முடைய சமுதாயத்திலிருந்தும் கல்வியில் சிறந்த பெண் மருத்துவர்கள், பெண் செவிலியர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் அதி களவில் தோன்றவேண்டிய தேவை நம்முன் நிற்கிறது. வேலைக்குப் போவ தற்கு என்றில்லாவிட்டாலும் மிகச் சிறந்த வருங்காலத் தலைமுறையைத் திறம்பட உருவாக்குவதற்காகவேனும் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பெண் ணும் சிறந்த முறையில் கல்வி கற்றிருப்பது இன்றியமையாததாகின்றது. எனவே, ''அடுப்பூதும் பெண்களுக்கு ஏடும் எழுத்தாணியும் ஏன்?'',

''பெட்டைக்கோழி கூவி பொழுது விடியுமா?'' என்பன போன்ற பிற கலாசாரத்துக்குரிய பெண்ணடிமைத்தனக் கருத்துக்களை முற்றாகக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, நம்முடைய சமுதாயம் புதுவிடியல் காணும் வகையில் அறிவார்ந்த திறன் வாய்ந்த நாளைய தலைமுறையைக் கட்டி யெழுப்பும் பணியில் நம்முடைய பெண்களைத்தயார்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும் என்பதை நாம் உணர்ந்து, அதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

# 8

## ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

அன்றாட வாழ்வின் நெறிமுறைகளைப் பயிற்றுவிப்பதற்கு இஸ்லாம் முன்னுரிமை அளிப்பதை நாமறிவோம். எந்த ஒரு மனிதனின் பண்புசார் நடத்தையிலும் அவன் வளர்ந்த சூழல் பெரிதும் செல்வாக்கு செலுத்துகின்றது. குறிப்பிட்ட ஒரு மருத்துவர் கன்னாபின்னாவென்று நோயாளிகளிடம் எரிந்துவிழுவது வழக்கம். விசேட வைத்திய நிபுணர் என்றும் கைராசிக்கார டாக்டர் என்றும் மக்கள் மத்தியில் பிரபலம் பெற்றிருந்த போதிலும் இங்கிதமாகப் பேசத் தெரியாதவர் என்ற விமர்சனமும் அவரோடு ஒட்டிக்கொண்டிருந்தது. ஒருமுறை பாடசாலை மாணவர்களின் நடத்தைப் பிறழ்வுகளை நிவர்த்திப்பது எப்படி என்பது குறித்து சில வைத்திய நண்பர்களோடு உரையாடிக் கொண்டிருந்தபோது, குறித்த வைத்தியரைப் பற்றிய பேச்சும் தற்செயலாக வந்துவிட்டது. அப்போது ஒரு நண்பர் குறுக்கிட்டு நான் ஆரம்பத்திலேயே சந்தேகப்பட்டேன். அவரது 'ரூட்' - வேர் பற்றி அவர் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என இலங்கையில் எல்லாத்துறையிலும் மிகப் பின்தங்கிய ஒரு பிரதேசத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார். அவர் ஒரு பண்பட்ட சமூகப் பின்னணியில் இருந்து வந்திருந்தால் இத்தகைய ஒருவித காட்டுமிராண்டித்தனமான அல்லது கரடுமுரடான தன்மையுடையவராக இருந்திருக்க மாட்டார் என்று அடித்துச் சொன்னார், அந்த டாக்டர்.

நான் அதனை மற்றொரு விதமாக நோக்கினேன். அவ்வளவு பின்தங்கிய ஒரு கிராமத்திலிருந்து விடாமுயற்சியோடு படித்து முன்னேறி மருத்துவத்துறையில் இன்று ஒரு கன்சல்ட்டனாகவும் தனது திறமைக்காக தேசிய விருது பெற்றவராகவும் திகழும் அந்த மனிதரின் சூழலும் பண்பட்டதாக அமைந்திருந்தால் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்! விளக்கின் அடியில் உள்ள இருள்வட்டம் போல இங்கிதமாகப் பேசவே தெரியாத முரடன் என்ற பிம்பத்தை அவர் அடையவேண்டி நேர்ந்திருக்காதே என்று கவலையாக இருந்தது. எனவே வாழ்க்கையிலும் கல்வியிலும் எவ்வளவுதான் சாதனைகளை நிலைநாட்டி உயர்நிலையை எய்தினாலும் தம்முடைய இயல்பான குணக்கேடுகள் நடத்தைகளால் சமூகத்தால் இழிவாக நோக்கப்படும் அவல நிலை தோன்றிவிடாமல் தவிர்த்துக் கொள்வது நல்லதொரு குடும்பச் சூழ்நிலை இருந்தாலேயே சாத்தியமாகிறது. இந்த அத்தியாயத்தில் அதுபற்றி நோக்குவோம்.

**தொட்டில் பழக்கங்கள்...**

''தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.'' ''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?'' என்றெல்லாம் எத்தனையோ பழமொழிகளை நாம் படித்திருக்கிறோம். இவை வெறுமனே பழமொழிகள் மட்டும்தானா? இல்லை. அவற்றிலும் கூட வாழ்க்கையின் நுணுக்கமான தத்துவங்கள் பல பொதிந்துள்ளன என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். பெற்றோராகிய நம்முடைய வளர்ப்பில்தான் நம் குழந்தைகள் செம்மையான முறையிலோ செம்மையற்ற முறையிலோ உருவாகிறார்கள் என்பது எப்போதும் நம் நினைவை விட்டகலக் கூடாது. எனவே சின்னஞ்சிறு வயது முதலே தாய்மடியாகிய நம் பள்ளிக்கூடத்தில் நல்ல மாணாக்கராக குழந்தைகள் வளர்வதற்கேற்றவாறு பயிற்றுவிக்க வேண்டியது பெற்றோரின், குறிப்பாகத் தாயின் கடமை. சின்னச் சின்ன விஷயங்களில் நாம் காட்டும் அக்கறை குழந்தைகளின் நடத்தைக் கோலத்தில் பெருமளவு தாக்கம் செலுத்துகின்றது. வீட்டில் நாம் கையாளும் பேச்சுமொழி அதில் மிக முக்கியமானது. வீட்டினுள் நுழையும் போதோ, யாரையாவது சந்திக்க நேரும்போதோ ஸலாமுரைக்கும் பழக்கமுள்ள பெற்றோராக நீங்கள் திகழ்ந்தால், அந்தப் பழக்கம் வெகு இயல்பாகவே உங்கள் குழந்தைகளிடமும் தொற்றிக் கொள்ளும். அவ்வாறே யாராவது எதையேனும் கேட்டு வந்தால் முகமலர்ச்சியோடு கொடுத்துதவும் தாயாக நீங்கள் இருப்பதைக் காணும் உங்கள் பிள்ளை, கொடைப் பண்பை இயல்பாகவே பெறுகின்றது. வீட்டு வாசலில் ஸதகா கேட்டு யாரேனும் வந்தால் குழந்தைகளின் கைகளில் காசைக் கொடுத்துக் கொடுக்கச் செய்யலாம். கூடவே நாம் அடுத்தவர்களுக்கு உதவினால் அல்லாஹ் நம்மோடு அன்புகொள்வான் இன்னும் நிறைய செல்வத்தைத் தருவான் என்று எளிய முறையில் எடுத்துச்

சொன்னால் இன்ஷா அல்லாஹ் அதன் விளைவு மிக நல்லதாகவே அமை யும் என்பதை நீங்கள் நிச்சயம் கண்டுகொள்வீர்கள்.

சில வீடுகளில் பேசும்போது வெகு சகஜமாக தூஷண வார்த்தைகளை, கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவதுண்டு. வளரும் பிள்ளைகள் அவற்றைத் தம்மையறியாமலேயே உள்வாங்கிக் கொள்கின்றனர். சில குடும்பங்களைப் பொறுத்தவரை அக்கம் பக்கமுள்ள மோசமான வீட் டுச் சூழலும் எதிர்மறைத் தாக்கம் செலுத்துவதையும் மறுப்பதற்கில்லை. உதாரணமாக, குடித்து விட்டு வந்து வீட்டில் மனைவி, பிள்ளைகளை அடித்து, இம்சித்து கெட்ட வார்த்தைகளைக்கூறி கத்திகலாட்டா செய்யும் ஒருவன் அடுத்த வீட்டுக்காரனாக அமைந்துவிட்டால் அதைவிட தலை வேதனை வேறொன்றும் இல்லை என்றுவிடலாம்.

நம்முடைய வீட்டில் எவ்வளவுதான் பிரச்சினைகள், சிக்கல்கள் இருந் தாலும் அவற்றைப் பற்றிய சர்ச்சைகள், வாதவிவாதங்களை குழந்தைக ளின் முன்னிலையில் ஒருபோதும் வைத்துக் கொள்ளக்கூடாது. சில வீடு களில் குழந்தைகளின் முன்னால் கணவன்மார் மனைவியைத் திட்டி மட் டந்தட்டுவதுண்டு அடிப்பதுமுண்டு. இன்னும் சில இடங்களில் தலை கீழான நிலைமை. குழந்தைகள் இருக்கிறார்களே என்ற முன்யோசனை யின்றி கணவரை எடுத்தெறிந்து பேசும் பெண்களும் இருக்கத்தான் செய்கி றார்கள். இத்தகைய நடவடிக்கைகளின் பின்விளைவுகள் எப்படியானவை தெரியுமா?

குழந்தை தன் தாயை, தந்தையை மதிக்காமல் போகும் என்பதோடு தாய்க்கோ, தந்தைக்கோ கட்டுப்படாமல் வளர முற்படும். எனவே மூத்த வர்களை, ஆசிரியர்களை மதிக்காத போக்கும் கூட அப்பிள்ளையின் நட வடிக்கைகளில் வெளிப்பட இடமுண்டு. பிற்காலத்தில் தமது பெற்றோ ரைப் பராமரிக்காமல் கைகழுவிவிட்டுப் போகும் பிள்ளைகளின் கடந்த காலத்தை ஆராய்ந்து பார்த்தால் பெற்றோரின் முன்யோசனையற்ற நடவ டிக்கைகளால் உளவியல் ரீதியான எதிர்மறை மனப்பதிவும் ஒரு வலு வான காரணமாக அமைந்திருப்பதைக் கண்டுகொள்ளலாம். எனவே பிள் ளைகள் ஸாலிஹானவர்களாக உருவாக வேண்டுமென்றால் நாம் அதற் கேற்ப அவர்களை வழிநடத்த வேண்டியவர்களாகவும் இருக்கிறோம் என் பதையும் மறந்து விடக்கூடாது.

என் தோழி ஒருத்தியின் வாழ்வில் நடந்த மிகத் துக்ககரமான நிகழ் வாக அவளது திருமண வாழ்வு அமைந்துவிட்டது. அவர் ஒரு வழக்கறி ஞர். பார்ப்பதற்கு நல்ல வாட்டசாட்டமான மனிதர். தொழுகை முதலான அமல்களில் ஈடுபடுபவர். இஸ்லாமிய இயக்கமொன்றுடன் நெருங்கிய தொடர்பும் அவருக்கு இருந்தது. மார்க்கப் பற்றுள்ள நல்ல மனிதர் என்று பலரும் சிபாரிசு செய்ததால் அவர் முதல் மனைவியை விவாகரத்துச்

செய்தவர் என்பதையும் கருத்திற்கொள்ளாமல் அவரை மணக்க உடன் பட்டாள் என் தோழி.

அழகிலும் படிப்பிலும் வசதியிலும் அவளுக்கு எந்தக் குறையும் இருக் கவில்லை. பல்கலைக்கழகத்தில் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் உப வேந்தரிடமிருந்து (Vice Chancellor) தன் உயர் திறமைக்காகப் பதக்கம் பெற் றவள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இலங்கையின் பெரும்பான்மை மொழியில் தஃவா செய்யுமுகமான பல கட்டுரைகளையும் எழுதி வந் தாள். அவள் எதிர்பார்த்ததெல்லாம் இஸ்லாத்துக்காக உழைக்கக்கூடிய மார்க்கப்பற்றுள்ள ஒரு கணவர் என்ற தகைமையை மட்டும்தான்.

இந்நிலையில் திருமணமான அன்றே அவளது தலையில் இடிவிழுந் தது போலாயிற்று. அந்த நபரின் கடுமையான போக்கும் பேச்சும் அவ ளுக்கு அதிர்ச்சியளிப்பதாய் இருந்துள்ளன. நாளுக்கு நாள் சித்திரவதை கள் அதிகரித்துள்ளன தன்னை நம்பி வந்த பெண்ணை தன் இளம் மனை வியை ஒரு மிருகத்தை நடத்துவது போல் அந்த மனிதர் காட்டுமிராண் டித்தனமாக நடத்தியுள்ளார். இதற்கிடையில் தற்செயலாக முதல் மனை வியின் தொடர்பு கிடைக்கிறது அவளுக்கு அவள் தன் பங்குக்கு தான் அனுபவித்த சித்திரவதைகளையெல்லாம் சொல்லிக் கண்ணீர் வடித் துள்ளாள்.

ஏற்கெனவே தெரிந்திருந்தால் யாராவது வந்து விசாரித்திருந்தால் உண் மைகளைச் சொல்லி இந்தத் திருமணத்தைத் தடுத்திருப்பேன் என்று சொல்லி ஆதங்கப்பட்டு இருக்கிறாள். என் தோழியின் வீட்டினர் செய்த மிகப் பெரிய தவறு ஆழமாக விசாரிக்காமல் மேம்போக்கான நடவடிக் கைகளை வார்த்தைக்கு வார்த்தை இஸ்லாம் பேசுவதை நல்ல மனிதர் என்பதற்கான அடையாளமாக எடுத்துக் கொண்டதுதான். மூன்று மாத காலத்துடன் திருமண வாழ்வு முறிந்துபோய் விட்டது. நன்கு படித்த புத் திசாலியான என் தோழி தனக்கு நேர்ந்த அனுபவங்களை அலசி ஆராய்ந்து தெரிந்துகொண்டதை என்னிடம் பகிர்ந்து கொண்டாள் அது எனக்குப் பெரும் அதிர்ச்சியூட்டுவதாக அமைந்திருந்தது.

தன் கணவனின் இந்த அசாதாரணமான நடத்தைக்குக் காரணம் சிறுவ யது முதல் அந்த நபர் வீட்டில் எதிர்கொண்ட நிகழ்வுகள்தாம். அறிவுதெ ரிந்த நாள் முதல் அவரின் தந்தை தாயாரை எடுத்ததற்கெல்லாம் அடித்தும், உதைத்தும் இம்சித்து வந்துள்ளார். என்ன சொன்னாலும் மறுவார்த்தை பேசாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது அந்த வீட்டில் எழுதப்படாத சட்டம். மீறி மனைவி ஏதாவது ஒரு வார்த்தை பேசிவிட்டால் எத்தனை பேர் முன்னால் என்ற போதிலும் "பளார்" என்று ஓர் அறைவிழும்.

மகன் வளர்ந்து பெரியவனான பின்பும் அம்மாவுக்கு தந்தை அடிப்ப தும் உதைப்பதும் கெட்ட வார்த்தையால் ஏசுவதும் முற்றாக நின்றுவிட

வில்லை. தொடர்ந்து சிந்தனைகளுக்கும் ஆட்பட்டவராக அந்த நபர் வளர்ந்து வந்துள்ளார். படித்து நல்லதொரு தொழிலில் அமர்ந்த பின்னரும் இந்த உளவியல் தாக்கம் அவரைப் பேயாய் ஆட்டிப் படைத்துள்ளது. வெளித்தோற்றத்தில் மிக அமைதியானவர் போலத் தோற்றமளித்த அவரின் உள்ளத்தில் வன்மமும் வக்கிரமான பழிவாங்கும் உணர்வும் ஆழ்ந்து நிலைத்துவிட்டன.

தன் மனைவியரை வதைப்பதைத் தன்னுடைய மன உளைச்சலுக்கான வடிகாலாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளார். இது மிக அபாயகரமான நிலைமை என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. எனவே பெற்றோராகிய நாம் பிள்ளைகளுக்குரிய புறத்தேவைகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்துக்கு சற்றும் குறையாத வகையில் அவர்களின் உளவியல் தேவைகளுக்கும், சிறப்பான உளப்பாங்கு கட்டியெழுப்பப்படுவதற்கும் அதிகக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டியது கட்டாயமானதாகும்.

மனைவி அதிகம் மட்டந்தட்டப்படும் வீடுகளில் வளரும் ஆண் பிள்ளைகளின் மனதில் பெண்களைப் பற்றி மிகத் தாழ்வான அபிப்ராயமே ஊன்றி வளரும் என்பதோடு, அது அவர்களுடைய எதிர்கால நல்வாழ்வையும் கடுமையாகப் பாதிக்கும் என்பதையும் நாம் ஒவ்வொருவரும் மனதில் கொள்ள வேண்டும். மனிதன் தன்னைத் தவிர வேறு யாருக்கும், எதற்கும் தலைவணங்காது சுயகௌரவத்தோடு வாழவேண்டும் என்று நமக்குக் கற்றுத்தரும் அல்லாஹ், ஆணோ பெண்ணோ மற்றொரு முஸ்லிமின் சக மனிதனின் மானமும், மரியாதையும் அமானிதம் என்றும், அதனைச் சிதைக்க எவருக்கும் உரிமை இல்லை என்றும் மனித உரிமையை மதிக்கவும் பயிற்றுவிக்கின்றான். இது கணவன் மனைவி விஷயத்திலும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். தவறும் பட்சத்தில் அத்தகைய போக்கு எதிர்காலத் தலைமுறையையும் எதிர்மறையாகப் பாதிக்கக்கூடும் என்பதையே மேற்படி சம்பவம் நமக்கு உணர்த்துகின்றது. இதனால் தான் அல்லாஹ் தஆலா கூறுகின்றான் :

''ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (எந்நிலையிலும்) நேர்மையான சொல்லையே சொல்லுங்கள். அழகானதைப் பேசுங்கள்! பெற்றோருக்கும், உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், மிஸ்கீன்(களான ஏழை)களுக்கும் நன்மை செய்யுங்கள் மனிதர்களிடம் அழகானதையே பேசுங்கள்.''

*(அல்குர்ஆன் 02 : 83)*

எனவே, எப்போதும் அழகான முறையில் பேசவேண்டிய நாம் குழந்தைகளின் முன்னிலையில் அதனை மிக ஆழமாகக் கடைபிடிக்க வேண்டும். பிள்ளைகளின் முதலாவது ''முன்மாதிரி - ரோல் மாடல்'' - அக்குழந்தையின் பெற்றோர் தாம். அவர்களைப் பார்த்துத்தான் அது தன்

மொழியை, நடவடிக்கைகளைக் கற்றுக் கொள்கின்றது. தன்னுடைய மனப் பாங்கை சிந்தனையைக் கட்டமைத்துக் கொள்கின்றது. இது திட்டமிட்ட அடிப்படையில் அன்றி தன்னிச்சையாக ஏற்படுகின்றது என்பது ஆழ்ந்து கவனிக்கத் தக்கது.

கணவன் - மனைவியிடையே சுமுகமான நல்லுறவு நிலவும், கலக லப்பான ஆரோக்கியமான உரையாடல் நிகழும் சூழ்நிலையில் வளரும் பிள்ளைகள் மன உளைச்சலோ பாதிப்போ அற்றவர்களாக, கலகலப்பான சுபாவம் உடையவர்களாக, வாழ்க்கையை இலாவகமாக எதிர்கொள்ப வர்களாக தோழமையான சுபாவம் கொண்டவர்களாக உருவாகிறார்கள் என்பதை சற்றே நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால் கண்டறிந்து கொள்ள லாம். அவர்கள் தமது பெற்றோரை நன்கு மதிப்பவர்களாக, அவர்களுக்கு உரிய கண்ணியத்தை வழங்குபவர்களாக, தமது பெற்றோர் பற்றிய பெரு மிதமான உணர்வுடையவர்களாக அவர்களைத் தமது நண்பர்களைப் போல நடத்தும் பண்புடையவர்களாக இருப்பார்கள்.

என்னுடைய மாணவர்களில் இத்தகைய அருமையான ஆளுமைகளை (Personalities) நான் சந்தித்துள்ளேன். அவர்களின் பெற்றோர்களுடனும் நெருங்கிப் பழகியுள்ளேன் அவ்வாறே பல்வேறு உளவியல் தாக்கங்களுக் குட்பட்டு மன உளைச்சலால் துன்புற்ற மாணவர்களையும் நான் சந்தித் துள்ளேன். அவர்களின் பிரச்சினைக்கான வேர் எங்குள்ளது என்று ஆராய்ந்து பார்க்கும்போது தவிர்க்க முடியாமல் அது குடும்பச் சூழலி லேயே தோன்றி வளர்ந்துள்ளது என்பதையும் உணர்ந்துகொள்ள முடிந் தது. எனவே, தீய விளைவுகள் தோன்றிய பின் வருந்துவதை விட வரு முன் காப்பதே அறிவுடைமையாகும்.

அந்த வகையில் நம்முடைய குழந்தை நமக்கும் சமுதாயத்துக்கும் நன் மையளிக்கும் வகையில் வளரவேண்டும் என்று நாம் விரும்பினால், நாம் மரணித்த பின்பும் அந்தக் குழந்தையால் நமக்கு நன்மைகள் வந்தடைய வேண் டும் என்று ஆசைப்பட்டால் நாம் நம்முடைய அன்றாட வாழ்வில் நம்மு டைய சொற்களையும் நடவடிக்கைகளையும் மிகக் கவனமானதாக நேர்த்தி யானதாக வடிவமைத்துக் கொள்ளவேண்டியது இன்றியமையாததாகும்.

மந்திரத்தால் மாங்காய் விழாது என்பது போல நாம் கடுமையாக முயற் சித்து உழைக்காவிட்டால் நல்ல விளைவை அடைய முடியாது. ஆகவே பெற்றோராகிய நாம் அமானிதமாக நம் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ள குழந்தைகளின் உள்ளங்கள் சீராக அமைவது குறித்தும் ஆழ்ந்த கவனமெ டுப்பது கடமையாகும். இதற்காகக் கருத்தரித்ததிலிருந்தே ஒவ்வொரு தாயும் தயாராக வேண்டும் என்பது அறிவியல் கூறும் உண்மையுமாகும். தாயின் மனப்பாங்கு கருவிலுள்ள பிள்ளையிலும் செல்வாக்குச் செலுத்து கின்றது.

எனவேதான் கர்ப்பவதியாக இருக்கும் பெண்கள் தமது உள்ளத்தை சீராகவும் அமைதியாகவும் வைத்துக்கொள்வது முக்கியம் எனப்படுகின்றது. அதிகம் குர்ஆன் ஓதுதல் திக்ர் செய்தல் என்பவற்றின் மூலம் அத்தகைய ஆரோக்கியமான உளநிலையை ஏற்படுத்திக் கொள்வதற்கு அவர்கள் முயற்சிக்க வேண்டும். அவ்வாறே கர்ப்பிணியாக இருக்கும் தம் மனைவியரை மிக அன்பாகவும், கருணையுடனும் பராமரித்து அவர்களுடன் மிக இதமாக நடந்துகொள்ள வேண்டியது கணவன்மாரின் கடமையுமாகும்.

9

# பாடாய்படுத்தும் காதல்

"டீன் ஏஜ்" எனப்படும் வயதுப் பிள்ளைகளின் உள்ளத்தில் பல்வேறு வகையான மனக்கிளர்ச்சிகள் தோன்றுவது இயல்பு. அவர்களின் உள்ளத்தில் வித்தியாசமான, விசித்திரமான, வசீகரமான எண்ணங்கள் சிறகடித்துப் பறக்கத் தொடங்குவது இந்த வயதில்தான் என்றே சொல்லலாம்.

பெற்றோராகிய நாம் இந்த பருவத்தை அடைந்திருக்கும் நமது பிள்ளைகளின் உளப்பாங்கையும் புறச் செயற்பாடுகளையும் கூர்ந்து கவனிக்க வேண்டிய காலகட்டம் இதுவாகும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் அதற்காகக் காலம் முழுதும் கண்ணீர் சிந்திக் கதறும் நிலையும் ஏற்படலாம். இந்த அத்தியாயத்தில் அது குறித்து நோக்குவோம்.

வயதுப் (teen age) பிள்ளைகள் விஷயத்தில் பெற்றோர்கள் எதிர்கொள்ளக்கூடிய ஒரு பெரும் பிரச்சனை என்று இந்தக் "காதல்" விவகாரத்தைக் குறிப்பிடலாம் என நினைக்கின்றேன். முதலில், பெற்றோராகிய நாம் 'எதிர்பால் கவர்ச்சி' (opposite sex) என்பது இயல்பான ஒரு மனவெழுச்சி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சினிமா, சின்னத்திரை, திரையிசைப் பாடல்கள், மூன்றாந்தரப் பத்திரிகைகள், நாவல்கள் என்பன "காதல்" உணர்வு பற்றிய அதீதக் கற்பனைகளை, ஒருவகையான சுவாரசியத்தை இளம் உள்ளங்களில் விதைப்பதில் பெறும் பங்கு வகிக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

இந்த நிலையில் வெறும் எதிர்பால் கவர்ச்சியைக் 'காதல்'என்று நம்பி அது புனிதமானது அதற்பொருட்டு பெற்றோரையும் குடும்பத்தையும் உத றித்தள்ளலாம் அது நிறைவேறாத பட்சத்தில் சாவதே ஒரே தீர்வு என்றெல் லாம் வீண் பிரமைகளை வளர்த்துக் கொள்ளும் இளம் சிறுவர் - சிறுமிய ரைப் பற்றி நாம் அன்றாடம் காண்கிறோம், கேள்விப்படுகின்றோம். இத னைத் தவிர்க்க என்ன வழி?

சிறுவயது முதலே பிள்ளைகளுடன் தோழமையுடன்கூடிய சுமூகமான, கலகலப்பான உறவுநிலையைப் பேணும் பெற்றோராக நாம் இருக்கும் பட்சத்தில் பிள்ளைகள் தமது விஷயங்களை ஒளிவுமறைவு இன்றி நம் மோடு பகிர்ந்துகொள்ள முன்வருவார்கள்.

பெற்றோர் தமது பிள்ளைகளுடன் வாழ்க்கை என்றால் என்ன? குடும் பம் என்றால் என்ன? பிள்ளைளை நல்லவிதமாக வளர்க்க பெற்றோர் எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறார்கள்! பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக எத்தகைய தியாகங்களைச் செய்துவருகிறார்கள் என்பதைப் பற்றியெல் லாம் முடிந்தளவு எளிமையாக அன்றாடம் கலந்துரையாடுவதை வழக்க மாக்கிக் கொள்ளவேண்டும்.

கணவன்- மனைவி இருவரும் தொழில் பார்ப்பவர்களாக இருந்தால் இரவுணவை குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சிரித்துப் பேசியபடி உண்ணும் வழக்கத்தைக் கடைபிடிக்கலாம் இரவு உண வின் போதோ அதன் பின்போ சற்று மனம்விட்டு உரையாடலாம்.

உதாரணமாக, ''இன்னைக்கு உன் வகுப்பில் என்னென்ன பாடம் நடந் தது? எப்படி, பின்னேரம் விளையாட்டுப் பயிற்சியெல்லாம் ஒழுங்கா நடந்ததா? உன் தோழிக்கு உடம்பு சரியில்லைன்னியே இப்போ எப்படி யிருக்கு? இந்த செமஸ்டர் எக்ஸாம் முடிஞ்ச கையோடு எங்காவது பிக்னிக் போகலாம்'' என்ற ரீதியிலான உரையாடல்கள் பெற்றோர்- பிள்ளைகளி டையே உள்ள இடைவெளிகளை குறைக்கப் பெரிதும் உதவும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

'நம்முடைய பெற்றோரை விட நமக்கு நெருக்கமான உறவு கிடையாது அவர்கள் எப்போதும் நமது நலனையே நாடுவார்கள். எந்தப் பிரச்சினை யையும் அவர்களிடம் மனம் விட்டுப் பேசலாம். அவர்கள் நமக்கு உரிய வழிகாட்டல்களை வழங்கி உதவுவார்கள்; இக்கட்டான நிலைமைகளில் நம்மைக் கைவிட மாட்டார்கள் தோள்தந்து உதவித் தூக்கிவிடுவார்கள் என் பதான மனப்பதிவுகள் பிள்ளைகளின் மனதில் மிகக் கவனமாக ஏற்படுத் தப்படுமானால், எத்தனையோ பிரச்சினைகளை எழாமலேயே தவிர்த்துக் கொள்ள முடியும் இன்ஷா அல்லாஹ். நமது சொல்லும் செயலும் பிள் ளைகளின் மனதில் இத்தகைய நேர்மறைப் பதிவை ஏற்படுத்தத் துணை யாக நிற்கும் என்பதில் நாம் யாரும் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

எவ்வளவுதான் வேலைப் பளு இருந்த போதிலும் குழந்தைகளுக்காக அன்றாடம் நமது நேரத்தில் ஒரு சிறு பகுதியையேனும் ஒதுக்குவதற்கு நாம் மறந்துவிடக்கூடாது. 'நிம்மதியான ஒரு குடும்ப வாழ்வு வாய்க்காத பட்சத்தில் எவ்வளவு பணமிருந்தென்ன, எவ்வளவு சொத்து சுகம் இருந்தென்ன!' என்ற வாழ்க்கைத் தத்துவத்தை நாம் மனங்கொள்ள வேண்டும்.

மனிதன் நிம்மதியாக வாழ்வதற்காகத்தான் தொழில் செய்து பணம் சம்பாதிக்கிறானே தவிர அதுமட்டுமே வாழ்க்கையாகி விடாது. எனவே பணம் சம்பாதிக்கும் பராக்கில் நாம் நம் குழந்தைகளுக்கு நம்முடைய அன்பையும் அரவணைப்பும் தேவைப்படும் தருணத்தில் அவற்றைத் தரத் தவறிவிட்டு அவர்கள் வழிதவறிப் போனபின்னர் கைசேதப்பட்டு வருந்தியழுவதில் எத்தகைய பிரயோசனமும் இல்லை என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

குழந்தைகளை நாம் உரிய கட்டுப்பாட்டோடு வளர்க்கிறோம், அன்பும் அரவணைப்பும் தேவையான வசதி வாய்ப்புக்களும் வழங்குகின்றோம், இருந்தும் பருவக் கிளர்ச்சியின் உந்துதலால் நம்முடைய மகள் தவறிழைத்து விடுகின்றாள் என்று வைத்துக்கொள்வோம். இத்தகையதோர் இக்கட்டான நிலையில் நம்முடைய அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும்? எடுத்த எடுப்பில் வாய்க்குவந்தவாறு திட்டி அடித்து இம்சித்துத் துன்புறுத்துவது சரியான விதத்தில் பிரச்சினையைத் தீர்ப்பதாக அமைந்து விடுமா? ஒருபோதும் இல்லை.

அத்தகைய அணுகுமுறை நிலைமையை இன்னுமின்னும் சிக்கலாக்கும். நம் மீதான வெறுப்பை வளர்த்து, தான் நம்பி நேசிக்கும் நபர் மீதான விருப்பத்தையும் நம்பிக்கையையும் அதிகரிக்கச் செய்யும்.

என் பெற்றோருக்கு என்மீது அன்பில்லை, உண்மை அன்பு அந்த நபரிடமே உள்ளது என்ற விபரீதமான மனப்பதிவை ஏற்படுத்திவிடக்கூடும். எனவே முள்மீது விழுந்துவிட்ட சேலையைக் கிழிந்துவிடாமல் மீட்டெடுக்கும் சாமர்த்தியத்துடனும் மிகுந்த கவனத்துடனும் இந்த பிரச்சினையைத் தீர்க்க முயலவேண்டும்.இதற்கு மிகுந்த பொறுமையும் நிதானமும் நமக்கு கைவரவேண்டும் என்பது மிக முக்கியமானது.

ஒருநாள் மாலை நேரம் என் உறவினர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் வாடிச் சோர்ந்த முகத்துடன் என்னைச் சந்திக்க வந்திருந்தார். சிவந்த விழிகளும் உப்பிய முகமும் அவர் அதிகநேரம் அழுதிருக்கிறார். என்பதைச் சொல்லாமல் சொல்லி நின்றன. வழமையான உபசரிப்புகளைத் தொடர்ந்து ஏதாவது பிரச்சினையா? என்று மெல்ல விசாரித்தேன்.

உடனே பொலபொலவென்று கண்ணீர் சிந்தத் தொடங்கிவிட்டார். அவர் அழுது முடியும் வரை நான் பொறுமையாக இருந்தேன். சற்று நேரத்தில் தன்னை ஓரளவு ஆசுவாசப்படுத்திக் கொண்டவராய் திக்கித் திணறி தன்னுடைய பிரச்சினையை என்னோடு பகிர்ந்து கொண்டார்.

அவருடைய கணவர் பல வருடங்களாய் வெளிநாட்டில் வேலை பார்த்து வருகின்றார். இரண்டு மகள்கள் ஒரு மகன் என்று மொத்தம் மூன்று குழந்தைகள் அவருக்கு. மூத்த மகளுக்கு இப்போதுதான் 14 வயது பள்ளிக்கூடம் செல்லும் வழியில் யாரோ ஒரு பையனோடு காதல்.

தற்செயலாகப் புத்தகப் பையைப் பார்த்தபோது சில கடிதங்களும் வாழ்த்து அட்டைகளும் சிக்கியுள்ளன. ஆத்திரம் தாங்காமல் பிள்ளையைத் தாறுமாறாக அடித்து ஓர் அறைக்குள் போட்டுப் பூட்டிவிட்டு என்னைத் தேடி வந்துள்ளார்.

தன்னுடைய சகல சந்தோஷங்களையும் குடும்பத்துக்காகத் தியாகம் செய்துவிட்டு மத்திய கிழக்கு நாடொன்றில் வருடக்கணக்காகப் பாடுபட்டு உழைக்கும் தன் கணவருக்கு என்ன பதில் சொல்லப் போகிறேன் என் பதே அந்தத் தாயின் குமுறலாக இருந்தது.

இத்தகைய ஒரு நிலைமையில் இப்படிக் கரடுமுரடாக நடந்து கொண்டது தப்பு இது ஒரு பிழையான அணுகுமுறை என்பதையெல் லாம் எடுத்துச் சொன்னாலும் அதனைப் புரிந்துகொள்ளும் மனநிலையி லோ உளப் பக்குவத்திலோ அந்தத் தாயார் தற்போது இல்லை என்பதை நான் தெளிவாகப் புரிந்துகொண்டேன். எனவே பிரச்சினையை வேறு வகையில் கையாளுவது என்று தீர்மானித்துக் கொண்டேன்.

நான் அவரிடம் வீட்டுக்குச் செல்லுமாறும் இன்னும் சற்று நேரத்தில் தற்செயலாக வருவது போல அங்கே வருவதாகவும் கூறி வழியனுப்பி வைத்தேன். ஆயிற்று இரண்டு தெருக்கள் தள்ளி இருந்த அந்த வீட்டில் மயான அமைதி ஓர் அறைக்குள் இருந்து மட்டும் மெல்லிய விசும்பல் ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. நான் சற்று உரத்த குரலில் ஸலாம் கூறி னேன். நான் அங்கே செல்லும் போது வழமையாகப் பேசுவது போன்று சகஜமாகக் குரலை வைத்துக் கொண்டேன்.

பொதுவாகக் கொஞ்சம் பேசிவிட்டு அந்தப் பிள்ளையின் பெயரைக் குறிப் பிட்டு ''எங்கே காணோமே!'' என்று விசாரித்தேன். என் சைகையைப் புரிந்து கொண்டு ''அதோ அவள் அந்த அறையில் இருக்கிறாள்'' என்று கூறினார் அந்தத் தாயார் நான் மெல்ல உள்ளே சென்றேன். மழையில் நனைந்த கோழிக் குஞ்சு போல் நிலைகுலைந்து போயிருந்தாள் அந்தச் சிறுமி.

கன்னங்கள் இரண்டிலும் காணப்பட்ட கைவிரல் அடையாளம் அவள் நிலையை எனக்கு உணர்த்தின. கட்டிலில் போய் அமர்ந்து ''என்னம்மா?'' என்றது தான் தாமதம், மடியில் முகம் புதைத்துக் ''கோ'' வென்று கதறினாள். ஆறுதலாக அவள் முதுகை வருடி, அழுது முடியும் வரை காத்திருந்தேன்.

பின்னர் அவளைத் தேற்றி என்னோடு வீட்டுக்கு அழைத்து வந்து நிதானமாக விசாரித்ததில் அந்தப் பெண்குழந்தையின் பிரச்சினையில் இருந்த மற்றொரு கோணம் எனக்குப் புலப்பட்டது.

உண்மையில் நடந்தது என்ன என்பதைப் பற்றி சற்று நிதானமாக விசாரித்துப் பார்க்க அந்தப் பெண்மணி முயற்சி எடுத்திருக்கவே இல்லை. பள்ளிக்கூடம் செல்லும் வழியில் அந்தப் பையன் தினமும் அவளைப் பின்தொடர்ந்து வந்திருக்கிறான்.

அதைப் பற்றி அவள் ஓரிரு தடவைகள் தன் தாயிடம் முறையிட்டும் அவர் அதனை அவ்வளவாகக் கண்டுகொள்ளவில்லை. தொடர்ந்து பின்னால் வருவதும் அவளைக் காதலிப்பதாகக் கூறுவதுமாக ஓரிரு மாதங்கள் கதை தொடர்ந்துள்ளது.

பின்னர் ஒருநாள் சடுதியாக ஒரு கடிதத்தை அவளிடம் நீட்டி தான் அவளை உயிருக்குயிராகக் காதலிப்பதாகவும் அவள் தனக்குக் கிடைக்காத பட்சத்தில் தான் தற்கொலை செய்து கொள்ளப் போவாதகவும் கூறி, நஞ்சுக் குப்பி ஒன்றைக்காட்டி பயமுறுத்திருக்கிறான் செய்வதறியாது திகைத்துப் போன அவள், வேறு வழியின்றி அந்தக் கடிதத்தை எடுத்துப் புத்தகப்பைக்குள் போட்டுக் கொண்டு வந்திருக்கிறாள். இதுபோல நாலைந்து சம்பவங்கள் நடந்துள்ளன.

இதற்கிடையில், அவளின் வகுப்புத் தோழியர் அவனின் பெயரைக்கூறிக் கிண்டலடிக்கும் அளவுக்கு நிலைமை போய்விட அந்தக் 'காதலை' ஏற்பதா வேண்டாமா என்ற இரண்டுங்கெட்டான் நிலைமையில் தவித்திருக்கிறாள். பலதடவை தாயிடம் சொல்லலாம் என்று முயன்றும் பயந்து மௌனமாக இருந்திருக்கிறாள். அதேசமயம், தன்னை ஒருவன் விழுந்து விழுந்து காதலிக்கிறான் தன் பின்னாடியே அலைகிறான் என்பதையெல்லாம் உள்ளூரச் சற்றுப் பெருமிதமாகவும் உணர்ந்திருக்கிறாள்.

அவன் பெயரை அவள் பெயரோடு சேர்த்து தோழிகள் கேலிசெய்யும் போது மனதுக்குள் இனம்புரியாத ஒரு கிளுகிளுப்பு எழவும் தவறவில்லை. அவள் தன்னுடைய நிலையை தேம்பித் தேம்பி அழுதபடி ஒளிவுமறைவின்றி ஒருவாறு சொல்லிமுடித்தாள்.

எனக்கு அவளை நினைத்துப் பரிதாபமாக இருந்தது. பின்னர் நான் அந்தச் சிறுமியிடம் வாழ்க்கை என்பது அவள் நினைப்பதைப் போல அவ்வளவு சுலபமான ஒன்றல்ல.

இதெல்லாம் வெறுமனே பருவக் கிளர்ச்சியால் ஏற்படும் வெறும் ஈர்ப்பு மட்டுமே அதனை மட்டும் அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒரு திருமண வாழ்வை அமைத்துவிட முடியாது படிக்கிற வயதில் காதல் என்ற வலையில் வீழ்ந்து வாழ்வை இழந்து சமூகத்தின் முன் அவமானப்படுவது எவ்வளவு பயங்கரமானது என்பதை நான் அவளிடம் எடுத்து விளக்கினேன்.

அவளுடைய தந்தை அவர்களின் நல்வாழ்வுக்காக குடும்பத்தைப் பிரிந்து மத்திய கிழக்கில் அல்லும் பகலும் எவ்வளவு கஷ்டப்படுகின்றார்.

அவர்களை நல்ல முறையில் வளர்த்து ஆளாக்க வேண்டும் என்பதற்காக அவளின் அன்னை எவ்வளவு பாடுபடுகிறார் எந்த நேரமும் அவர்களைப் பற்றிய கவலையிலேயே பொழுதைக் கழிக்கிறார் என்பதையெல்லாம் தெளிவுபடுத்தினேன்.

கூடவே, அந்தப் பையனின் நிலைமை என்ன? படிப்பைப் பாதியில் கைவிட்டுவிட்டு பொழுதுபோக்காக ஊர்சுற்றித் திரியும் ஓர் இளைஞனைத் திருமணம் முடித்துப் பிரச்சினைகள் இன்றி மகிழ்வோடு வாழ்வதென்பது நடைமுறைச் சாத்தியமா? அவன் கடைசிவரை அவளை வைத்துக் கண்கலங்காமல் வைத்துக் காப்பாற்றுவான் என்பதற்கான உத்தரவாதம் என்ன என்பனபோன்ற கேள்விகளால் அவளது சிந்தனையைத் தட்டி எழுப்பினேன்.

நீ இல்லாவிட்டால் செத்துவிடுவேன் தற்கொலை செய்வேன் என்பன போன்ற வாக்குமூலங்கள் எவ்வளவு அபத்தமானவை. போலியானவை என்பதைப் பற்றி விளக்கினேன். ''நீ சம்மதிக்காவிட்டால் நஞ்சு குடிப்பேன்'' என்று மிரட்டி பலாத்காரத்தால் பெறமுனையும் அன்பு ஒரு போதும் வாழ்க்கை முழுவதையும் கொண்டு நடாத்துவதற்கு உறுதுணையாய் அமையப் போவதில்லை என்றும் அப்படி மிரட்டுபவனிடம், ''சரி, நஞ்சைக் குடி. எனக்கென்ன!'' என்று விட்டேத்தியாய் பதில் சொன்னால் அவன் தானாகவே விலகிக் கொள்வான் என்றும் கூறவே, அவளுடைய முகத்தில் இலேசான ஒரு தெளிவு தோன்றுவதை அவதானித்தேன்.

பின்னர் அவளாகச் சற்றுநேரம் யோசிக்கட்டும் என்று அவகாசம் அளித்துவிட்டு சூடாக ஒரு கப் தேநீர் குடிக்குமாறு உற்சாகப்படுத்தினேன். ''புதிய பாணியில் ஒரு தலையலங்காரம் செய்துவிடுகிறேன் வா'' என்று அழைத்து அன்போடு தலைவாரிப் பின்னிவிட்டேன்.

அன்றிரவு அவளது பிரச்சினை பற்றி மேற்கொண்டு நான் எதுவுமே பேசவில்லை. இரண்டு நாட்கள் அவள் என்னோடு இருந்தாள் ஒரு மகளாய், தோழியாய் என்னோடு வெகு உற்சாகத்தோடு அவள் அந்த இரண்டு நாட்களையும் கழித்தாள். வீட்டை அடையும் வேளை அவள் என்னிடம் சொன்ன வார்த்தைகள் இப்போதும் என் காதில் எதிரொலிக்கின்றன;

'' ஆன்ட்டி, நீங்க என் உம்மாவா இருந்திருக்கக் கூடாதான்னு ஆசையா இருக்கு. எங்க உம்மா என்கிட்ட இன்னும் கொஞ்சம் அன்பாய், புரிஞ்சு கொள்ளுற மனசோடு நடந்திருந்தா இந்தமாதிரி ஒரு பிரச்சினைல நான் மாட்டிக்கொண்டிருக்கவே மாட்டேன்னு தோணுது ஆனா, இப்பவும் ஒன்ணும் கெட்டுப் போகல்ல ஆன்ட்டி, நான் ஒரு நல்ல மகள்தான்னு எங்க உம்மாவுக்குப் புரிய வைப்பேன். நல்லாப் படிச்சி எங்க வாப்பா கனவை நனவாக்குவேன், இன்ஷா அல்லாஹ்!''

இதற்கிடையில், அந்தப் பெண்ணுடன் துணைக்குக் கூடவே அவளது தாயார் சென்று வரலானார். தன் மகளின் மனமாற்றமும் வெளிப்படையான பேச்சும் அந்தத் தாயின் மனதை நெகிழச் செய்தன. இருவர் மத்தியிலும் இருந்த இடைவெளி படிப்படியாகக் குறையத் தொடங்கியது அவர் தன்னுடைய ஆச்சரியத்தை என்னோடு பகிர்ந்துகொண்டபோது மனதுக்கு நிறைவாக இருந்தது.

மேற்படி சம்பவத்தின் மூலம் நாம் பெறத்தக்க படிப்பினைகள் எவை என்று நோக்குவோம். முதலாவதாக, தன்னுடைய வயது வந்த பிள்ளைகள், குறிப்பாகப் பெண் பிள்ளைகள் எத்தகைய மனத்தடையும் இன்றி வெளிப்படையாகத் தம்மோடு கலந்துரையாடக்கூடிய சூழலை நாம் வீட்டில் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

தனக்கொரு பிரச்சினை வருமிடத்து நேரே தன் பெற்றோரிடம் வந்து ஆலோசனை கேட்கக்கூடிய தோழமையான, புரிந்துணர்வுள்ள நிலைமை குடும்பத்தில் கட்டியெழுப்பப்பட வேண்டும். அழுத்தமாகச் சொல்வதானால் ஒரு தாய் தன் வயது வந்த பெண் பிள்ளையிடம் ஒரு தோழியைப் போலப் பழக வேண்டும்.

அவளுடன் மகிழ்ச்சியோடு சிரித்துப் பேசி, நாலு விஷயங்களை உற்சாகத்தோடு கலந்தாலோசிக்கும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். அவளுடைய தோழியர் யார் யார் அவள் எங்கெல்லாம் சென்று வருகிறாள், எத்தனை மணிக்கு எங்கே வகுப்பு நடக்கிறது. அங்கு சென்றுவர எடுக்கும் கால அவகாசம் என்ன முதலான சகல விபரங்களையும் அறிந்து வைத்திருப்பவளாக ஒரு தாய் இருக்க வேண்டும்.

பருவ வயதை அடைந்த ஒரு பெண் பிள்ளை தனக்கு ஏற்படக்கூடிய நெருக்கடிகளைத் தன் தாயிடமே முறையிட முனையும் என்பதே யதார்த்தம். அத்தகைய சந்தர்ப்பங்களை அலட்சியம் செய்யாமல் காதுகொடுத்துக் கேட்டு அவற்றுக்குரிய தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய கடமை பெற்றோருக்கு குறிப்பாகத் தாய்க்கு உண்டு. மேலே நாம் கண்ட சம்பவத்தில், தன்னை ஒருவன் பின்தொடர்ந்து வருகிறான் என்று தன் மகள் முறையிட்டபோதே அது பற்றி அந்தத் தாய் கவனம் செலுத்தியிருந்தால் பிரச்சினை முற்றாமல் ஆரம்பத்திலேயே அதைத் தடுத்திருக்க முடியும்.

அவ்வாறே, மகளின் புத்தகப் பையில் இருந்து கடிதம் முதலானவை அகப்பட்டதும் எடுத்த எடுப்பில் ஆவேசமாக நடந்துகொள்ளாமல், என்ன நடந்தது, ஏன் இப்படி நடந்துகொண்டாய் என்பதையெல்லாம் நிதானமாக விசாரித்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் நடந்துள்ள சம்பவத்தின் மறு பக்கமும் தன் மகளின் மீது முழுத் தவறும் இல்லை என்பதையும் அந்தத் தாயாரால் புரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்திருக்கும்.

# 10

## ‘காதலுக்குக் கண்ணில்லை’

டீன் ஏஜ் எனும் பதின்ம வயதினர் மட்டுமின்றி காலேஜ் முடித்து, பல்கலைக்கழத்தில் கற்பவர்கள் கூட இத்தகைய எதிர்‘பால்’ (Opposite Sex) கவர்ச்சியால் ஈர்க்கப்பட முடியும். அது இயற்கைதான் என்றாலும், வெறுமனே இப்படியான கவர்ச்சி மட்டும் ஒரு சிறந்த குடும்ப வாழ்வை அமைத்துக் கொள்ள உதவப்போவதில்லை என்பதை இவர்களால் சட்டென்று விளங்கிக்கொள்ள முடிவதில்லை. சுருக்கமாகச் சொல்வதானால், அவர்கள் ஒருவகை மயக்கத்தில் ஆழ்ந்து யதார்த்தமாகச் சிந்திக்கக்கூடிய ஆற்றலை அனேகமாக இழந்துவிடுகின்றனர். இந்த இளம் பருவத்தினருக்கு தம்மைவிட வாழ்க்கை அனுபவம் மிகுந்த பெற்றோர் சொல்லும் புத்திமதிகளை ஏற்கும் மனநிலை இருப்பதே இல்லை. இதனால்தான்‘காதலுக்குக் கண்ணில்லை’ என்றெல்லாம் சொல்லி வைத்திருக்கிறார்கள் போலும்.

பல்கலைக்கழக இறுதிவருடப் பரிட்சை நெருங்கிக்கொண்டு இருந்தது, அவனுக்கு. பொறியியல் பாட (எஞ்சினியரிங்) மாணவன் அவன். பரிட்சைக்காக மனதை ஒருமுகப்படுத்திப் படிக்க முடியவில்லை அவனால். காரணம், காதல் என்ற புயல்காற்று அவன் மனதை அலைகழித்துக் கொண்டிருந்தது. என்னைத் தன்னுடைய மூத்த சகோதரியாகவே அவன் கருதிவந்ததால், எப்போதும் என்னிடம் உதவிகேட்க அவன் தயங்கியதில்லை. ஒருநாள் இரவு ஏழுமணி இருக்கும் அவனிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு. ‘‘ராத்தா (அக்கா) எனக்கொரு பிரச்சினை’’...

என்றான். நான் அப்போது குடும்ப சகிதம் ஒரு நண்பியின் வீட்டில் இரவு உணவுக்காகச் சென்றிருந்தேன். என்றாலும் பதட்டமான அவன் குரல் என்னையும் கவலையில் ஆழ்த்திவிட்டது. ''என்னடா, என்ன பிரச்சினை?'' என்றேன். திடீரென்று, தான் ஒரு பெண்ணைக் காதலிப்பதாகவும், படிப்பு முடியுமுன் காதலும் கத்திரிக்காயும்... இதெல்லாம் என்னடா' என்று நான் திட்டுவேன் என்று பயந்து இதுவரை சொல்லாமல் மறைத்தாகவும் இப்போது தன் மனம் ஒரு நிலையில் இல்லாமல் அலைபாய்வதாகவும், பரீட்சைக்குப் படிக்க முடியவில்லை என்றும் அழாக்குறையாகச் சொன்னான். ''சரிடா, இப்போ என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று அவனாகவே சொல்லி முடிக்கட்டும் என்று உத்தேசத்தில் கேட்டேன். தன்னுடைய நிலையை உடனடியாகத் தன் தாயிடம் தொலைபேசியூடாகச் சொல்லப் போவதாகவும், அவர் தன் தந்தையை விட தனக்கு மிக நெருக்கமானவர் என்பதால் தன்னுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்வார் என்று தான் நிச்சயமாக நம்புவதாகவும் கூறினான். எப்படியோ அவன் தன்னுடைய பெற்றோருடன் நேரடியாக இது பற்றிப் பேசுவது நல்லது தான் என்றாலும், இவ்வளவு சீரியஸான விடயத்தை வெறும் தொலைபேசியூடே சொல்லுவது பொருத்தமில்லை என்றும், பெருநாள் விடுமுறைக்காக ஊர் செல்லும் போது நேருக்கு நேராகப்பக்குவமாக எடுத்துச் சொல்வதுதான் முறை என்றும் ஆலோசனை கூறியும் அதை அவன் ஏற்றதாகத் தெரியவில்லை. அப்போது மற்றொரு வீட்டில் இருந்ததால் அதற்குமேல் விரிவாகப் பேசி அவனுக்கு விளங்கப்படுத்தும் நிலையில் நானும் இருக்கவில்லை.

கடைசியில் நடந்ததென்ன? நிலைமையின் பாரதூரம் பற்றிய தூரநோக்கின்றி அவன் தன்னுடைய பிரச்சினையைத் தன் தாயிடம் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளான். விளைவு? அதிர்ச்சி தாளாமல் மாரடைப்பு ஏற்பட்டுள்ளது அந்தத் தாயாருக்கு, ஐ.சீ.யூ.வில் அனுமதித்திருக்கிறார்கள். அவனின் தந்தைக்கோ மகன் மீது அளவற்ற கோபமும் வெறுப்பும். தங்கையும் தம்பியும் செய்வதறியாமல் திகைத்துப் போன நிலையில், சுமார் ஒரு வார காலத்தின் பின் இவை அனைத்தும் என் செவிக்கு எட்டுகின்றது. பெரிய பதவியில் உள்ள அந்தப் பெரியவர் தொலைபேசியில் என்னை அழைத்து சிறுகுழந்தை போலத் தேம்பியழுதபோது, எனக்கும் கூட அந்தப் பையன்மீது மிகுந்த கோபமே ஏற்பட்டது. ''மகளே! எப்படியாவது புத்திசொல்லி என் மகனின் மனதை மாற்ற முயற்சி செய்யுங்கள் அவனுக்கு பரீட்சை வேறு இருக்கிறது. குடும்பத்தில் மூத்த மகன் அவன். அவனை நம்பித்தான் இனி இந்தக் குடும்பத்தின் எதிர்காலம், கௌரவம் எல்லாம் இருக்கிறது.இந்தப் பிரச்சினையால் எங்கள் வீடு இப்போ ஒரு மையத்து வீடு போல இருக்கிறது'' என்றெல்லாம் அவர் முறையிட்ட போது மனது கனத்துப் போனது. இந்தச் சிக்கலை எப்படி சீர்செய்வது

என்ற சிந்தனையில் நான் சற்று திணறித்தான் போனேன். எனினும், அல்லாஹ் ஒரு சரியான வழியைக் காட்டுவான் என்ற நம்பிக்கை மட்டும் மனசின் ஒரு மூலையில் எஞ்சிநின்றது.

மறுநாள் அவனை வீட்டுக்கு வருமாறு அழைத்தேன். அவனின் பிரச்சினையை விளக்கமாக எடுத்துச் சொல்லுமாறு கேட்டேன். அப்போதுதான் பிரச்சினையின் முழுப் பரிணாமமும் எனக்குப் புலப்பட்டது. அவனுடைய தாயின் அதிர்ச்சிக்கான காரணமும் ஓரளவு விளங்கியது. அப்படி என்னதான் தலைபோகிற பிரச்சினை என்று யோசிக்கிறீர்களா?

அந்தப் பையன் காதலித்த பெண்ணின் குடும்பப் பின்னணி மிகச் சிக்கலானது. அவளுடைய பெற்றோர் கலப்புத் திருமணம் முடித்தவர்கள். தந்தையோ அதுவரையுமே இஸ்லாத்தைத் தழுவியிருக்கவில்லை. தான் செய்த தவறை அந்தப் பெண்மணி உணரும்போது அவர் மூன்று பெண் பிள்ளைகளுக்குத் தாயாகி இருந்தார். இந்நிலையில், பெரும் போராட்டத்துக்கு மத்தியில் தன் பிள்ளைகளுக்கு முஸ்லிம் பெயர்களை வைத்ததோடு, அவர்களுக்கு சிறந்த கல்வியை, மார்க்கக்கல்வி உட்பட - கொடுத்து மிகக் கடுமையான கண்காணிப்புடன் வளர்த்து ஆளாக்கியுள்ளார். ஓர் ஆலிமா உட்பட கல்வியில் உயர்ந்து நல்ல வேலையில் சேருமளவு தன் பிள்ளைகளை முழுமூச்சாக வளர்த்து ஆளாக்கியுள்ளார்.

என்றபோதிலும் சமுதாயத்தின் முன்னிலையில் இந்தப் பெண் பிள்ளைகளின் எதிர்காலம் பெரும் கேள்விக்குறியாய்த் தொக்கி நின்றதென்னவோ உண்மைதான்.

ஓர் இஸ்லாமிய கல்வி நிலையத்தில் வைத்து அவள் அந்தப் பையனுக்கு அறிமுகமாகிறாள் . அவன் அங்கு ஓர் பகுதிநேர ஆசிரியனாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தான். அவளுடைய பிரச்சினை அவன் கவனத்தைக் கவருகின்றது. ஏதோ ஓர் ஈர்ப்பு. எதையோ சாதித்துக்காட்டவேண்டும் என்பதான உத்வேகம். இந்நிலையில், மிகுந்த திறமைசாலியான அவளை மணக்கக் கேட்கிறான் வேறு ஓர் இளைஞன். விடயம் இவன் கவனத்துக்கு வரும்போது, அந்த இளைஞன் ஒரு ''வெஸ்டர்ன் டைப்'' என்று கூறி, ஒரு இஸ்லாமியக் குடும்ப அமைப்பை நிறுவுவதானால் நன் மார்க்கப்பற்று கொண்ட ஒருவனையே திருமணம் செய்ய வேண்டும் என்று ஆலோசனை வழங்கியதோடு, தான் அப்படியொரு வாழ்வை அவளுக்குத் தரத் தயாராக இருப்பதாகக் கூறி வாக்குறுதி வழங்கியிருக்கிறான். இதெல்லாம் நடைமுறைச் சாத்தியம் இல்லை என்று அவள் மறுத்தும் இவன் விடாப்பிடியாய் அவளைத் தொடர்ந்து, அவள் மனதை மாற்றிச் சம்மதம் பெறுவதில் வெற்றிகண்டுள்ளான்.

தனக்கு வரப்போகும் மூத்த மருமகள் பற்றிய எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் மாறாக, முழுக்க சிக்கலான குடும்பப் பின்னணியுள்ள ஒரு பெண்ணைத் தன் மகன் காதலிப்பதாய் அறிந்த அவனின் தாயார் அதிர்ச்சியடைந்ததில் வியப்பில்லை அல்லவா?

இந்நிலையில், உடனடியாகத் தீர்க்க வேண்டிய சில பிரச்சினைகள் என் முன் நின்றன. இறுதியாண்டுப் பரீட்சைக்காக முழுமனதாக ஈடுபட்டுப் படிக்க அவனுக்கு வழிகாட்டவேண்டியது அதில் பிரதானமானது. மற்றொன்று, நோய்வாய்ப்பட்டுள்ள தாயாருக்கும் மனமுடைந்து போயுள்ள அவனின் குடும்பத்தினருக்கும் தைரியமூட்டி ஆறுதலளிக்க வேண்டும் உபரியாக, இந்தப் பிரச்சினையில் பிரதான பங்காளியான அந்தப் பெண்பிள்ளையின் நிலைமையை அறிய வேண்டும்.

முதலில் அந்தப் பிள்ளையைத் தொடர்புகொண்டு பேசுவது என்று தீர்மானித்து, அவளுடைய நிலையை அறிய முனைந்தேன். அல்ஹம்துலில்லாஹ்! அவள் நான் எதிர்பார்த்ததைவிட பிரச்சினையின் ஆழ அகலம் பற்றிய தெளிவுடையவளாக இருந்தாள். ஒரு குடும்பத்தைச் சிதைத்து தான் சந்தோஷமாக வாழ முடியும் என்ற நம்பிக்கை தனக்கில்லை என்று உறுதியாகக் கூறினாள். அந்தப் பெற்றோரின் மனதை முறித்துவிட்டுத்தான் இந்தத் திருமணம் நடக்குமெனில், அப்படியான ஒரு திருமணம் தனக்குத் தேவையில்லை என்று கூறிவிட்டாள். எனினும், நான் வேறு கோணத்தில் இதை எடுத்து விளக்கினேன்.

அதாவது, திருமணம் என்பது வெறுமனே அனுதாபத்தின் அடியாய், அல்லது ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற இளமையின் உத்வேகத்தை மட்டும் கொண்டதாய் அமைவதல்ல. எனவே, உங்கள் இருவரினது நேசம் உண்மையிலேயே பக்குவமடைந்த இரு மனங்களின் உறுதியான, மாற்றமில்லாத தீர்மானமா அல்லது வெறும் பருவக்கிளர்ச்சியாலோ எதிர்'பால்' கவர்ச்சியால் எழுந்த ஈர்ப்பினாலோ தோன்றிய ஒன்றா என்பதைப் பிரித்தறிய வேண்டிய தேவை உள்ளது. எனவே, முன்னதுதான் என்றால், நீங்கள் இருவரும் சரியாக இரண்டு வருடங்களுக்கு எந்த ஒரு தொடர்பும் இல்லாமல், மின் மடலோ தொலைபேசி அழைப்போ, எஸ்.எம்.எஸ்.ஸோ இல்லாமல் முற்றாக தொடர்புகளைத் துண்டித்துக்கொள்ள வேண்டும்.

அதன் பின்பும் உங்கள் இருவர் மனதிலும் எந்த மாற்றமும் இல்லாமல் அதே பழைய தீர்மானம் இருக்குமானால் மேற்கொண்டு ஏதாவது செய்யலாம் என்று சொன்னதும், ரோஷம் கொண்டவர்களாய் இருவரும் உடன்பட்டார்கள். தங்களின் நேசம் நூறு சதவீதம் உண்மையானது, உறுதியானது என்பதை நிரூபிக்க வேண்டும் என்ற உத்வேகம் அவர்களுக்கு.

அடுத்தது, அந்தப் பையனின் தந்தையைத் தொடர்பு கொண்டு, இந்த முறை பெருநாள் விடுமுறைக்கு மகன் வீடு வந்தால் வீட்டில் யாரும் நடந்த விடயங்கள் குறித்து ஒரு வார்த்தை தானும் பேசவோ, அந்தப் பெண் பற்றி விசாரிக்கவோ, அவனைக்கண்டிக்கவோ கூடாது என்று கண்டிப்பாக கக்கூறி வேண்டுகோள் விடுத்தேன். சுருக்கமாகச் சொல்வதானால், எதுவுமே நடக்காதது மாதிரி நடந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன் (நான் இப்படிக் கேட்டது அவனுக்குத் தெரியாது) வீட்டுக்கே வரமாட்டேன் என்று அடம்பிடித்த மகனை வழிக்குக் கொண்டுவர என்ன செய்யவும் தயாராக இருந்தார்கள், அந்தப் பெற்றோர். பிரச்சனையை அப்போதைக்கு ஒத்திப்போடுவது என்பதே என்னுடைய முடிவாக இருந்தது. காரணம், அவன் தன் பல்கலைக்கழக இறுதிப் பரீட்சையை நல்லமுறையில் முடிக்கவேண்டும் என்பது நம் அனைவருக்கும் மிக முக்கியமான தேவையாக இருந்தது.

மேற்கொண்டு நடந்ததென்ன என்று ஆராயுமுன், இதுவரை நாம் பார்த்த அந்தப் பையனின் பிரச்சினையில் இருந்து நாம் பெற்றுக்கொள்ளக் கூடிய படிப்பினைகள், அல்லது இத்தகைய பிரச்சினைகளுக்கான அடிப்படைகள் எவை என்று நோக்குவது பொருத்தமானதாக இருக்கும். நாம் முதலில் அந்தப் பெண் பிள்ளையில் இருந்தே தொடங்குவோம்.

அவளின் தாயார் செய்த மிகப் பெரிய தவறு மாற்றுமதத்தவர் ஒருவரைக் கலப்புத் திருமணம் செய்துகொண்டது. இஸ்லாமிய அறிவோ வழிகாட்டலோ அற்ற நிலையினாலேயே இத்தகைய சம்பவங்கள் நிகழ்கின்றன என்பது கண்கூடு.

அடுத்தது, தான் செய்த பிழையைத் தன் பிள்ளைகள் செய்துவிடக் கூடாதே என்ற பதைபதைப்பில் ''பிள்ளைகளை அளவுமீறிய கண்டிப்புடன் வளர்த்தது அவர் செய்த மற்றுமொரு தவறு எப்படி அளவுக்கு மீறிய செல்லமும் சுதந்திரமும் பிள்ளைகளைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்குமோ அதேபோல அளவுமீறிய கண்டிப்பும் கடும் போக்கும் பிள்ளைகளை விரக்தியடையச் செய்யும்''. வீட்டில் கிடைக்காத மன ஆறுதலை, நேசத்தை வெளியில் தேடும் தூண்டுதலை அளிக்கக்கூடும். எதற்கெடுத்தாலும் சந்தேகத்தோடு புறுபுறுக்கும், ஆயிரம் கேள்வி கேட்டு துளைத்தெடுக்கும் தாயாரின் செயல்கள் அந்தப் பெண்பிள்ளையின் மனதை வதைக்கும் கொடுமையாய் மாறியுள்ளன. தான் எவ்வளவோ நல்லமுறையில், மனக் கட்டுப்பாட்டோடு இருந்தும் பஸ் தாமதம் காரணமாக வீடு வர ஐந்து நிமிடம் பிந்தினாலும் நாலு வீட்டுக்குக் கேட்கத் திட்டித் தீர்க்கும் தாயாரின் அணுகுமுறைகளால் அவள் அயலவர் முன் கூனிக் குறுகி நிற்கவேண்டிய நிலை பலதடவை ஏற்பட்டுள்ளது. எனவே, சன்மார்க்க ஒளியில்

''கவுன்ஸலிங்'' எனும் உளநல ஆலோசனை பெற முனைந்ததன் விளைவு, அந்தப் பையன் இவள்பால் ஈர்க்கப்பட்ட ஒரு காரணமாய் அமைந்து விட்டது. வீட்டில் தாயார் ஒரு தோழியாய், ஆறுதலும் அரவணைப்பும் வழங்கும் நிலையில் இருந்திருந்தால் இத்தகைய ஒரு நிலையை அவள் எதிர்கொள்வது தவிர்க்கப்பட்டிருக்ககூடும்.

அடுத்தது, அந்தப் பையனின் குடும்பப் பின்னணியும் அவனின் வளர்ப்பு முறையும். அங்கே தாயாரின் கடும் கண்டிப்பு என்றால், இங்கே தந்தையின் கடும்போக்கு. சிறுவயது முதல் அவன் எப்போது எதைச் சொன்னாலும் அவனின் தந்தை நிர்தாட்சண்ணியமாய் அதை மறுத்தும் நிராகரித்தும் வருவது வழக்கமாக இருந்திருக்கிறது. தன்னுடைய படிப்புத்தேர்வு, விருப்பு- வெறுப்புப் பற்றிய எந்த சிறு அக்கறையையும் அவன் தன் தந்தையிடம் காணவில்லை. எப்போதும் ''நான் சொல்வதை மட்டும் நீ செய், உன்னுடைய கருத்து எனக்குத் தேவையில்லை'' என்பதான ஒருவித சர்வாதிகாரப் போக்குகடையவராக இருந்தார், அவன் தந்தை. இதனால், தன் தந்தை என்றாலே ஒரு வில்லன் என்பதான மனப்பிம்பம் தான் அவனுள் ஆழப் பதிந்திருக்கிறது. மிக மென்மையான இயல்புடையவரான தன் தாயாரிடம் மட்டுமே அவன் மனம் விட்டுப் பேசும் வழக்கமுடையவனாக இருந்துள்ளான். ஒரு மகனைப் பொறுத்தவரையில், ஒரு தந்தையின் நெருக்கமும் வழிகாட்டலுமே மிக இன்றியமையாது தேவைப்படும் என்பது தவிர்க்க முடியாத ஒரு விடயம் என்பதை நாம் மனம் கொள்ள வேண்டும்.

கடும் போக்குடைய தந்தை, மிக மென்மையான சுபாவம் கொண்ட தாயார். அவனுக்குக் கீழ், அண்ணன்தான் நமக்கு முன்மாதிரி என்று நம்பிக்கொண்டிருக்கும் தம்பியும் தங்கையும், இந்நிலையில், அவன் இந்தப் பிரச்சினையை இதைவிட நல்லமுறையில் அணுகாதது அவன் செய்த மிகப் பெரிய தவறு.

11

# திருமணம் என்பது வெறும் சடங்கு அல்ல

தன்னுடைய வீட்டில் உள்ள தாய், தந்தை, சகோதரர்களின் நிலைமை என்ன, அவர்களின் குண இயல்புகள் யாவை என்பன குறித்து அவன் ஓரளவு அறிந்து வைத்துள்ள நிலையில் அவன் தன்னுடைய பிரச்சினையைக் கையாண்ட விதம் மிகத் தவறானது. அந்த இளைஞன் மட்டும் என்றில்லை, அனேகமான இளைஞர்கள் இதே தவறைச் செய்துவிடுவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

ஒருவருக்குத் தன்னுடைய வாழ்வில் தனக்கேற்ற வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்புகள், கனவுகள் இருப்பது மிக இயல்பான ஒரு விஷயமே. ஒரு குறித்த பருவத்தில் அது பற்றிய தேடல் மனதுக்குள் உள்ளார்ந்து எழுவதையும் மறுப்பதற்கில்லை. இந்நிலையில், எதிர்பாராத விதமாகத் தான் சந்திக்கும் ஒரு பெண், தனக்கேற்ற வாழ்க்கைத் துணையாக அமையக்கூடிய அனைத்து தகுதிப்பாடுகளையும் கொண்டவள் என்ற நம்பிக்கை தோன்றுமிடத்துச் செய்ய வேண்டிய முதல் காரியம் என்ன? உடனே அவளைத் துரத்திப் பின்னால் போய் ''ஐ லவ் யூ'' சொல்வதா? இல்லவே இல்லை. ஆனால், துரதிஷ்டவசமாக நடைமுறையில் பெரும்பாலும் அவ்வாறுதான் நிகழ்ந்து வருகிறது. 'இவளே தனக்கேற்ற துணை' என்ற எண்ணம் தோன்றியவுடன், எத்தகைய தூரநோக்குமின்றி அப்பெண்ணிடம் போய் ஐ லவ் யூ சொல்வது, விரும்பாத பெண்ணையும் எப்ப

டியாவது தன்பக்கம் ஈர்க்க முனைவது, எந்த எதிர்ப்பு வந்தாலும் அவளைத்தான் கரம் பற்றுவேன் என்று வாக்குறுதியளிப்பது என்பன போன்ற நடைமுறைகள் இன்று சர்வ சாதாரணமாகிவிட்டன. இத்தகைய நடைமுறைகளுக்குப் பின்னால் உள்ள பிரதான காரணம் சினிமாவும் மூன்றாம்தர நாவல்களும் என்றால் மிகையல்ல.

மேலே நாம் கண்ட இளைஞனின் வாழ்க்கையில் அவன் சந்தித்த அந்தப் பெண் தனக்கேற்றவளாக இருக்கிறாள் என்ற ஆழ்ந்த நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டவுடன், அவன் அவளின் குடும்பப் பின்னணி அல்லது அவளுடைய சமூக நிலைமை, தன்னுடைய குடும்பத்தில் எத்தகைய அதிர்வுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதைப் பற்றி அறிந்திருந்தான் ஆயினும், அதனைத் துல்லியமாகக் கணிக்கத் தவறிவிட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

மிகச் சிக்கலான ஒரு குடும்பப் பின்னணியைக் கொண்ட அந்தப் பெண்ணிடம் தன்னுடைய விருப்பத்தை வெளிப்படுத்தி அவளை மணப்பதாக வாக்குறுதியளிக்கும் முன் அவன் செய்திருக்க வேண்டியது என்ன? தன்னுடைய குடும்ப அங்கத்தவர்களை நல்ல முறையில் அணுகி, தன்னுடைய திருமண விஷயம் தொடர்பாக அவர்களின் மனநிலை, எதிர்பார்ப்பு, ஏற்கெனவே தனக்குத் தெரியாமல் வேறு யாருக்காவது தன் பெற்றோர் வாக்குக்கொடுத்து இருக்கின்றனரா, இது திருமணத்தில் முடிவது நடைமுறைச் சாத்தியமாக அமையுமா? முதலான விஷயங்களை குறித்து ஆராய்ந்திருக்க வேண்டும். பின்னர் தன்னுடைய எதிர்பார்ப்புக்கள் எத்தகையவை என்பன குறித்துத் தன் பெற்றோரிடம் படிப்படியாகத் தெளிவுபடுத்த முனைந்திருக்க வேண்டும். தனக்கு மனைவியாக வருபவளிடம் தான் இன்னின்ன தன்மைகளை, குணங்களை, ரசனைகளை எதிர்பார்ப்பதை மிக நாசூக்கான முறையில் வெளிப்படுத்தத் தயங்கக் கூடாது.

ஏனெனில், திருமணம் என்பது வெறுமனே ஆணும் பெண்ணும் வாழ்வில் இணைகின்ற வெறும் சடங்கு அல்ல. மாறாக, இரண்டு குடும்பங்கள் ஆத்மார்த்தமாக இணைகின்ற ஓர் உறவுப்பாலம். எனவே, தன்னுடைய விருப்பங்களுக்குச் சற்றும் குறையாத வகையில், குடும்பத்தவர்களின் குறிப்பாகப் பெற்றோரின் விருப்பு வெறுப்புக்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டியதும் இன்றியமையாததாகும். இத்தகைய பரஸ்பரப் புரிந்துணர்வும் கலந்துரையாடலும் இடம்பெறத்தக்க குடும்பச் சூழல் கட்டியெழுப்பப்படக் கூடுமாயின் குடும்ப உறவுகளுக்குள் விரிசல்கள், கசப்புக்கள் தோன்றுவதைப் பெரிதும் தவிர்த்துக்கொள்ளலாம். எனவே, நாம் குறிப்பிட்டுள்ளவாறு, நட்புகலந்த அந்நியோன்னியமான உறவுநிலை காணப்படும் குடும்பங்களில் இத்தகைய பிரச்சினைகள் மிக லாவகமாகக் கையாளப்படக்கூடியதாக இருக்கும்.

தன்னுடைய தந்தையின் கடும்போக்கு, தன்னுடைய விருப்பங்களைச் சற்றும் பொருட்படுத்தாத மனநிலை என்பவற்றைத் தெளிவாக அறிந்த நிலையில், குறித்த பெண்ணிடம் தன்னை மணக்கச் சம்மதிக்குமாறு வலிந்து விருப்பம்பெற்றதும், எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் மணமுடிப்பேன் என வாக்குறுதியளித்ததும் அந்த இளைஞன் செய்த முதலாவது தவறு.

அடுத்து, தன்னுடைய தாயாரை நேரில் அணுகி மிகப் பக்குவமாக விஷயத்தைக் தெளிவுபடுத்தி, அவரது ஐயப்பாடுகளுக்கு நல்லமுறையில் பதிலளித்து தைரிய மூட்டுவதை விடுத்து அவசரகதியில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு விஷயத்தைப் போட்டு உடைத்தது மிகப்பெரிய தவறு.

இங்கு ஒருவிஷயம் மிக முக்கியமானது. தகவல் பரிமாற்றத்தின் இன்றியமையாத அங்கமாகத் தொலைபேசி இருக்கிறது என்பதென்னவோ உண்மைதான். ஆனால், சீரியஸான விஷயங்களைப் பேசவோ, கலந்துரையாடவோ தொலைபேசியை நாம் ஒரு போதும் பயன்படுத்தவே கூடாது. காரணம், தொலைபேசியில் நாம் பேசும் போது எதிராளியின் (எதிர்தரப்பில் இருப்பவரின்) முகபாவனையைக் கவனிக்க முடிவதில்லை. இதனால், நாம் சொல்லும் விஷயத்தை அவர் எவ்வாறு எடுத்துக் கொள் கிறார் என்பதை நம்மால் எடைபோட முடிவதில்லை. அதற்கேற்றாற் போல அவரைக் 'கன்வின்ஸ்' பண்ணி, நமது பேச்சைத் தொடரும் வாய்ப்பை நாம் இதன் மூலம் இழக்கின்றோம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேற்படி இளைஞனின் விஷயத்திலும் நடந்தது இதுதான். தன்னுடைய திருமண விஷயம் தொடர்பாகத் திடீர் என்று தொலைபேசியில் சொல்ல முனைந்ததன் மூலம் அவன் தன் தாய்க்கு மிகப்பெரும் அதிர்ச்சியை அளித் துள்ளான். நேரில் போய், தன்னுடைய தாயார் மிக மகிழ்வாகவும், 'ரிலாக்ஸா' கவும் இருக்கும் நேரமாகப் பார்த்துப் பேச்சை இதமாகத் தொடங்கி அவரது முகபாவனை மூலம் மனதை ஓரளவு கணித்து மெல்ல தன்னுடைய விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தால், அந்தத் தாயாருக்கு மாரடைப்பு ஏற்பட்டிருக்கப்போவதில்லை. அவ்வாறே எடுத்த எடுப்பில் எல்லாவற்றையும் கொட்டாமல் போதிய இடைவெளி கொடுத்து படிப் படியாக விஷயத்தைக் தெளிவுபடுத்தி இருக்க வேண்டும்.

உதாரணமாக, தனக்கு ஒரு பெண்மீது ஈர்ப்பு ஏற்பட்டுள்ளது. அவள் எந்தெந்த வகையில் தன்னுடைய எதிர்பார்ப்புகளோடு ஒத்துப் போகிறாள் என்பதை முதலில் சொல்லியிருக்கலாம். அதனூடே, அவளை வாழ்க்கைத் துணையாக அடையும் பட்சத்தில் தன்னுடைய வாழ்வு மகிழ்ச்சியாக அமையக்கூடும் எனத் தான் எதிர்பார்ப்பதாகத் தன் நம்பிக்கையை வெளிப்

படுத்தியிருக்கலாம். இருந்தபோதிலும், பெற்றோரின் விருப்பத்தை மீறி எதையும் செய்துவிடக் கூடாது என்ற உறுதியினால் இன்னும் அந்தப் பெண்ணிடம் எதுவும் சொல்லவில்லை என்று அவர்கள் மீதான தன்னுடைய மரியாதையையும் கௌரவத்தையும் வெளிக்காட்டியிருக்கலாம். தன்னுடைய மகிழ்ச்சிக்குத் தன் பெற்றோர் ஒரு போதும் தடையாக இருக்க மாட்டார்கள் என்று தான் ஆழமாக நம்புவதாகத் தெரிவித்து, அவர்கள் மீதான நம்பிக்கை உணர்வை வெளிப்படுத்தியிருக்கலாம். இது தொடர்பாகத் தன்னுடைய தாயாரின் எதிர்வினை எப்படி இருக்கிறது என்பதைத் தெளிவாக அறிய முனைந்திருக்கலாம். அது தொடர்பான தாயாரின் கேள்விகளுக்கு தைரியமூட்டும் வகையில் பதிலளித்து அவரை முதலில் கன்வின்ஸ் பண்ணியிருக்கலாம்.

நிலைமை சாதகமாகத்தான் இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் அந்தப் பெண் பிள்ளையின் குடும்பப் பின்னணி குறித்த சிக்கலான நிலைமையையும், இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் இத்தகைய ஒரு பெண்ணுக்கு வாழ்வளிப்பது எவ்வளவு சிறந்த செயல் என்பதையும் பக்குவமாக எடுத்துச் சொல்லியிருக்கலாம். பாதிக்கப்பட்ட நிலைமையில் உள்ள ஒரு பெண்ணின் விஷயத்தில் நாம் காட்டும் கரிசனை மூலம் அல்லாஹ்வின் அன்பும் திருப்தியும் கிடைக்கும் என்பதை அழுத்தமாக வலியுறுத்தி இருக்கலாம்.

இத்தகைய நிதானமான, இதமான அணுகுமுறை மூலம் பெற்றோருக்குத் தன் பிள்ளை மீதான பரிவுணர்வு மேலும் அதிகரிக்கும் என்பது நிச்சயம். எந்த ஒரு விஷயத்திலும் தம் பெற்றோரை எடுத்தெறிந்து பேசி, அவர்களின் மனம் புண்படும் விதமாக நடந்து கொள்வதற்குப் பதிலாக, பெற்றோரின் விருப்பத்துக்குத் தாம் மிகுந்த மரியாதை கொடுப்பதைத் தம்முடைய சொல்லின் மூலமும் செயற்பாடுகள் மூலமும் வெளிப்படுத்திக் கொள்வதனால் அவர்களின் மனதை வெல்வது சுலபம் என்பதை அனேகமான பிள்ளைகள் உணர்வதில்லை.

எனவே, படிப்பில் மிகக் கெட்டிக்காரனாக இருந்த போதிலும், ஒரு பிரச்சினை எழும் பொழுது நிதானமாகவும் தன்னுடைய பெற்றோரின் மனம் புண்படாத வகையிலும் காரியமாற்றுவதை விட்டுவிட்டு, முன்யோசனையோ பொறுமையோ இன்றி எடுத்த எடுப்பில் செயலாற்ற முற்பட்டதன் விளைவு மிகப்பெரும் குழப்பமாகவே உருவெடுத்துவிட்டது. இதனால், எல்லோருடைய நிம்மதியும் கெட்டுப்போய் பிரச்சினை இன்னுமின்னம் சிக்கலுடையதாக மாறிவிட்டது. எனவே, வாழ்க்கை என்று வரும்போது ஒவ்வொரு கட்டத்திலும் நாம் அவசரப்படாமல் மிக நிதானமாகவும் புத்தி சாதுர்யத்துடனும் செயற்படும்போது மட்டுமே பிரச்சினைகளும் குழப்பங்களும் ஏற்படுவதைப் பெரிதும் தவிர்த்துக் கொள்ள முடியும் என்பதை நம் இளைய தலைமுறையினர் கண்டிப்பாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

சரி, இத்தனை பிரச்சினைகளைத் தோற்றுவித்த அந்தக் காதல் கதையின் முடிவு எப்படி அமைந்தது தெரியுமா? இரண்டு வருட இடைவெளி அல்ல. வெறும் ஒன்றரை வருடங்களே கழிந்த நிலையில், தன் உயர் கல்விக்காக வெளிநாடு சென்றவன், அங்கேயே சிட்டிசன்ஷிப் பெற்ற பல்கலைக்கழக மாணவி ஒருத்தியை திருமணமுடித்துக் கொண்டான். முன்னர் காதலித்த பெண்ணைவிட இவள் தனக்கு மிகப் பொருத்தமானவள் என்று தான் நம்புவதாக சப்பைக்கட்டு வேறு.

வேறு ஒரு திருமணப் பேச்சுவார்த்தை வந்தபோது அதையும் தடுத்து நிறுத்திவிட்டு, வலியப்போய் மணப்பதாகக் கொடுத்த வாக்குறுதிக்கு மாறு செய்வது நயவஞ்சகத்தனம் அல்லவா, ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள ஒரு பெண்ணின் வாழ்க்கையோடு இப்படி விளையாடுவது எந்த வகையில் நியாயம் என்று அவனைக் கண்டித்தபோது, ‘நானும் மனிதன் தான். தவறு செய்வது மனித இயல்பு. அப்போது ஏதோ உணர்ச்சி வேகத்தில் எடுத்த முடிவு அது. இப்போது யோசித்துப் பார்க்கும் போது அவள் எனக்குப் பொருத்தமானவள் அல்ல, நான் வீணாக அவசரப்பட்டு விட்டேன் என்பது புரிகிறது’ என்று எத்தகைய உறுத்தலும் இன்றி சர்வசாதாரணமாக அவன் கூறியபோது எனக்கு வெறுத்துப் போய்விட்டது. கொள்கை உறுதியுடைய இளைஞன் என்று இதுவரை அவன் அணிந்திருந்ததெல்லாம் வெறும் முகமூடிதான் என்ற யதார்த்தம் புரிந்தது.

ஏற்கெனவே பல வகையிலும் நொந்து போயிருந்த நிலையிலும், ‘அவன் எங்காவது சந்தோஷமாக வாழ்ந்தால் மகிழ்ச்சியே. எப்படியோ திருமணமுடித்துக் குழந்தைகளும் பெற்ற பின் உதறித் தள்ளிவிட்டுப் போகாமல், இப்போதே அவனின் சுயரூபம் தெரிந்துவிட்டது. ஒப்பீட்டளவில் பரவாயில்லை அல்லவா? என்னைப் படைத்த இறைவன் எனக்கென ஒரு வாழ்வை வகுத்திருப்பான்’ என்று அந்தப் பெண்பிள்ளை தன் வேதனையை மறைத்துக்கொண்டு கூறியபோது, ‘அல்ஹம்துலில்லாஹ்’ என அல்லாஹ்வைத் துதித்தது, என் மனது.

**12**

# திருமணம் பேசி முடிப்பது... எதிர்பாராத மாற்றங்களும் ஏற்படும் விளைவுகளும்!

இதற்கு முந்தைய அத்தியாயங்களில் திருமணம் முடிப்பதாக வாக்குறுதி அளித்துவிட்டு ஏமாற்றிய இளைஞனால் பாதிக்கப் பட்ட இளம் பெண்ணைப் பற்றிப் பார்த்தோம். மனிதனின் மனம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறிவிடக்கூடியது. இத னால்தான் நம் முன்னோர்கள் மனம் ஒரு குரங்கு என்று சொல்லி வைத்துள்ளார்கள். ஒரு விஷயம் முதலில் சரி என்பது போல தோன்றும். பின்னர் அது பிழை போல தோற்றமளிக்கும் அல் லது அனுபவ முதிர்ச்சியின் விளைவால் நம்முடைய கடந்த கால தவறுகளை, வாழ்க்கையில் கோட்டை விட்ட இடங்களைப் பற்றி நம்மை நாமே மறுபரிசீலனை செய்து கொள்ளும் சந்தர்ப்பங் கள் நேரக்கூடும்.

எது எப்படி இருப்பினும், நேற்றைய நிகழ்வுகளையும் இன் றைய நடப்புக்களையும் அடிப்படையாக வைத்து நாம் இயங்க முடியுமே தவிர, நாளை என்ன நடக்கப்போகின்றது என்பதை முன்கூட்டியே அறிந்து நடக்கக்கூடிய சக்தி நம்மிடமில்லை என் பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தைப் பொறுத்தவரை அதிகபட்சமாக, ஓரளவு ஊகித்து எதையும் திட்டமிட முடியுமே தவிர, முடிவாக எதையுமே நம்மால் தீர்மானித்துக் கொள்ள முடியாது. உதாரணமாக, இந்த இடத்தில் மனை வாங்கினால் எதிர்காலத்தில் நல்ல விலைக்கு விற்கலாம் என்றோ, இந்தத் தொழிலுக்கு எதிர்காலத்தில் நல்ல வரவேற்பு இருக்கும் என்றோ நாம் ஓரளவு ஊகித்துச் செயல்பட முடியும். அப்படி செயல்பட்டும் வருகின்றோம். நம்முடைய ஊகம், தவறானால் அதனால் நாம் இழக்கப்போவது சில லட்சங்களாக இருக்கலாம்.

ஆனால், வாழ்க்கை என்று வரும்போது நம்முடைய தவறான ஊகங்கள் மிக பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி விடும். சில போது மீட்டெடுக்க முடியாத இழப்புகளை சந்திக்கவும் நேரலாம். இப்படியான சந்தர்ப்பங்கள் சிலவற்றையே இனி நாம் பார்க்கப் போகின்றோம்.

**திருமணம் பேசி வைக்கலாமா?**

இன்று, நம் சமூகத்தில் வருடக்கணக்காக திருமணம் பேசிவைத்த பின் கல்யாணம் செய்துவைக்கும் நடைமுறை பரவலாகி வருகின்றது. தமது பிள்ளைகள் காதல், கத்திரிக்காய் என்று வழிகெட்டு விடக் கூடாது. நல்ல இடத்தில் வந்த சம்பந்தத்தைக் கைநழுவ விட்டுவிடக்கூடாது. உறவுமுறை விட்டுப் போகக் கூடாது முதலான பல்வேறு காரணங்கள் இதற்காக சொல்லப்படுகின்றன.

இந்தக் காரணங்களின் பின்புலத்தில் உள்ள நியாயங்கள் ஓரளவு ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இருப்பதென்னவோ உண்மைதான். ஆனால், இப்படி திருமணம் பேசிவைத்துள்ள இளம் ஜோடிகளிடையேயான உறவு நிலை எப்படி உள்ளது? அவர்களுக்கிடையில் பேணப்படும் வரையறைகள் எந்தளவு இஸ்லாமிய வரம்புகளுக்குட்பட்டது? என்பன குறித்துக் கரிசனை கொள்ளப்படுகின்றதா என்பது இங்கு முக்கியமானது.

ஏனெனில், இன்று திருமணம் பேசிவைத்துள்ள இருவர் நாளைய கணவன் - மனைவியர் தானே என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில், அவர்கள் இருவருக்கும் இடையில் தொலைபேசி உரையாடல்கள், சந்திப்புக்கள் என்பன சர்வசாதாரணமாக அனுமதிக்கப்படும் நிலை பரவலாகி வருகின்றது. சில வீடுகளில் இளைஞன் தனக்கு திருமணம் பேசி வைக்கப் பட்டுள்ள இளம்பெண்ணின் வீட்டுக்கு வருவதும், அவர்கள் இருவரும் தனிமையில் பேசிக் கொண்டிருப்பதும் அனுமதிக்கப்படுவதும் உண்டு. இந்த நடைமுறை ஏற்றுக்கொள்ள கூடியதா? என்பதைப் பார்க்கும் முன் ஒரு சம்பவத்தை நாம் பார்ப்போம்.

திருமண பேச்சுவார்த்தைகள் முடிந்து வீட்டாரால் 'அடையாளம் போடுதல்' என்ற சம்பிரதாயப்படி மணமகளுக்கு ஒரு தங்கமாலை வழங்கப் பட்டாயிற்று. பெருநாள் நல்லநாளில் இரு தரப்பிலிருந்தும் புத்தாடைப்

பரிமாற்றம், இடையிடையே விருந்துபச்சார வைபவங்கள் என்பன இடம் பெற்று வந்தன. தொலைபேசி உரையாடல்கள் சர்வசாதாரணமாய்த் தொடர்ந்தன. மாதமொருமுறை அந்த இளைஞன் மணப்பெண்ணின் வீட்டுக்கு வந்து தனிமையில் உரையாடிக் கொண்டிருந்துவிட்டுச் செல்லும் வழமை கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் வரை நீடித்தது.

இதோ அந்தத் திருமணம் இன்னும் ஓரிரு மாதங்களில் நடக்கத்தான் போகின்றது என்று மிகுந்த நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்த வேளையில், ஏதேதோ காரணங்களால் திருமணம் நின்றுபோனது. மணப் பெண்ணின் வீட்டார் அந்தப் பையனிடமிருந்து பெற்றுக்கொண்ட நகை, உடை, பரிசுப் பொருட்கள் முதலானவற்றைத் திருப்பிக் கொடுத்து விட்டு அந்தப் பெண்ணை வேறு ஒருவருக்குக் கட்டிவைத்தார்கள்.

திருமணம் ஏன் நின்றது என்பதைப் பற்றி நாம் இங்கே அலசப் போவதில்லை. அது தேவையற்றதும் கூட. ஆனால், நாளை எதுவும் நடக்கலாம் என்ற முன் ஜாக்கிரதை உணர்வு இல்லாத போக்கினால் ஏற்படக்கூடிய சீர்கேடு எத்தகையது என்பதையே நாம் இங்கு பார்க்கப் போகின்றோம்.

ஒரு திருமணத்தைப் பொறுத்தவரையில், அது நடந்து முடியும்வரை அது சர்வ நிச்சயமாய் நடக்கும் என்று நாம் நம்பி விடமுடியாது; நம்பவும் கூடாது. இந்நிலையில், திருமணம் பேசி வைக்கப்படும் அந்த ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் அந்நியர்களே. அவர்கள் இருவரிடையேயும் எதிர்காலக் கணவன் - மனைவி தானே என்ற உரிமையுணர்வுடனான தொலைபேசி உரையாடலோ, நேரடி சந்திப்புக்களோ அனுமதிக்கப்பட்டதல்ல என்பது கண்கூடு. மேற்படி சம்பவத்தில், திருமணம் கடைசி நேரத்தில் நின்றுபோனது. பொருட்கள் திருப்பி ஒப்படைக்கப்பட்டதென்னவோ உண்மைதான்.

ஆனால், வருங்கால கணவன் - மனைவி தானே என்ற உரிமையுணர்வில் அவர்களிடையே இருந்த நெருக்கமான உரையாடல்கள், சின்னச் சின்னசில்மிஷங்கள் என்பன இடம்பெற்றிருக்குமானால் (அல்லாஹ்வே மிக அறிந்தவன்) அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியாதல்லவா? நாளை மற்றொருவன் துணைவனான நிலையில், எதிர்பாராத விதமாக அந்த நபரை ஒரு பொது இடத்தில் சந்திக்க நேர்ந்தால், அது அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு சங்கடத்தை அளிக்கக்கூடும்?

எனவே, திருமணம் பேசி வைக்கப்பட்டுள்ளது தானே என்பதையே முழுமையான லைசன்ஸ் என்று எடுத்துக்கொண்டு அவர்கள் இருவரிடையே முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டுவிட முடியாது. நாளை அந்தத் திருமணம் ஏதேனும் ஒரு காரணத்தினால் நின்று போகலாம் அல்லது இருவரில் ஒருவர் மரணித்து விடலாம் அல்லது மனம் மாறலாம். எனவே, இது விஷயத்தில் பெற்றோர்கள் மிகக் கண்டிப்பான நடைமுறைகளைக் கடைபிடிக்க தவறக்கூடாது. இயன்றவரை உடனடியாக மணமுடித்துக்

கொடுக்க முனைவதே சிறப்பான நடைமுறையாக இருக்கும். இஸ்லாத்தின் பார்வையில் அதுதான் சரியானதும் கூட.

**வழி தவறும் பருவம்:**

பிள்ளைகளுக்கு தேவை சிறைக் கட்டுப்பாடா? அல்லது பெற்றோரின் அரவணைப்பா?

அந்தப் பெண்பிள்ளைக்கு வயது பதினெட்டு. செல்வச் செழிப்பும் அரசியல் செல்வாக்கும் மிகுந்த குடும்பம் அவளுடையது. என்னென்ன தேவை என்று சொன்னால் அடுத்த கணத்தில் அது கைக்கு வந்துவிடும். இருந்துமென்ன பயன்! தங்கக் கூண்டில் வாடும் பச்சைக் கிளியின் மன நிலை அந்த இளம் சிட்டுக்கு. தங்கத்தால் செய்திருந்தாலும் கூண்டு ஒரு போதும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக இருக்காது அல்லவா? எல்லா வசதி வாய்ப்பும் அவளுக்கு இருந்தது.

ஆனால், தன் தாத்தா - பாட்டி வீட்டில் போய் ஆசைதீர இரண்டு நாள் தங்கி விட்டு வரக்கூட தந்தை அனுமதியளிப்பதில்லை. உடன் பயிலும் தோழிகளின் வீட்டு வைபவங்களுக்கோ, பாடசாலை சுற்றுலாக்களுக்கோ சென்றுவரும் சுதந்திரம் இல்லை. பள்ளிக்கூடத்துக்குக் கூட வேனில் போய்த் திரும்பி வந்தாள். வீட்டு காம்பவுண்டு சுவருக்குள் வந்துவிட்டால் சிறைச் சாலை ஒன்றினுள் நுழையும் உணர்வு அவளுக்கு. வீட்டிலும் அவளுக் கென்று ஓர் அறை. தந்தையும் தாயும் அவரவர் வேலைகளில். தனிமை உணர்வும் விரக்தியும் அவளை வாட்டின. இதில் பள்ளிக்கூடப் படிப்பு முடியவே அவளுடைய நிலை மேலும் பரிதாபகரமாய் மாறிற்று.

இந்நிலையில் மாலை வேளைகளில் மொட்டை மாடியில் நின்றபடி கண்ணுக்கெட்டும் தொலைவு வரை பார்த்திருந்துவிட்டுத் திரும்புவதை அவள் வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள். அந்த வழக்கம் அவளுடைய வாழ்க்கைப் போக்கையே திசை திருப்பப் போகின்றது என்பதை அவள் அப்போது அறிந்திருக்கவில்லை.

ஒருநாள் தற்செயலாகக் கீழே பார்த்தபோது ஓர் அழகான இளைஞன் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள். முதலில் கோபம் வருகிறது. உடனே அவ்விடத்தை விட்டு வீட்டுக்குள் வந்தாலும் அவனுடைய சிரித்த முகம் மறுபடி அவள் மனதில் தோன்றி மறைகிறது. நாட்கள் நகர்கின்றன. அவன் பால் அவள் மெல்ல மெல்ல ஈர்க்கப்படுகின்றாள்.

இருவரும் சைகை மொழியாக மிக நெருங்கி விடுகிறார்கள். அவன் ஓர் ஆட்டோ டிரைவர். அதிகம் படிக்காதவன். எப்படியோ ஒரு கைத் தொலைபேசி அவன் மூலம் அவளுக்கு கிடைத்து விடுகின்றது. அடுத்து என்ன நடந்திருக்கும் என்பதை இங்கே விவரிக்கத் தேவை இல்லை.

ஒருநாள் அதிகாலை நேரம். அவளின் வீடு அல்லோலகல்லோலப் படுகின்றது. மகளைக் காணாமல் பைத்தியம் பிடித்தவர் போல திணறிப் போனார் அவள் தந்தை. சுமார் பத்து நாட்களின் பின் எப்படியோ தன்னுடைய அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி மகளை மீட்டெடுத்து விட்டார். ஆனால், ஊரார் முன் ஏற்பட்ட தலைகுனிவை அவரால் என்னதான் செய்துவிட முடியும்?

தான் செய்த தவறு எவ்வளவு பாரதூரமானது என்பதை அந்தப் பெண் பிள்ளை காலங்கடந்து உணர்ந்துகொண்டாலும், இழந்த எதனையும் ஈடு செய்துவிட முடியுமா? என்ற கேள்வி அவள் மனதில் காலமெல்லாம் வடுவாகவே இருக்கப் போகின்றது.

இந்நிலையில், தவறு செய்த தன் பிள்ளையை மீட்டு எடுத்ததோடு அந்தப் பெற்றோரின் கடமை முடிந்துவிடுமா? அதன் பின் இத்தகைய ஒரு பிரச்சினையை கையாள்வது எப்படி? என்ற கேள்வி இங்கு முக்கியமானது. நம் கைவிரல் நமது கண்ணில் குத்திவிட்டது என்பதற்காக அதை அப்படியே வெட்டியெறிந்து விட முடியுமா? இல்லையல்லவா! அது போலத்தான் இதுவும்.

இளமை வேகத்தினால் தமது மகள் பாரதூரமான ஒரு பிழையைச் செய்துவிட்ட போதிலும், தமிழ் சினிமா பாணியில் அந்தப் பிள்ளையை பெற்றோரே வெட்டிக் கொலைசெய்துவிட முடியாது. ஏனெனில், அவளுடைய அந்தத் தவறுக்குப் பின்புலத்தில் கண்ணுக்குத் தெரியாத நம்முடைய தவறுகளும் காரணமாய் இருந்திருக்கலாம் என்பதை பெற்றோராகிய நாம் உணர வேண்டும்.

அவ்வாறே, குடும்ப கௌரவத்தை நிலைநாட்டும் ஆவேசத்தில் அந்தப் பிள்ளையை தனக்கிருக்கும் அரசியல் செல்வாக்கின் மூலம் மீட்டெடுத்தது பெரிய காரியமல்ல. மாறாக, அதன் பின்னர் அந்தப் பிள்ளையின் விஷயத்தை எப்படி மிக கவனமாகக் கையாள்வது என்று தெரிந்து வைத்திருப்பதும் இன்றியமையாததாகும்.

13

# குழந்தைகள் எப்போதுமே குழந்தைகள் தானா?

**பெ**ற்றோர்களைப் பொறுத்தவரை குழந்தை எப்போதும் குழந்தைதான். இது உண்மைதான் என்றாலும், அக்குழந்தை வளர வளர அகபுறத் தேவைகள் அதிகரிக்கின்றன என்பதையும், அதன் நடத்தைக் கோலத்தை வீட்டுச் சூழல் மட்டுமின்றி சுற்றியுள்ள சூழலும் சேர்ந்தே கட்டமைக்கின்றன என்பதையும் அவர்கள் நினைவிற்கொள்ள மறந்துவிடுகின்றனர்.

தமது பிள்ளை ஓரளவு வளர்ந்த பின்பும் கூட, "அது குழந்தை, அதற்கு என்ன தெரியும்? அக்குழந்தையின் விஷயத்தில் நாம் தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கவும் எடுத்துக் கொடுக்கவும் வேண்டும்" என்றெல்லாம் நினைக்க ஆரம்பிக்கிறார்களே தவிர, அந்தப் பிள்ளைக்கென்று தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் இருக்கக்கூடும் என்பதையோ தம்முடைய விஷயங்களில் தீர்மானம் எடுக்கத்தக்க அறிவும் திறனும் இருக்கலாம் என்பதையோ சிந்திக்கவே முனைவதில்லை.

இப்படிச் சொல்கிறேன் என்பதால், பிள்ளையை எந்தக் கட்டுப்பாடுமின்றி தன்னிச்சையாக வளர அனுமதிக்கச் சொல்கிறேன் என்பது பொருளல்ல. சிறுவயது முதலே அளவான கண்காணிப்புடனும் போதிய வழிகாட்டலுடனும் நாம் நம்முடைய பிள்ளையை வளர்ப்பதோடு, தமது விருப்பு வெறுப்பு

குறித்து வெளிப்படையாகக் பெற்றோரிடம் கூறக்கூடிய வாய்ப்பை நாம் அவர்களுக்குத் தரவேண்டும்.

அத்தோடு, தன்னால் சாதிக்கவும் தீர்மானம் எடுக்கவும் முடியும் என்ற தன்னம்பிக்கையையும், தாம் எடுக்கும் முடிவு பிழையாயின் நிச்சயம் சரியான முடிவுநோக்கி நம் பெற்றோர் நம்மை வழிநடாத்துவார்கள் என்ற நம்பிக்கை உணர்வையும் நாம் அவர்களுக்கு ஊட்டி வளர்க்கத் தவறக் கூடாது. காரணம், சவால்களும், சோதனைகளும், சிக்கல்களும் நிறைந்த ஒரு சமூகத்தில் நாளை வாழப் போகும் அவர்கள் தம்முடைய வாழ்வைத் தாமே கட்டமைத்துக் கொள்ளக்கூடிய ஆளுமையுள்ளவர்களாக மாறவேண்டியது அவசியம். எப்போதும் எதற்கெடுத்தாலும் தாயின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு திரியும் சார்பு மனநிலை கொண்ட, தனித்தியங்கும் திராணியற்ற பலவீனர்களாக அவர்கள் மாறிவிடக் கூடாது என்பதை நாம் உறுதியாக மனதிற் கொள்ள வேண்டும்.

இங்கு நான் எதிர்நோக்கிய இரு நிகழ்வுகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகின்றேன், என்னுடைய நாலரை வயது மகனை சர்வதேசப் பாடசாலையில் முதலாம் வகுப்பிலே சேர்த்தாயிற்று, தமிழ்மொழியே அல்லது சிங்கள மொழியை விருப்பத் தெரிவுக்குரிய ஆப்ஷனல் பாடமாகத் தெரிவுசெய்யலாம் என்ற நிலை.

தமிழை நானே வீட்டில் கற்றுக் கொடுக்கலாமே என்ற எண்ணத்தில், சிங்கள மொழியை விருப்பத் தெரிவுக்குரிய இரண்டாம் மொழியாகத் தெரிவு செய்து அதற்குரிய பாடநூலையும் வாங்கிக் கொடுத்தனுப்பி விட்டேன்.

வார இறுதியில் வீட்டுப் பாடங்களுக்காக அனுப்பி வைக்கப்பட்ட பயிற்சிப் புத்தகங்களைப் பார்வையிட்ட போது எனக்குத் திகைப்பு! 'என்ன இது, இவன் தமிழ்ப் பயிற்சி செய்திருக்கிறானே!' என்று வியந்த நான் மறுவாரமே வகுப்பாசிரியையைச் சந்தித்து, ''நீங்கள் சிங்களத்துக்குப் பதில் தவறுதலாகத் தமிழ் மொழி படிப்பித்துள்ளீர்களோ என்று எனக்குச் சிறுகுழப்பம்...'' என்று தயங்கிக் கொண்டே சொன்னபோது, ''இல்லையில்லை, உங்கள் மகன் ராஷித் தான் தனக்குத் தமிழ் படிக்கத்தான் விருப்பம் என்று தமிழ் வகுப்பில் வந்து உட்கார்ந்தார். என்றாலும், நீங்கள் விரும்பினால் பாடத்தை மாற்றலாம்'' என்றார். நான் அவசரமாக, ''இல்லையில்லை. அதற்கு அவசியமில்ல. அவன் தானாகத் தனக்கு விருப்பமான பாடத்தைத் தெரிவு செய்துள்ளான். அதனை மதிப்பது என் கடமை'' என்று சொல்லி விட்டு வந்துவிட்டேன். நாலரை வயது சின்னப் பையனுக்கு பாடத்தைப் பற்றி என்ன தெரியும் என்ற 'பெரிய மனித' நினைப்பில் அவனிடம் 'இந்த இரண்டில் எதைச் செய்யப் போகிறாய்?' என்று ஒருதரமேனும் கேட்டுக் கொள்ளாததைப் பற்றி எனக்கே வெட்கமாக இருந்தது.

அடுத்த சம்பவமும் சற்று சுவாரஸ்யமானதுதான். பத்து நாள் விடுப்பில் நானும் மகனும் கட்டார் போயிருந்தோம். அங்கே குடும்ப சகிதம் ஓர் இந்திய சகோதரியின் வீட்டில் விருந்து. அவர்களுக்கு இரு குழந்தைகள். நாமும் குழந்தைகளும் இரவுணவை உட்கொள்ள அமர்ந்த போது, என் மகன் திடீரென்று, ''முஸ்தஃபா முஸ்தஃபா டோண்ட் வொர்ரி முஸ்தஃபா... காலம் நம் தோழன் முஸ்தாஃபா...'' என்று உரத்த குரலில் பாட, நானும் கணவரும் ஒருகணம் விக்கித்துப் போனோம்.

ஏனென்றால், அவனைக் குர்ஆன் மனனம் செய்விக்க வேண்டும் என்ற ஆசையில் வீட்டில் நான் டி.வி. யோ ரேடியோவோ போடுவதில்லை. கம்பியூட்டரில் அவனுக்குத் தேவையான கிராஅத், நர்ஸரி ரைம்ஸ், கஸீ தாக்களைப் போடுவதோடு சரி. ஒரு வாரம் முன்னதாக வீடு வந்திருந்த தம்பியின் கைத்தொலைபேசியில் ஓரிருதரம் சிணுங்கிய பாடல் வரிகளை இப்படி மனதில் பதித்துக் கொள்வான் என நான் கனவிலும் கருதியிருக்க வில்லை.

மகன் சினிமாப் பாட்டுப் பாடியதைக் கேட்ட என் கணவரின் முகம் கறுத்தது. என்னையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு, கோபத்தைக் கட்டுப் படுத்திய குரலில், ''மகன், அந்தப் பாட்டைப் பாட வேண்டாம். அது சரி யில்லை, எனக்கு அந்தப் பாட்டு பிடிக்கவில்லை, மகன்'' (Son, don't sing that song. It is not nice. I don't like that song) என்றார்.

''ஆனாலும் அந்தப் பாட்டு எனக்கு ரொம்பப் பிடித்திருக்குது வாப் பா. அது என்னுடைய அபிமானப் பாடல்'' (But, wappa I like that song very much. It is my favourite song) என்று என் நாலரை வயது மகன் எந்தத் தயக்க மும் இல்லாமல் பட்டென்று சொன்னபோது, ஊசி விழுந்தால் கூட கேட் கக் கூடிய நிசப்தம் அங்கே. என்ற போதிலும், தன்னுடைய விருப்பத்தை, கருத்தை தயக்கமின்றித் துணிவாகச் சொல்லும் அவனுடைய சுயாதீனமான இயல்பை மழுங்கடிக்க விரும்பாத காரணத்தால், நானோ கணவரோ அதற்கு எதிராக எதுவும் கூறாமல் மௌனம் சாதித்தோம். அதன் பின் சில நாட்களில் அவனமாகவே அதைப் பாடுவதை நிறுத்திக் கொண்டு விட்டான்.

இங்கே மற்றொரு விஷயத்தையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். அதா வது, குழந்தைகளைப் பொறுத்தவரையில், நாம் எதையேனும் கடுமை யாக மறுதலிக்கும் போது அதுவே வேண்டும் என்று விடாப்பிடியாக நிற்கும் பிடிவாதமும் முரட்டுத்தனமும் அதிகரிக்கிறது.

எனவே, சில விஷயங்களை அவர்கள் போக்கிலேயே விட்டுப்பிடிப் பதன் மூலமும், மற்றும் சில விஷயங்களில் அமைதியாகவும் பொறுமை யாகவும் எடுத்துவிளக்கித் தெளிவுபடுத்துவதன் மூலமும் அவர்களை நம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளலாம். சென்ற அத்தியாயத்தில் நாம்

சொன்ன பெண்பிள்ளையின் சம்பவத்திலும் இத்தகைய உளவியல் ரீதியான அணுகுமுறைகள் பற்றிய புரிதல் இன்மையால் பெற்றோர் தரப்பிலிருந்தும் சில தவறுகள் நேர்ந்துள்ளன என்பதை மறுக்க முடியாது.

பிள்ளைக்குத் தேவையான சுவையான உணவு வகையறாக்கள், உடைகள், ஆபரணங்கள், அலங்காரப் பொருட்கள் என்று அனைத்தையும் குறைவேயின்றி அள்ளிக்கொடுத்த அந்தப் பெற்றோர், அப்பிள்ளையின் மனதின் தேவையை அளந்து அதற்கேற்றதைக் கிள்ளிக் கொடுக்கவும் மறந்துவிட்டனர்.

பென்னம்பெரிய ஒரு வீட்டில் வாழ்ந்தாலும் தன்னை ஓர் அனாதை போல அடிக்கடி உணர்வதை அவளால் தவிர்க்க முடியவில்லை. அவரவர் அவரவரின் வேலைகளில் மும்முரமாக இருப்பதும், சாப்பாட்டு நேரத்தில்கூட அவரவர் இஷ்டப்பட்ட நேரத்தில் தாமே பரிமாறி எடுத்துக் கொண்டு சாப்பிடுவதும் என்று எல்லாவற்றிலும் ஓர் இயந்திரத்தனம்.

ஒரு குடும்பத்துக்குள் இருக்க வேண்டிய உறவுகளின் பரஸ்பர நெருக்கம், அந்நியோன்னியம், குதூகலம், கலகலப்பு இவையெல்லாம் எங்கோ ஓர் இருட்டு மூலைக்குள் ஒளிந்துகொண்டு இருப்பதான பிரமை. நல்ல இனிமையான அழகிய வார்த்தைகள் அங்கே வரண்டுபோய்க் கிடந்தன. அந்த வீட்டை மௌனமே பெரிதும் ஆட்சி செய்தது.

தொலைக்காட்சி பார்த்துப் பொழுதை ஓட்டுவது என்றாலும், எத்தனை மணிநேரம்தான் அதையே பார்த்துக் கொண்டிருப்பது என்ற சலிப்புவேறு. மனசின் ஆழத்தில் தனக்குக் கிடைக்காமல் போன எதையோ தேடித் தவிக்கும் ஏக்கம். இப்படியாக, தமது மகளுக்கும் தமக்கும் இடையில் மிக ஆழமான ஒரு மானசீக இடைவெளி தோன்றி வளர்வதை அந்தப் பெற்றோர் உணரவே இல்லை. விளைவு? திடீரென்று நேற்று முளைத்த உறவே பெரிதென்ற கணிப்பினால் எல்லாவற்றையுமே உதறி எறிந்துவிட்டு யார், எவர் என்ற ஆழமான தேடல் அற்ற நிலையில் வீட்டைவிட்டே புறப்பட்டுப் போகத் துணிந்துவிட்டாள்.

எப்படியோ பெண்ணை மீட்டுக்கொண்டு வந்தாயிற்று. பைத்தியம் பிடித்தவள் போல சுவரையே வெறித்தபடி உட்கார்ந்திருக்கும் அவளைப் பார்த்து அவர்கள் பயந்து போனாலும் காலப் போக்கில் சரியாகிவிடும் என்ற அசட்டுத் தைரியத்தில் வழமை போலவே இப்போதும் பிரச்சினையின் ஆழம் புரியாமல் அலட்சியம் செய்தனர்.

இந்நிலையில், பேத்தியின் அவலநிலை கண்டு பொறுக்காத பாட்டி மூலம் இந்தப் பிரச்சினை என் கவனத்துக்கு வந்தது. ஏதோ எனக்குத் தெரிந்த வகையில் உரிய ஆலோசனை வழங்குவது கடமை என்ற அடிப்படையில் இத்தகைய ஒரு சூழ்நிலையைக் கையாள்வது எப்படி என்பதை விளக்கினேன்.

நடந்து முடிந்த சம்பவம் துர்ப்பாக்கியமானதுதான். எனினும், அதை யே நினைத்துக் கொண்டு மருகுவதோ, ''நீ இப்படிச் செய்தாயே!'' என்று அந்தப் பிள்ளையைப் போட்டு அடிப்பதோ, அடிக்கடி குத்திக்காட்டி நோகடிப்பதோ புத்திசாலித்தனமான நடவடிக்கைகள் அல்ல. பிள்ளையை மீட்டு வந்தது பெரிதல்ல.

மானசீகமாகத் துன்புற்று, ஒருவகையான அதிர்ச்சியிலும் பயத்திலும் உறைந்து போயிருக்கும் அந்தப் பிள்ளையை அத்தகைய மனநிலையில் இருந்து மீட்டெடுத்து, அவளை ஓரளவாவது தேற்றுவது தான் இப் போதைய தேவை. அதற்காக நாம் செய்ய வேண்டியது என்ன? முதலில் அப்பிள்ளையின் வீட்டுச் சூழலை மாற்றியமைக்க வேண்டும். அவள் இருந்த பழைய அறையை மாற்றிக் கொடுத்து, பழைய நினைவுகளைக் கிளறக்கூடிய அம்சங்களை அங்கிருந்து அகற்ற வேண்டும்.

வேறு அறை கொடுப்பது சாத்தியமில்லை என்று கண்டால், இருந்த அதே அறையை முடிந்தளவு மாற்றியமைத்தல் வேண்டும். உதாரணமாக, மன அமைதிதரும் வகையில் சுவரின் வர்ணத்தை (இளநீலம் அல்லது இளம் பச்சை) மாற்றுதல், வேறு வர்ணத்தில் திரைச் சீலைகளைத் தொங் கவிடுதல், அழகான படங்களைக் கொளுவுதல், பலவர்ணப் பூச்சாடி யொன்றை வைத்தல், கட்டி-மேசை முதலான தளபாடங்களை இடமாற் றம் செய்தல் என்ற ரீதியில் மாற்றியமைக்கலாம்.

''இதென்ன பைத்தியக்காரத்தனமாய் அல்லவா உள்ளது' என நினைக் கக் கூடியவர்களும் உங்களில் இருக்கலாம். ஆனால், பாதாளத்தில் விழுந் தது போல கிட்டத்தட்ட உளவியல் நோய் ஏற்படும் அளவுக்கு மனத்தாக் கம் கொண்டுள்ள ஒருவரை அதிலிருந்து மீட்டெடுப்பதற்கு நாம் எடுக் கின்றன சின்னச் சின்ன முயற்சியும் மிக முக்கியமானதே என்பதை நாம் உணரவேண்டும்.

புறச் சூழலை மாற்றியமைப்பதில் மற்றுமொரு முக்கியமான அம்சம் என்னவெனில், வீட்டில் உள்ளவர்கள் அந்தப் பிள்ளையுடன் மிகவும் கனி வாகவும் அனுசரணையாகவும் நடந்துகொள்ளத் தம்மைத் தாமே பக்கு வப்படுத்திக் கொள்ளுதல்தான்.

அதாவது, எக்காரணம் கொண்டும் நடந்து முடிந்தவை பற்றி ஒரு வார்த்தை தானும் பேசாமல் இருக்க வேண்டியது கட்டாயமானது. எவ் வளவுதான் கோபமும் வெறுப்பும் ஆத்திரமும் இருந்தாலும் அவற்றை வெளிக்காட்டுவதற்கு ஏற்ற தருணம் இதுவல்ல என்பதையும், விளக்கை மலரென்று நினைத்து ஏமாந்து கையைச் சுட்டுக் கொண்டு அழுதபடி வந்து நிற்கும் சின்னஞ்சிறு குழந்தையை, ''மடக் கழுதை'' என்று வைது, இன் னும் இரண்டு முதுகில் சாத்துவது எவ்வளவு காட்டுமிராண்டித்தனமோ, ஏதோ ஒரு வகையில் நம்முடைய அஜாக்கிரதையாலும் தவறுசெய்யத்

தூண்டப்பட்டு, எல்லாம் இழந்து பரிதாபகரமாய் வந்துநிற்கும் பிள்ளையிடம் முரட்டுத்தனமாய் நடந்துகொள்வதும் காட்டுமிராண்டித்தனமே என்பது நமக்குப் புரிய வேண்டும்.

அதுமட்டுமல்ல, எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்தப் பிள்ளையைத் தனிமைப்படுத்தக்கூடாது. இயல்பாக இருப்பது போலக் காட்டிக் கொண்டு கண்டிப்பாக யாராவது கூடவே இருக்க வேண்டும். அவளுடைய மனதுக்குப் பிடித்தமான ஓர் உறவினர் உடனிருப்பின் விரும்பத் தக்கது. அது அவளின் பாட்டியாக, சித்தியாகக்கூட இருக்கலாம்.

முடியுமாக இருக்கும் பட்சத்தில் குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றுகூடி ஒரு மாற்றத்தை நாடி ஒரு சுற்றுலா போய் வரலாம். அல்லது புரிந்துணர்வோடு நடக்கக்கூடிய யாரேனும் ஓர் உறவினர் அல்லது நண்பரின் வீட்டுக்கு அழைத்துப் போகலாம். இடையிடையே குடும்ப ஒன்றுகூடல்களை ஏற்படுத்தலாம். என்றாலும், இதன் போதெல்லாம் யாரேனும் நடந்த சம்பவத்தை இழுத்துப் பேசிவிடாமல் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியம்.

அடுத்து, மேற்படி பிள்ளையை ஒரு நல்ல உளநல ஆலோசகரிடம் - அவர் ஓர் உளநல ஆலோசகர் என்பது வெளித்தெரியாத வகையில் - அழைத்துச் செல்லலாம். நல்ல, ஆக்கபூர்வமான பொழுதுபோக்குகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம். தையல், பின்னல், சித்திரம் தீட்டுதல், பெயிண்டிங் போன்ற மனதை ஒருமுகப்படுத்தக் கூடிய வேலைகளில் ஈடுபடுத்தலாம்.

ஆன்மீகப் பயிற்சிகளை வழங்கலாம். இப்படி எத்தனையோ வழி முறைகளைக் கையாண்டு அந்தப் பிள்ளையை பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டியது அந்தப் பிள்ளையை உண்மையாகவே நேசிக்கும் பெற்றோரின் மிகப் பிரதானமான கடமையாகும்.

நம் கண்ணைக் குத்திவிட்டது என்பதற்காக எப்படி நம் விரலை நாம் வெட்டியெறிந்துவிட முடியாதோ, அதுபோலத்தான் இதுவும். தவறு செய்துவிட்டது என்பதற்காக அரும்பாடுபட்டுப் பெற்ற நம் பிள்ளையை நம்மால் உதறியெறிந்துவிட முடியாது அல்லவா?.

# 14

# விளையாட்டும் விபரீதமாகலாம்

**சி**ல சமயங்களில் நாம் விளையாட்டாகக் கருதிச் செய்யும் சில விஷயங்கள், நாமே எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்திவிடக்கூடும் . குடும்பம், குடும்ப உறவுகள் என்று வரும் போது கேலி, கிண்டல், செல்லச் சண்டைகள் என்பன இருப்பது சகஜம்தான். ஆனால், அவையெல்லாம் தம் அளவைத் தாண்டாதவரை எந்தப் பாதகமும் ஏற்படப் போவதில்லை.

சில குடும்பங்களில் ஓரளவு விபரம் தெரியும் சிறுவயது முதலே மதினி-மச்சான் உறவுசொல்லிக் குழந்தைகளைக் கேலி செய்யும் வழமை இருக்கவே செய்கின்றது. சில சமயம் தாய் மாரே இந்தக் கேலியில் பங்கெடுப்பதும் உண்டு. "என்ன இருந்தாலும், அவன் அவளின் முறை மச்சான் இல்லியா?" என்பதான பேச்சுக்களும் அதில் அடங்கும். அவ்வாறே, வீட்டில் உள்ள சகோதரர்கள், சமவயதுள்ள உறவுப் பிள்ளைகள் மத்தியில் அந்த மச்சானின் அல்லது மதினியின் பெயரைப் பட்டப் பெயராகச் சொல்லி அழைத்தல் முதலான சேட்டைகளும் இருக்கக்கூடும். வீட்டுப் பெரியவர்கள் காதில் இவை விழுந்தாலும் அவற்றைக் கண்டுகொள்ளாமல் ஒரு புன்னகையோடு கடந்து போய்விடுகின்றனர். இது தவறாகும்.

ஏனெனில், இதுபோன்ற மச்சான் மதினியின் பெயரைப் பட்டப் பெயராகச் சொல்லி அழைத்தல் முதலான செயல்பாடுகள் வெறும் கேலிப் பேச்சாக இருந்தாலும், கள்ளங்கபடமற்ற சின்னஞ்சிறு உள்ளங்களில் அது பெரும் தாக்கத்தை விளைவித்து விடக்கூடும். வேண்டாத ஆசைகளை, எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திவிடக்கூடும். எதிர்காலத்தை நாம் அறிய மாட்டோம். யாருக்கு யார் வாழ்க்கைத் துணையாக அமையக்கூடும் என்பது பற்றிய அறிவு நமக்கில்லை. எனவே, இத்தகைய நடைமுறைகளைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் அனாவசியமான பிரச்சினைகள் எழாமல் தடுக்கலாம்.

பள்ளிக்கூடம், கல்லூரிகள் என்பவற்றிலும், நண்பர்கள் ஒன்றுகூடும் இடத்திலும் கூட குறித்த ஓர் ஆணின் பெயரைச் சொல்லிப் பெண்ணும், குறிப்பிட்ட ஒரு பெண்ணின் பெயரைச் சொல்லி ஆணும் கேலி செய்யப் படுவதுண்டு. இதன் விளைவால் அதற்குமுன் எந்த ஒரு விகற்பமும் இல்லாதிருந்த இருவரிடையே அனாவசியமான ஆசைகள், எதிர்பார்ப்புகள் முளைவிட்ட சம்பவங்கள் பலவற்றை நாம் அன்றாடம் பார்த்திருப்போம். இதனை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டியது கட்டாயம்.

அல்லாதபட்சத்தில், அது நம் வாழ்வில் என்றென்றும் நீங்காத வீண் களங்கமாகவே மாறிவிடக்கூடும் என்பதைப் பெற்றோரும் ஆசிரியர்களும் உரிய முறையில் நமது பிள்ளைகளுக்கும் மாணவர்களுக்கும் அறிவுறுத்துதல் வேண்டும். குறிப்பாகப் பெண் பிள்ளைகள் விஷயத்தில் இத்தகைய பட்டப் பெயர் சூட்டிக் கிண்டலடிக்கும் விளையாட்டு விபரீதமாகி, அவர்களின் எதிர்காலக் குடும்ப வாழ்வே சிதைந்து போன சம்பவங்களையும் ஆங்காங்கே கேள்விப்படவே செய்கின்றோம். இதில், எந்த விதமான தப்பும் செய்யாத அப்பாவிப் பெண் பிள்ளைகளும் பாதிக்கப்படுவது தான் பரிதாபம்.

## இடம், பொருள், ஏவல்

எந்த ஒரு விஷயத்தைச் செய்வதானாலும் அதற்கென்று ஒரு சில வரைமுறைகள் இருக்கவே செய்யும். இதனைத்தான் நம் முன்னோர்கள் 'இடம், பொருள், ஏவல் அறிந்து காரியமாற்ற வேண்டும்' என்று சொல்லித் தந்துள்ளார்கள். ''எடுத்தேன் கவிழ்த்தேன்'' பாணியிலான நடைமுறைகள் ஒரு போதும் நல்ல விளைவை ஏற்படுத்திவிடப் போவதில்லை. இதை நாம் நம்முடைய அன்றாட வாழ்க்கை அனுபவத்தில் உணர்ந்தும் இருப்போம். சில சமயங்களில் உணர்ச்சிவசத்தால் நம்மையும் மீறி நடந்துவிடக்கூடிய சம்பவங்களால் மிகவும் வருந்தியும் இருப்போம்.

எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தில் பத்தாம் வகுப்புப் படிக்கும் ஒரு பையனின் கைத்தொலைப்பேசியில் இருந்து ஏதோ கவனக்குறைவால் யாருக்கோ அனுப்ப வேண்டிய ஒரு குறுந்தகவல் (SMS), வேறு ஒருவருக்

குச் சென்றுவிடுகின்றது. அவர் அந்தக் குடும்பத்துக்கு மிகவும் வேண்டப் பட்ட ஒருவர். எனவே, அந்தப் பையனின் கைப்பேசி எண்ணிலிருந்து கிடைக்கப்பெற்ற அந்தத் தகவலால் அவர் சற்றே அதிர்ச்சியடைகின்றார். அந்தத் தகவல் ஒரு பெண்பிள்ளைக்கு அனுப்புவதற்கென்று எழுதப்பட்ட ஒன்று. இதனை அவனின் பெற்றோருக்கு அறிவிக்க வேண்டியது தன்னு டைய கடமை என்பதை உணர்ந்த அவர், ஒருகணம் நிதானித்து யோசிக் கிறார். தந்தையிடம் சொல்வதன் மூலம் பாரதூரமான விளைவுகள் எவை யும் ஏற்படக்கூடும் என்று அஞ்சிய அவர், அவனின் தாயிடம் பக்குவ மாய் எடுத்துச் சொல்வது என்று முடிவெடுக்கின்றார். தொலைபேசி மூலம் அந்தப் பையனின் தாயைத் தொடர்புகொண்ட அவர், விஷயத்தை மெது வாகத் தெரிவிக்கின்றார்.

இந்த இடத்தில் நாம் மேலே குறிப்பிட்ட நபர் தன்னையுமறியாமல் ஒரு தவறுசெய்து விடுகின்றார். அது என்ன தெரியுமா? இவ்வளவு சீரிய ஸான ஒரு விஷயத்தை நேரடியாகச் சென்று சந்தித்துச் சொல்வதை விடுத்து, தொலைபேசியில் சொன்னதுதான். ஏனெனில், ஒருவரின் முகத்தையோ மன தை வெளிப்படுத்தும் வகையிலான முகபாவனைகளையோ நேரடியாகப் பார்த்துக் கொள்ள முடியாத நிலையில், தொலைபேசியுடே உரையாடும் இருவரிடையே ஒருவகையான தொடர் பாடல் இடைவெளி (Communication Gap) காணப்படுவது இயல்பு இந்நிலையில், சீரியஸான ஒரு விஷயம் தொலைபேசியூடே பேசப்படுவது எந்த வகையிலும் பொருத்தமானது அல்ல. இதை அவர் உணரத் தவறியதால் ஏற்பட்ட விளைவு என்ன?

தம்முடைய அருமை மகன்பற்றி மிகவும் நம்பிக்கையான ஒரு குடும்ப நண்பர் தொலைபேசி வழியே சொன்ன தகவலைக் கேட்ட அந்தத் தாயார் திடுக்கிட்டுப் போகின்றார். பதற்றம் அவரைத் தொற்றிக் கொள்கின்றது. உடம்பெல்லாம் இனமறியாத நடுக்கம் ஏற்பட, வேர்த்து விறுவிறுத்து சோபாவில் 'தொப்'பென்று போய் அமர்ந்துவிடுகின்றார். தன் மனைவி யின் நடவடிக்கைகளிலும் முகபாவனைகளிலும் வழக்கத்துக்கு மாறான தடுமாற்றத்தையும் மனக் கிலேசத்தையும் சட்டென்று கண்டுபிடித்துவிடும் அப்பையனின் தந்தை, என்ன விஷயம் என்று தூண்டித்துருவி விசாரிக் கின்றார். வேறு வழியின்றி இதுதான் விஷயமென்று சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது, அப்பெண்மணிக்கு.

தந்தைக்கோ தாங்க முடியாத சினம். என்றாலும், மகனை நேரடியாகக் கூப்பிட்டுக் கண்டிப்பதைத் தவிர்த்துக் கொண்ட அவர், படிக்க விருப்ப மில்லாவிட்டால், தன்னுடைய வியாபார நடவடிக்கைகளுக்குத் துணை யாக வந்திருக்கும் படியும் குடும்ப மானத்தைப் போக்கத்தக்க இழிவான காரியங்களில் ஈடுபடுவதைத் தான் ஒருபோதும் சகிக்கப் போவதில்லை என மகனிடம் தெரிவிக்குமாறும் மனைவியிடம் அறிவுறுத்திவிட்டு வெளி யே கிளம்பிச் சென்றுவிடுகின்றார்.

அந்தப் பையனின் அம்மாவுக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓட வில்லை. மகனை அழைத்து நேரடியாகவே "இதெல்லாம் என்ன?" என்று கேட்டுள்ளார். தனக்கும் அதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்றும், தன்னுடைய கைப்பேசியை எடுத்துப் பயன்படுத்திய நண்பர்களில் யாரே னும் இதனை அனுப்பியிருக்கக்கூடும் என்றும் அடித்துச் சொல்லி விட்டான் அவன்.

அவரோ அவனிடம் தந்தையின் மனநிலை பற்றியும் அவர் சொல்லிச் சென்ற விஷயம் தொடர்பாகவும் மகனிடம் எடுத்துச் சொன்னார். அவ னும், தான் ஒருபோதும் அப்படி நடக்கக்கூடியவன் அல்ல என்று உறுதி யாகக் கூறிவிட்டுப் போய்விட்டான். அவன் சொல்வதை நம்புவதா, வேண் டாமா என்ற அவனின் தயார் திகைத்துப் போய் நின்றார்.

அந்தத் தாயார் மகனிடம் இப்படி நேரடியாக விஷயத்தைப் போட்டு டைத்தது சரிதானா என்ற கேள்வி இங்கு முக்கியமானது.

ஏனெனில், இந்தச் சம்பவத்தில் அந்தப் பையனின் பத்தாம் வகுப்புப் பரீட்சை மிக அண்மித்திருந்த காலகட்டம் அது. இத்தகைய ஒரு பிரச் சினை தோன்றுமிடத்து, அது உண்மையோ பொய்யோ அவனின் மன நிலையை அது பெரிதும் பாதிக்கக்கூடும்.

மன அழுத்தம் படிப்பு மீதான அவனின் கவனத்தைச் சிதைக்கவும் இடமுண்டு. விஷயம் உண்மையாக இருக்குமிடத்து. 'குட்டு வெளிப்பட்டு விடுமோ, அகப்பட்டுக் கொள்வோமோ' என்ற பதைபதைப்பு அவனை நிம்மதி இழக்கச் செய்துவிடும். அதற்காக, இப்படியான ஒரு பிரச்சினை யைக் கண்டுகொள்ளக்கூடாது என்று அர்த்தமல்ல. எந்த நேரத்தில், எப் படி இதுபோன்ற பிரச்சினையொன்றை நாம் கையாள்வது என்பது குறித்து சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்பவே நாம் முடிவெடுத்துச் செயல்பட வேண்டும்.

மேற்படி குடும்பத்தில் பெற்றோர் . பிள்ளைகள் இடையே மிகவும் சுமூ கமான, நட்புறவான தொடர்பு நிலவி வருவது உண்மை. அந்த அடிப்படை யிலேயே அவனின் தாயார் அவ்வளவு வெளிப்படையாகவும் நேரடியாக வும் அதுகுறித்து அவனிடம் விசாரித்துள்ளார். அந்த வகையில், அது சரியே.

ஆனால், பரீட்சை அண்மித்துக் காத்திருக்கும் சூழ்நிலையில் இந்தப் பிரச்சினையைச் சட்டென்று போட்டு உடைக்காமல் சற்றே பொறுத்தி ருக்கலாம். பரீட்சைகள் நிறைவுறும் வரை மௌனமாக அவனைக் கண் காணித்திருக்கலாம். அவனின் போக்குவரத்துக்கள், நட்பு வட்டாரம், தொலைபேசித் தொடர்புகள், மின்னஞ்சல் பரிமாற்றங்கள் தொடர்பில் சற்று விழிப்புணர்வோடு இருந்திருக்கலாம்.

பரீட்சை முடிந்தபின் சாவகாசமாக அவனை விசாரிப்பதற்கு முன்பு அவனின் நண்பர்களிடம் ரகசியமாக அவனின் நடவடிக்கைகள் குறித்து

ஓரளவு தகவல்களைப் பெற முயன்று பார்த்திருக்கலாம். அத்தோடு, அவனிடமும் மிகவும் நாசூக்காக இந்தப் பிரச்சனை குறித்துக் கேட்டிருக்கலாம்.

நாம் ஏற்கனவே சொல்லியிருப்பது போல டீன் ஏஜ் எனப்படும் பதின்ம வயதுப் பிள்ளைகளின் மனோ உலகம் மிகவும் வித்தியாசமானது. கனவுலகில் சஞ்சரிக்கக்கூடியது. எனினும் பெற்றோர் பிள்ளைகளிடையே மிகவும் அன்னியோன்னியமான சுமூக உறவு நிலவும் ஒரு குடும்பத்தில் ஓரளவு அறிவு தெரியும் பருவத்தில் இருந்தே தமது குழந்தையை வளர்க்கத் தாம் பட்ட கஷ்டங்கள், செய்த தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் என்பன பற்றியும், குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றுவதில், பெற்றோருக்குப் பெருமை தேடித் தருவதில் பிள்ளைகளின் பங்களிப்பு எத்தகையது என்பன பற்றியெல்லாம் அடிக்கடி கலந்துரையாடப்படல் வேண்டும், வளர்ந்துவரும் நம் பிள்ளைகளின் மனதில் ஊன்றிப் புகட்டப்படல் வேண்டும்.

சில பெற்றோர்கள் தம்முடைய கஷ்டங்களை பிள்ளைகள் முன்னிலையில் முற்றாக மறைத்து, அவர்களுக்குத் தேவைக்கதிகமான வசதி வாய்ப்புக்களை வழங்குவதுண்டு. வளங்களின் அருமை தெரியாமல் அவர்கள் வளர்வதற்கு இவர்களே வழிவகுத்து விடுவதுண்டு.

இதன் மூலம் பெற்றோரின் பாசத்தையும் கரிசனையையும் தம் பிள்ளைகள் உணர்ந்து, பெற்றோர் மீது ஆழமான நேசம் கொள்ளத்தக்க சூழல் வீட்டுக்குள் எழவே முடியாமல் பண்ணிவிடுவது முண்டு. இது முற்றிலும் தவறாகும். நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு உரிமைகளையும் சலுகைகளையும் வழங்கும் அதே நேரத்தில், அவர்களின் கடமை, பொறுப்புணர்ச்சி பற்றிய ஆழமான புரிதலையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அது, பெற்றோராகிய நம்முடைய கடமை. குழந்தைகளை ஒரேயடியாக அடைத்து வளர்ப்பதும் தவறு. அவ்வாறே, எந்தக் கட்டுப்பாடுமே இல்லாமல் அவிழ்த்துவிடுவதும் தவறு. நம்முடைய பிள்ளைகள் விஷயத்தில் இவை இரண்டுக்கும் நடுவில் மிக நுணுக்கமானதொரு சமநிலை பேணப்படுதல் வேண்டும்.

15

# தொலைபேசியா? தொல்லைபேசியா?

வீட்டில் உள்ள சூழலைப் போலவே வீட்டுக்கு உள்ள புறச் சூழலும் நம்முடைய பிள்ளைகள் மீது பெரும் தாக்கம் செலுத் துகின்றன. எனினும், ஒரு பிள்ளை வீட்டுக்கு வெளியில் உள்ள சமூகத்தை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில் நெறிதவறிப் போய் விடாது இருப்பதற்கான பயிற்றுவிப்பு வீட்டில், பெற்றோரின் வளர்ப்பில் வழங்கப்படவேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது எனினும், அதனை மீறியும் பிள்ளைகள் தவறு செய் யக்கூடிய நிலைமைகளும் இருக்கவே செய்கின்றன.

**தொலைபேசியா? தொல்லைபேசியா?**

தகவல் தொழில் நுட்பத்தில் முன்னேற்றங்கண்டுள்ள ஒரு யுகத்தில் இன்று நாம் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். ஒரு காலத்தில் ஆடம்பரப் பொருள்போல் வசதி உள்ளவர்களால் மட்டுமே பயன்படுத்தப்பட்டுவந்த தொலைபேசி அல்லது கைப் பேசி இன்று சர்வ சாதாரணமாக அன்றாடம் யாரும் பயன்படுத் தக்கூடிய மிக இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. இதனால் நம் அன்றாட வாழ்வில் எத்தனையோ நலன்கள் இருப்பது போலவே ஒருசில தீங்குகளும் இருக்கவே செய்கின்றன எனலாம்.

நம் குழந்தைகளைக் கல்வி கற்பதற்காக விடுதிகளில் தங்கவிடுகின்றோம். மேலதிக வகுப்புக்களுக்காக வெளியில் அனுப்புகின்றோம். அவசியமான நேரத்தில் அவர்களைத் தொடர்புகொள்ள வசதியாகஅவர்களுக்குக் கைத்தொலைபேசிகளை வழங்குகின்றோம். சில நேரங்களில் இந்தக் கைத்தொலைபேசி மூலம் அனாவசியமான பல பிரச்சினைகளும் எழவே செய்கின்றன என்பதை அன்றாடம் நாம் காணும், கேள்விப்படும் சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

கைத்தொலைபேசி மூலம் வழிதவறிப் போய் பிழையான தொடர்புகளில் சிக்கிக் கொண்ட நம்முடைய பிள்ளைகளில் அனேகர் எல்லா நேரங்களிலும் வேண்டுமென்றே அத்தவறை இழைத்தவர்கள் என்று சொல்வதற்கில்லை. தற்செயலான நிகழ்வுகள் கூட அத்தகைய சிக்கல்களில் அவர்களை மாட்டிவிடக்கூடும் என்பதையும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும். உதாரணத்துக்கு ஓரிரு சம்பவங்களை மட்டும் பார்ப்போம்.

**ஒரு "மிஸ் காலா"லும் "மிஸ்" ஸாகலாம்**

முன்பின் அறிமுகமற்ற ஓர் இலக்கத்தில் இருந்து ஓர் அழைப்பு வருகிறது. யாராய் இருக்கும் என்ற யோசனையோடு கைப்பேசியை இயக்கினால், ராங் நம்பர்.

"ஹலோ இம்தியாஸ், எப்படி இருக்கே?"

"ஸாரி, இது இம்தியாஸோட நம்பர் கிடையாது"

"அப்போ நீங்க யாரு பேசுறீங்க?"

"நான் ஷபீனா"

இப்படியாகத் தற்செயலாகத் தொடங்கி உரையாடல்கள் மூலம் பிள்ளைகள், குறிப்பாகப் பெண் பிள்ளைகள் தேவையில்லாத சிக்கல்களில் மாட்டிக் கொள்கின்றனர் என்பது நிதர்சனம்.

எனவே பெற்றோராகிய நாம், பிள்ளைகளுக்கு, மிக முக்கியமாகப் பெண் பிள்ளைகளுக்குக் கைத்தொலைபேசி வழங்குமுன் மிக அழகிய முறையில் தேவையான அறிவுறுத்தல்களையும் வழங்க வேண்டும். அதில் மிக முக்கியமான ஒன்று, அறிமுகமற்ற எண்களில் இருந்து வரும் அழைப்புக்களுடன் தொடர்பு ஏற்படுத்த முயற்சிக்கக்கூடாது என்பதாக இருக்க வேண்டும். முடியுமாக இருந்தால், சிம் கார்டு வாங்கும்போதே ("மை ஃபைவ் நம்பர்ஸ்" என்பது போல) குறிப்பிட்ட எண்களை மட்டுமே தொடர்புகொள்ள முடியுமான விதத்தில் தொடர்புகளைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கொடுக்க வேண்டும்.

தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் மட்டும் பதின்ம (Teenage) வயதுப் பிள்ளைகளின் உபயோகத்திற்கு கைத்தொலைபேசி வழங்க வேண்டுமே தவிர, அவ்வாறு வழங்குவதை இயன்றளவு தவிர்த்துக் கொள்வதே

நல்லது. பதிலாக, வீட்டிலோ விடுதியிலோ உள்ள பொதுத் தொலைபேசி உபயோகத்தை ஊக்குவிக்கலாம். தவிர்க்க முடியாத நிலையில் கைப்பேசி ஒன்றை நம் பிள்ளையிடம் வழங்கினாலும்கூட, அவர்கள் யாருடன் உரை யாடுகிறார்கள், யாருக்கு குறுஞ்செய்தி அனுப்புகிறார்கள், எவ்வளவு நேரம் உரையாடுகிறார்கள், அவர்களின் கைப்பேசிக்கு மாதாந்திரம் எவ்வளவு கட்டணம் வருகிறது என்பதான விபரங்களைப் பெற்றோராகிய நாம் கட்டாயம் தெரிந்துவைத்திருக்க வேண்டும்.

எனக்கு தெரிந்த ஒரு குடும்பத்தில் உள்ள இளம் வயதுப் பெண் பிள்ளையின் உபயோகத்திற்கு ஒரு கைப்பேசி கொடுத்திருந்தார்கள். அவளும் தன் வகுப்புத் தோழியருடன் உரையாடுவதோடு, தனக்கு நண்பி களிடம் இருந்து வரும் சுவையான, தன் வயதுக்குரிய குறுஞ்செய்திகளை தன்னுடைய நண்பியர் வட்டத்தில் பரிமாறி வந்தாள்.

இந்நிலையில் இருவார விடுமுறையில் வெளிநாட்டில் இருந்து அவளின் சகோதரன் வீடு வந்திருந்தான் அத்தகைய குறுகிய காலத்துக்கு தனியாக ஒரு சிம் கார்டு வாங்காமல் தற்காலிகமாகப் பயன்படுத்திக் கொள் ளுமாறு தங்கை அண்ணனிடம் அதனைக் கொடுத்துவிட்டாள். இரண்டு தினங்கள் கடந்திருக்கும். திடீரென்று ஓர் அழைப்பு. ஆண் குரலொன்று பேசுகிறது. அண்ணனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வருகின்றது. அவர் அந்த குரலுக்குரியவரைத் திட்ட, அந்த நபர் பதிலுக்கு திட்ட என்று ஒரே களேபரம் தொலைபேசி உரையாடல் முடிவுற்றும் வீட்டில் பூகம்பம் வெடித்திருக்கும் என்பதைச் சொல்லவே தேவையில்லை.

தீர விசாரித்துப் பார்த்ததில் தெரிய வந்த விடயம் அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தியது. எதிர் முனையில் பேசிய அந்த பையன் தன்னு டைய தங்கைக்கு அடிக்கடி எஸ்.எம்.எஸ். என்னும் குறுஞ்செய்தி வருவ தும் அவள் அவற்றைப் பார்த்துவிட்டு வாய்விட்டுச் சிரிப்பதுமாய் இருப் பதைத் தொடர்ந்து அவதானித்த அந்தப் பையனுக்கு ஒருவிதமான சந்தே கம் ஏற்படுகின்றது. எனவே, தங்கை தனது கைப்பேசியை வைத்துவிட் டுக் குளிக்கப்போன தருணத்தில் அதை எடுத்து ஆராய்ந்து பார்க்கிறான். ஒரு குறிப்பிட்ட எண்ணில் இருந்து வந்த குறுஞ்செய்திகள் அவனுக்கு ஐயத்தை ஏற்படுத்துகின்றன.

எனவே, அவன் அந்த எண்ணைத் தொடர்புகொண்டு யார் என்று அறிய விழைகிறான். எதிர் தரப்பில் ஓர் ஆண்குரல் ஒலிப்பதைக் கேட்டு ஆத்தி ரம் கொள்கின்றான். இங்கு, இரண்டு தரப்பிலும் ஏற்படுகின்ற கொந்த ளிப்பான நிலைமைக்குக் காரணம், அவ்விரு இளம் பெண்பிள்ளைகளும் தவறுசெய்தமை அல்ல. மாறாக, சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவர்களைக் குற்றவாளிகளாகக் காட்டியமையே.

ஆனால், இங்கே நாம் சிந்திக்க வேண்டிய ஒரு செய்தி பொதிந்துள்ளது. நம்முடைய பெண் பிள்ளைகள் கைப்பேசி வழியே தமது நண்பியருடன் மட்டும் தொடர்புகொள்ளக் கூடியவர்களாக இருக்கலாம். எனினும், அந் தத் தொடர்பின்போது, எதிர்பாராத வகையில் அப்பெண்ணின் உறவின ரான ஆண்களின் கைக்கு அக்கைப்பேசி சென்றடைய நேர்ந்தால், விரும் பத் தகாத விளைவுகள் ஏற்பட இடமுண்டு என்பது கருத்திற்கொள்ளப் பட வேண்டும்.

சிலபோது, மேலே நாம் சொன்னதுபோல தம் வீட்டுப் பெண் பிள் ளையைக் கண்காணிக்கும் நோக்கிலோ, அல்லது தம் வீட்டுப் பெண்ணின் தோழியைச் சீண்டி விளையாடும் நோக்கிலோ இன்னொரு வகையில் சொல்வதானால், நல்ல நோக்கத்தின் விளைவாகவோ தீய எண்ணத்தின் விளைவாகவோ ஒரு பெண்பிள்ளைக்கு தனது நண்பியின் கைப்பேசி எண் ணில் இருந்து ஆண்கள் மூலமும் அழைப்புக் கிடைக்க வாய்ப்பு உண்டு என்ற விழிப்புணர்வு நம்முடைய பெண்பிள்ளைகளுக்கு ஊட்டப்பட வேண்டும்.

எனவே, வழியிலோ வகுப்பிலோ கண்டு சில நாள் பழகும் எந்த ஒரு தோழியை நம்பியும் சட்டென்று நம்முடைய கைப்பேசி எண்ணைக் கொடுக்கவே கூடாது என்ற அறிவுறுத்தலை நாம் நமது பிள்ளைகளுக் குக் கண்டிப்பாக வழங்கவேண்டும். எதிர் பாராத வகையில் யாரேனும் ஆண்களிடமிருந்து கைப்பேசியில் அழைப்பு வருமாயின் எக்காரணம் கொண்டும் பேச்சை வளர்க்காமல் உடனே தொடர்பைத் துண்டித்துவிட வேண்டும்.

அப்படி செய்யாத பட்சத்தில் ஏற்படக்கூடிய எதிர்பாராத விளைவு களால் எவ்வளவு தூரம் தன்னுடையதும் குடும்பத்தினதும் மானம் சீர் குலைய வாய்ப்புண்டு என்பன பற்றியெல்லாம் நல்ல முறையில் சினேக பூர்வமாக நம்முடைய பிள்ளைகளுக்கு உரிய வசதிகளைச் செய்து கொடுப் பதோடு நம் கடமை முடிந்துவிடுவதில்லை. மாறாக, அதை அவர்கள் நல்லமுறையில் பயன்படுத்துகின்றார்களா என்பதை அவ்வப்போது உறுதிப்படுத்திக் கொள்வதும் நம்முடைய கடமையாகும்.

16

# வேண்டாமே வில்லன் 'இமேஜ்'!

**ந**ம் பிள்ளைகளுக்கு வசதி வாய்ப்புக்களை வழங்கினாலும் அவற்றை அவர்கள் எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள் என்பது பற்றி பெற்றோராகிய நாம் மிகுந்த கண்காணிப்புடன் இருக்க வேண்டியது அவசியம் என்பது குறித்து கடந்த இதழில் பார்த்தோம். இது வெறுமனே தொலைக்காட்சியுடனோ, தொலைபேசியுடனோ மட்டுப்பட்டதல்ல. மாறாக, இணையம், முகநூல், ட்விட்டர் முதலான நவீன தொலைதொடர்பு சாதனங்கள் அனைத்துக்குமே பொருந்தும்.

**முகநூல் *(Facebook)* கலாசாரமும் நமது குழந்தைகளும்**

இளம் தலைமுறையினரிடையே ஃபேஸ் புக் எனப்படும் முகநூல் கலாச்சாரம் சர்வ சாதாரணமாகப் புழக்கத்தில் இருந்து வருகின்றது. எகிப்திலே மிக அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மாபெரும் புரட்சியில் இந்த முகநூல் மூலமான தகவல் பரிமாற்றம் மிக முக்கிய பங்காற்றியிருந்தது என்பதாகப் பத்திரிகைச் செய்திகள் எடுத்தியம்பின. நீண்ட காலமாக நாட்டில் நிலவி வந்த சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான புரட்சியில் குறிப்பிடத் தக்க அளவு பங்களிப்புச் செய்த இந்த முகநூல் கலாச்சாரம் நம்முடைய இளைய தலைமுறையினரிடையே ஆக்கபூர்வமான சமூகப் பங்களிப்புக்கும் உறுதுணையாக அமையக்கூடிய அதேவேளை எதிர்மறையான பல மோசமான விளைவுகளையும் ஏற்படுத்திவிடக் கூடும் என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை.

நல்ல பல நோக்கங்களோடு எந்த ஒரு தீய நாட்டமும் இன்றி இதனைப் பயன்படுத்தும் போதிலும், கீழ்த்தரமான எண்ணமுடைய ஒரு சில விஷமிகளால் நம்முடைய பிள்ளைகளுடைய குறிப்பாக, பெண் பிள்ளைகளுடைய பயனர் கணக்குகள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படக்கூடிய அபாயம் கூட இதில் உண்டுதான். எனினும், மூட்டைப் பூச்சிக்கு பயந்து வீட்டைக் கொளுத்த முடியாது என்பது போல, ஏற்படக்கூடிய அபாயங்களை மட்டும் கணக்கிட்டு அதில் உள்ள நலன்களை மொத்தமாகப் புறக்கணித்துவிட முடியாது என்பதும் இங்கு முக்கியமானது. ஆனால், போதிய முன்னெச்சரிக்கை இல்லாத பட்சத்தில் வழிதவறிப் போவதற்கு இவற்றில் நிறைய வாய்ப்புக்கள் உள்ளன என்பதையும் நாம் புறக்கணித்துவிட முடியாது.

**முகமறியாத உறவுநிலை**

இணையத்தில் 'சாட்'டிங் செய்வது இப்போதெல்லாம் பேஷனாகவே போய்விட்டதை நாம் அறிவோம். யார் வேண்டுமானாலும் எந்தப் பெயரில் வேண்டுமானாலும் பயனர் கணக்குகளைத் திறந்து யாரோடும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது இலகு. முற்றிலும் உண்மையான விபரங்களை அளிக்க வேண்டும் என்ற தேவை இல்லாததால், சுற்றுச் சூழல், சமூகம் பற்றிய அச்சத்தையெல்லாம் ஒருபுறம் மூட்டைகட்டி வைத்துவிட்டு, மிகச் 'சுதந்திரமாக' தான் விரும்பும் யாரோடும், எதையும் தயக்கமின்றிப் பேசக்கூடிய சூழமைவு திறந்துவிடப்பட்டுள்ளது. இது கத்தி மேல் நடப்பது போல மிகவும் அபாயகரமானது.

அண்மையிலே ஒரு குறுந்திரைப்படம் பார்க்க நேர்ந்தது. ஒரு பெண் ஒரு போலிப் பெயரில் முகமறியாத ஒருவரோடு (Chatting) தொடர் உரையாடல் பண்ணுகின்றாள். எதிர்தரப்பில் இருந்த நபருக்கும் இவளுக்கும் ரசனைகள் பெருமளவு ஒத்துப்போகின்றன. மனதுக்குள் சொல்ல முடியாத ஒரு பரவசம். தொடர் உரையாடல் தொடர்பை விடவே முடியாத ஒரு கட்டத்தை அடைகிறது. இருவரும ஒரு 'இன்டர்நெட் கஃபே'யில் சந்தித்து ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக் கொள்வதாக முடிவெடுக்கின்றனர். பார்த்துப் பார்த்து அலங்கரித்துக் கொண்டு இருவரும் அவரவர் இடத்திலிருந்து கிளம்பிச் செல்கின்றனர். குறித்த இடத்தில் மனம் படபடக்க ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள முற்படுகையில், தலை மேல் இடி விழுந்தது போல் எதிர்பாராத ஓர் அதிர்ச்சி. இருவருமே தமது வாழ்நாளில் இனி ஒருவர் முகத்தை மற்றவர் ஏறிட்டும் பார்க்க முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுவிட்டது. ஆம், அந்த இருவரும் உடன்பிறந்த அண்ணனும் தங்கையும். ஒரே வீட்டின் இருவேறு அறைகளில் இருந்தவாறு போலிப் பெயர்களில் காதல்மொழிகளைப் பேசிக்கொண்ட அந்த இருவரின் நிலை, நேரில் உண்மையை எதிர்கொண்ட போது எப்படி இருந்திருக்கும் என்பதை கற்பனை செய்வதே கடினமாக உள்ளது அல்லவா?

இந்த இருவரும் ஒரே வீட்டில் இருவேறு அறைகளில் இருந்தபடி இவ்வளவு தூரம் போகும் வரை அந்தப் பெற்றோர்கள் என்ன செய்தார்கள்? வயது வந்த ஆண், பெண் பிள்ளைகள் தத்தமது அறைகளில் இருந்த படி படிக்கிறார்களாக்கும்'என்ற அசட்டையால் அல்லது பிள்ளைகள் மீதான அளவுகடந்த நம்பிக்கையால் இருந்திருக்கிறார்கள். இப்படி ஏராளமான பெற்றோர்கள் இருக்கக்கூடும். எல்லாப் பிள்ளைகளுமே பெற்றோரின் நம்பிக்கையைச் சிதைப்பார்கள் என்றில்லை. ஆனால், சந்தர்ப்ப சூழ்நிலையால் வழிதவறி, சறுக்கிவிழக்கூடிய இடங்கள் அறவே இல்லை என்று நம்மால் அறுதியிட்டுக் கூறிவிடவும் முடியாது.

இதற்கு என்ன தீர்வு? ஒருசிலர் பரிந்துரை செய்வது போல வயதுவந்த பெண் பிள்ளைகளை 10 ஆம் வகுப்புக்கு மேல் படிக்கவே அனுப்பக்கூடாது என்பதோ, தொலைபேசி, இணையம் என்பவற்றை முற்றாகப் பயன்படுத்த அனுமதிக்கவே கூடாது என்பதோ சரியானதொரு தீர்வாக அமையுமா? ஒரு போதும் இல்லை. மாறிவரும் காலச் சூழலைப் பெற்றோராகிய நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் இடையில் தலைமுறை இடைவெளி தோன்றுவதற்கும், கண்ணுக்குத் தெரியாத ஒரு பிரிசுவர் எழுவதற்கும் நாம் இடமளித்துவிடக் கூடாது.

மாறாக, நாம் இந்த இணையத்தினால் விளையக்கூடிய எதிர்மறை விளைவுகள் குறித்து நம் பிள்ளைகளிடம் அழகான முறையில் தெளிவுபடுத்த வேண்டும். அதன்போது, "இந்தாளுக்கு, இந்த மனுஷிக்கு இதைப் பற்றி என்ன தெரியும்? சும்மா உளறிக் கொட்டுறாங்க" என்ற ரீதியில் நம்மைப் பற்றி நமது பிள்ளைகள் குறைத்து மதிப்பிடாமல் இருக்க வேண்டுமானால், பெற்றோராகிய நாமும் அதுபற்றிய அறிவைப் பெற்றவர்களாகவும், அதனைப் பயன்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும்.

உதாரணமாக, என் பிள்ளை ஃபேஸ்புக் அக்கவுண்டு வைத்திருந்தால், எனக்கும் ஒரு கணக்கு இருக்க வேண்டும் என்பதோடு, அவனுடைய அல்லது அவளுடைய நட்புப் பட்டியலில் நானும் இணைந்து கொள்ள வேண்டும். இது சிலவேளை உங்களுக்கு 'ட்டு மச்' போலத் தோன்றினாலும், மறுதலையாக இதன் சாதக நிலை பற்றி யோசித்துப் பாருங்கள்.

'நம்முடைய அம்மா அல்லது அப்பா (இல்லையேல் மூத்த சகோதரனோ சகோதரியோகூட) நமக்குச் சரிசமமாக நவீன இணைய உலகில் வலம் வருகிறார்' என்பதை அந்தப் பிள்ளையை உள்ளார்ந்த பெருமிதத்தோடு உணரச் செய்கின்றோம். நட்புப் பட்டியலில் இருந்தபடி எடுத்ததற்கெல்லாம் மூக்கை நுழைத்துக் கொண்டு இருக்காமல், தேவையான இடத்தில் தன்னுடைய இருப்பை அறிவுறுத்தி வருவதன் மூலம் தமது பிள்ளையைக் கண்காணிக்கலாம் என்பதை விட பிள்ளையைப் பொறுப்பு

ணர்வோடு செயற்படத் தூண்டலாம். உதாரணமாக, ஒரு நக்கலான அரசியல் துணுக்கையோ கார்ட்டூனையோ உங்கள் பிள்ளையின் 'wall' ல் காண நேர்ந்தால், தயங்காமல் ஒரு 'like' போட்டுவிடுங்கள்.

பிள்ளைக்கு முன்னால் 'நான்தான் உன் அப்பா, நீ என்முன் கைகட்டி, வாய்பொத்தித்தான் நிற்கணும்' என்பதான 'வில்லன்' இமேஜைக் கட்டியெழுப்ப முனையும் ஒரு தந்தையாக இருக்க ஒருபோதும் முனையாதீர்கள். 'மனதிலும் சிந்தனையிலும் இளமையாய் உள்ளார். என் தந்தை' என்பதை உங்கள் பிள்ளை பெருமிதமாக உணர வழிசெய்யுங்கள். தந்தையாகிய நீங்கள் ஒரு தோழனைப் போலவும், தாயாகிய நீங்கள் ஒரு நல்ல தோழியைப் போலவும் அவர்களின் எல்லா நடவடிக்கைகளிலும் கூடவே இருக்க முனையுங்கள். சிறகு முளைத்தபின் அவர்களைப் பார்த்துக் கொள்ளுங்கள், பயிற்றுவியுங்கள். பெற்றோரைப் பேணுவதை அல்லாஹ் எந்தளவு தூரம் வலியுறுத்திச் சொல்லியுள்ளான் என்பதையிட்டு அவர்களுக்கு அறிவூட்டுங்கள் :

'வாருங்கள்! உங்கள் இறைவன் உங்கள் மீது விலக்கியிருப்பவற்றையும் (ஏவியிருப்பவற்றையும்) நான் ஓதிக் காண்பிக்கிறேன் எப்பொருளையும் அவனுக்கு இணையாக வைக்காதீர்கள் பெற்றோர்களுக்கு நன்மை செய்யுங்கள் வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள் - ஏனெனில் உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கின்றோம் வெளிப்படையான இரகசியமான மானக்கேடான காரியங்களை நீங்கள் நெருங்காதீர்கள் அல்லாஹ் தடுத்துள்ள எந்த ஓர் ஆத்மாவையும் நியாயமானதற்கு அல்லாமல் - கொலை செய்யாதீர்கள் - இவற்றை நீங்கள் உணர்ந்து கொள்வதற்காக (இறைவன்) உங்களுக்கு (இவ்வாறு) போதிக்கின்றான்.

*(அல் குர்ஆன் 6 : 151)*

நாம் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் நலம் செய்ய வேண்டியது) பற்றி வஸிய்யத்துச் செய்(து போதித்)தோம் அவனுடைய தாய் பலஹீனத்தின் மேல் பலஹீனம் கொண்டவளாக (கர்ப்பத்தில்) அவனை சுமந்தாள் இன்னும் அவனுக்குப் பால் குடி மறந்த(லி)ல் இரண்டு வருடங்கள் ஆகின்றன. ஆகவே "நீ எனக்கும் உன் பெற்றோர்க்கும் நன்றி செலுத்துவாயாக என்னிடமே உன்னுடைய மீளுதல் இருக்கிறது."

*(அல் குர்ஆன் 31 : 14)*

மனிதன் தன் பெற்றோருக்கு நன்மை செய்யும்படி உபதேசம் செய்தோம் அவனுடைய தாய், வெகு சிரமத்துடனேயே அவனைச் சுமந்து வெகு சிரமத்துடனேயே அவனைப் பெற்றெடுக்கிறாள். (கர்ப்பத்தில்) அவனைச் சுமப்பதும் அவனுக்குப் பால் குடி மறக்கச் செய்வதும் (மொத்தம்) முப்பதுமாதங்களாகும். அவன் வாலிபமாகி, நாற்பது வயதை அடைந்த

தும்: ''இறைவனே! நீ என் மீதும், என் பெற்றோர் மீதும் புரிந்த நிஃமத்துக்காக, (அருள் கொடைகளுக்காக) நன்றி செலுத்தவும், உன்னுடைய திருப்தியை அடையக் கூடிய ஸாலிஹான நல்ல அமல்களைச் செய்யவும் எனக்கு அருள் பாலிப்பாயாக! (இதில் எனக்கு உதவுவதற்காக) என்னுடைய சந்ததியையும் ஸாலிஹானவர்களாக (நல்லது செய்பவர்களாக) சீர்படுத்தியருள்வாயாக! நிச்சயமாக நான் உன்பக்கமே திரும்புகிறேன். அன்றியும், நான் முஸ்லிம்களில் நின்றுமுள்ளவனாக (உனக்கு முற்றிலும் வழிப்பட்டவனாக) இருக்கின்றேன்'' என்று கூறுவான்.

இந்தக் குர்ஆன் வசனங்களைப் பற்றி அடிக்கடி அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

### எளிய வழிமுறை

மேலும், நாம் கைக்கொள்ள வேண்டிய மற்றும் ஓர் எளிய நடைமுறை என்னவென்றால், தொலைக்காட்சி, இணையத் தொடர்புள்ள கணினி என்பவற்றைத் தனியறைகளில் வைப்பதைத் தவிர்த்து உங்கள் பார்வை இடையிடையே படக்கூடிய வகையில் ஒரு பொது இடத்தில் வையுங்கள். இணையப் பயன்பாடு பற்றிய அறிவு இல்லாதவராக நீங்கள் இருக்கும் பட்சத்தில், இந்த நடைமுறை உங்கள் டென்ஷனை ஓரளவு குறைக்க உதவலாம்.

எந்தச் சாதனமும் தன்னளவில் நன்மை தீமைகளைக் கொண்டதாகவே அமைந்துள்ளது. அதனை எந்த நோக்கத்தில் பயன்படுத்துகின்றோம் என்பதையிட்டே விளைவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. எனினும், நாம் எல்லாக் கட்டத்திலும் மிகுந்த விழிப்புணர்வுடன், எச்சரிக்கையாக இருக்க வேண்டியது மிகக் கட்டாயமானது. வழிதவற வைக்கக்கூடிய ஷைத்தான் தன் படைபலத்தோடு எப்போதுமே தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறான். எனினும், அல்லாஹ்வின் மீதான அன்பையும் அச்ச உணர்வையும் நம் பிள்ளைகளின் மனங்களில் வேரூன்றிவிடச் செய்ய முடியுமானால், அவர்களை வழிநடத்துவது மிக இலகுவானதாகி விடும். அதன் மூலமே இம்மையிலும் மறுமையிலும் பெற்றோராகிய நாம் வெற்றியடைய முடியும்.

## குறிப்புகள்

# குறிப்புகள்

## குறிப்புகள்.

<u>குறிப்புகள்</u>

## குறிப்புகள்

''என் பிள்ளை தவறு செய்யவேமாட்டான்''

'பிள்ளைகள் எல்லோரும் ஒன்றுகூடி விளையாடப் போய்விட்டார்கள். அப்பாடா! சற்று நிம்மதி' என்று ஆசுவாசத்தோடு இருக்கையில் கதவு தட்டப்படுகின்றது. திறந்து பார்த்தால் முகத்தில் ரத்தம் வழிய ஒருகுழந்தையோடு எதிர்வீட்டுக்காரர் நிற்கிறார். கூடவே தன் மகனும் திருதிருவென்று விழித்தபடி நிற்கின்றான்.

''இதோ பாருங்க உங்க பிள்ளை பண்ணின அடாவடித்த னத்தை ரத்தம் வருமளவுக்கு என்னா மாதிரி முரட்டுத்தனமா அடிச்சிருக்கான் பாருங்க!'' அந்தத் தந்தை தவிப்போடும் ஆத்திரத்தோடும் முறையிடுகின்றார்.

உடனே, ''எம்பையனா அடிச்சான்? இருக்காதே! அவன் ரொம்ப அப்பாவிங்க... அதட்டிப் பேசினாலே அழுதுடு வான்... இது வேறு யாரோ செஞ்ச வேலையா இருக்கும். அநியாயமா எம்பையன் தலையில் வந்து விழுந்திருக்கு'' என்று அந்தத் தாய் எந்தவித விசாரணையுமின்றி சப்பைக்கட்டுகின்றார்.

இது போன்று சமூகத்தில் அன்றாடம் நடைபெறும் பிரச்சனைகளை தூரநோக்குடனும், நெறிப்படுத்தும் வகையிலும் அலசுகின்றார்

எழுத்தாளர் லறீனா அப்துல் ஹக்

இலக்கியச்சோலை

26, பேரக்ஸ் சாலை,
பெரியமேடு, சென்னை - 600 003.
போன்: +91 44 - 256 10 969

ILAKKIYACHOLAI CHENNAI

₹ 50/-